சுதேசமித்திரன்

22—8—48

விலை 4 அணா



THE SWADESAMITRAN ILLUSTRATED WEEKLY



தாய்மார்கள் அறிவர்

:: உட்வார்ட்ஸ் க்ரைப் வாட்டரின் ::
மதிப்பு தாய்மார்களுக்குத் தெரியும்.
அது குழந்தைகளை நன்கு பாதுகாக்கும்

WOODWARD'S
GRIPE WATER
keeps baby well

I-WW108-111' W. WOODWARD LTD LONDON. ENGLAND

தந்தி விலாசம் : "கோகுல்" ஸ்தாபிதம் 1909. டெலிபோன் நெ. 57.

டி. எஸ். ஆர். & கோ.,

கும்பகோணம்.

(பிராஞ்சு : மன்னார்குடி)

சந்தனாதித் தைலம் - அரைக்கீரை விதைத் தைலம்

கோகுல் கூந்தல் தைலம்

கூந்தலுக்கு வளர்ச்சியையும், குளிர்ச்சியையும் கொடுப்பதில் நிகரற்றவை.

வத்திகளுள் சிறந்தது "கோகுல்" வத்திகள்

பல காய்கறி ஊறுகாய், கோகுல் வாசனைப் பாக்கு,

முதலிய இதர வாசனை சாமான்களும் கிடைக்கும்.

ஸோல் ஏஜெண்டுகள்:—

புஷ்பவனம் ஸ்டோர்ஸ்,
பைகிராப்ட்ஸ் ரோட்,
திருவல்லிக்கேணி, மதராஸ்.

(கோவை & பாலக்காடு ஏஜெண்டு)

B. Balapattabi Chettiyar,
246, Vysyal St.,
COIMBATORE.

ஸ்ரீ சாயிநாதய நம :

அனுபவத்துடனும், ஆராய்ச்சியுடனும் பலன்கள் சொல்லப்படும்.

ஒரு வருஷ பலன்	ரூ. 5.
விவரமான ஒரு கேள்விக்கு பலன் எழுத	,, 1.
விவாக பொருத்தம்பார்க்க	,, 3.
ஆயுள் பலன் எழுத	ரூ. 100.

THE SOUTH INDIAN ASTROLOGICAL BUREAU,
229, Walltax Road, Madras 3.



குகன் இண்டஸ்ட்ரீஸ்... திருப்பூர். S.I.



எல்லாவிதமான எலக்டிரிக் சாமான்கள் கண்டிரோல்விலைக்கு மொத்தமாகவும், சில்லரையாகவும் கிடைக்கும்.

M. R. **பார்த்தசாரதி ஐயங்கார்,**
28, துளசிங்கப் பெருமாள்
கோவில் தெரு,
திருவல்லிக்கேணி, மதராஸ்.

சிறந்த கூந்தல் உணவு

உங்கள் சரீரத்திற்கு நல்ல உணவு அவசியமானதுபோல் கூந்தலுக்கும் நல்ல உணவு அவசியமாகும். உங்கள் கூந்தலின் வசீகரம் நீங்கள் உபயோகிக்கும் கூந்தல் தைலத்தைப் பொறுத்ததே.



காமினியா ஆயில் (ரெஜிஸ்டர்ட்)

மூளைக்குக் குளிர்ச்சியூட்டி கூந்தல் வளர அவசியமான பலவித சத்துக்கள் சேர்ந்தது. மயிர்க்கால்களுக்கு அவசியமான போஷாக்கு அளிக்கையில் ஆரோக்யமாக வளரவும் உதவுகின்றது. பொடுவன்களைப் போக்கி, கூந்தல் உதிர்வதை நிறுத்தும்.

ஆயிரக்கணக்கானவர்கள் **காமினியா ஆயில்** உபயோகித்துப் புகழ்ந்துள்ளனர்.

இன்றே பரீக்ஷித்து திருப்தி அடையுங்கள்.
எல்லா ஸ்டோர்களிலும் விற்கப்படுவது.
எப்பொழுதும் உபயோகியுங்கள்.

ஆடோ டில்பஹார் (ரெஜிஸ்டர்ட்)

இணையற்ற வாசனையுள்ளது. நீடித்த நறுமணம் உள்ளது. தபால் முதலிய சார்ஜிற்கு 4 அணா ஸ்டாம்பு அனுப்பி சாம்பிள் வாங்கிப் பாருங்கள்.

Sole Agent:—ANGLO INDIAN DRUG & CHEMICAL CO.,
285, Jumma Musjid, P.O. Box 2085, Bombay 2.

மறுக்க முடியாத உண்மை!
நாகரீக வாழ்விற்கு அடிப்படையானது
அழகு மிகுந்த ஆடைகளே!!

தொழில் முறையில் அனுபவம் வாய்ந்தவர்களைக் கொண்டு கண்களைக் கவரும் கலர்களில் வனப்பு மிகுந்த ஜரிகை வேலைப்பாடுகளோடு தயாரிக்கப்பட்ட

பட்டு

புடவைகள் வேஷ்டிகள்

எங்கள் வசம் ஏராளமாயிருக்கின்றன.

C. R. பாலுசாமி அய்யர்

115, நைனியப்ப நாய்க்கன் தெரு, மதராஸ். போன் நெ. 3432.	9, ஜடாமுனி கோவில் தெரு, மதுரை.

THE TRUTH IN YOUR HOROSCOPE

YOUR REAL LIFE TOLD FREE

Would you like to know what the Stars indicate for you, some of your past experiences, your strong and weak points. etc? Here is your chance to test FREE the skill of Pundit Tabore India's most famous Astrologer, who by applying the ancient science to useful purposes has built up an enviable reputation? The accuracy of his predictions and the sound practical advise contained in his Horoscopes on business, speculations, Finance, Love affairs, Friends Enemies, Lotteries, Travels, Changes Litigation Lucky Times, Sickness etc., have astounded educated people the world over. GEORGE MACKEY of New York believes that Tabore must possess some sort of second sight.



To popularise his system Tabore will send you Free your Astral-Interpretation if you forward him your full name (Mr. Mrs. or Miss). address and date of birth (English Calendar) all clearly written by yourself. No money wanted for Astrological Work, Postage etc., but send about 6 Annas (Stamps) for stationery, testimonials and other interesting literature. Tabore believes is fair dealings and all work for which he receives any payment is on the basis of satisfaction guaranteed or full money refunded. You will be amazed at the remarkable accuracy of his statement about you and your affairs. Please write and correspond in ENGLISH only. Write now as this offer may not be made again. No personal interviews, all consulations by mail only. Address: **PUNDIT TABORE (Dept. 337), Upper Forjett Street: Bombay 26.**

காங்கிரஸ் மகாசபை சரித்திரம்

முதல் பாகம் கைவசமில்லை
இரண்டாம் பாகம் ,, ரூ. 2.
மூன்றும் பாகம் ,, ரூ. 2.
தபாற் செலவு அணா 10.
முன்பணம் அனுப்பவேண்டும்.
V. P. P. அனுப்புவது கிடையாது.
மானேஜர்:
"சுதேசமித்திரன்" புத்தகசாலை,
மவுண்ட்ரோட், மதராஸ்.

வாழிய செந்தமிழ்! சுதேசமித்திரன் வாழ்க நற்றமிழர்!
வாரப்பதிப்பு

Vol. XIX] ஸர்வதாரி௵ ஆவணி௴ 7உ ★ 1948-௵ ஆகஸ்டு௴ 22உ No. 30

விலைவாசி உயர்வு

பண்டங்களின் விலைவாசி உயர்வால் மக்கள் படும் அவதியை உடனே தணிக்க வழி காணவேண்டும்; இன்று சர்க்கார் முன்னுள்ள பிரச்னைகளில் இதுவே முக்கியமானது. இந்திய பார்லிமெண்டில் சமீபத்தில் பேசிய பலரும் இதை வற்புறுத்தினர். இது எவ்வளவு அவசரமாகக் கவனிக்க வேண்டிய விஷயம் என்பதை சர்க்கார் முற்றிலும் உணர்ந்தேயிருக்கின்றனர் என்பதற்கு பண்டித நேரு பேசியுள்ள வகையே போதும்.

இவ்விவாதத்துக்குக் காரணமான பிரேரணை கோருவதெல்லாம், வாழ்க்கைக்கு அத்தியாவசியமான பண்டங்களின் விலை குறைய மூன்று மாத காலத்துக்குள் யோசனை சொல்லும்பொருட்டு ஒரு கமிஷனை நியமிக்க வேண்டுமென்பதுதான். தற்போது சர்க்கார் மாறிவிட்டதென்பது உண்மையே எனினும் இப்பிரச்னையைப் பொறுத்தவரை ஒரு கமிஷன் நாடெங்கும் சுற்றுப் பிரயாணம் செய்யவும், சாவதானமாக விசாரணை நடத்தவும் என்ன அவசியம்? இதைப்பற்றி சர்க்கார் இலாகாக்களில் ஏற்கெனவே இல்லாத தகவல்களோ, புள்ளி விவரங்களோ இந்த கமிஷனுக்குக் கிடைத்துவிடப்போவதில்லை. இவ்விவரங்களைக்கொண்டு தேச நலத்துக்கு உகந்த ஒரு பொருளாதார வேலை முறையை வகுத்து அதைத் திறம்பட நிறைவேற்றி வைக்க சர்க்கார் வழி செய்வதே நாட்டின் உடனடியான தேவை.

சர்க்கார் தங்கள் பொருளாதார வேலை முறையைப்பற்றிய விவரங்களை விரைவில் வெளியிடுவரென்று பண்டித நேரு அறிவித்துள்ளார். இதே சமயத்தில், இத் துறையில் முழு கவனம் செலுத்துவதற்கென்று தனியாக ஒரு மந்திரியை நியமிப்பதுபற்றி தாம் ஆலோசித்து வருவதாகவும் அவர் கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது தற்போதைய மந்திரிகளில் ஒவ்வொரு மந்திரியும் தமது இலாகா நிர்வாகத்தைப் பொறுத்த அலுவல்களை மட்டுமே கவனிக்க முடிகிறது. குறிப்பாக, பொருளாதார விஷயத்தில் சர்க்காரின் வேலை முறையை தேவைக்குத் தக்கபடி உருவாக்கி வரவோ, இதற்கு அனுகுணமாக எல்லா இலாகாக்களும் சீராக இயங்கும்படி செய்யவோ தற்போது தக்க ஏற்பாடு எதுவுமில்லை. இக்குறை நீங்க பிரதம மந்திரி வெளியிட்டுள்ள யோசனை ஒருமுகமான அங்கீகாரம் பெறும் என்பதில் சந்தேகமில்லை. ஆரம்பத்தில் புதிய மந்திரிக்கு மற்ற மந்திரிகளுக்கு இருப்பதுபோன்ற நிர்வாக அலுவல்கள் இராது. மற்ற மந்திரிகளில் ஒவ்வொருவருடனும் அந்த இலாகாபற்றிய பிரச்னைகளைக்குறித்துக் கலந்து பேசி, பொதுவாக தேச நலத்துக்கு உகந்தவாறு பொருளாதார வேலை முறையை உருப்படுத்துவதும், அது இனிது ஈடேறக்கூடியவகையில் எல்லா இலாகாக்களும் இயங்கச் செய்வதும் புது மந்திரியின் வேலையாயிருக்கும். இப்புதிய பதவியை ஏற்படுத்துவதன் நோக்கம் வெற்றிகரமாக நிறைவேறுவது, முக்கியமாக அதற்கு நியமிக்கப்படுபவரின் தரத்தையே பொறுத்ததாகும்.

மேற்சொன்ன விவாதத்தில் தற்போதைய விலை உயர்வுக் காரணங்களையும், பரிகாரத்தையும்பற்றி வெளியான கருத்துக்கள் பல. எனினும் இப்பிரச்னையின் சில அடிப்படையான அம்சங்கள் அனைவரும் ஒப்புக்கொள்ளக் கூடியவை. முதலாவதாக நாட்டின் தேவைக்குத் தக்கவாறு, பண்ட உற்பத்தி பெருகவில்லை; அடுத்தபடியாக, உற்பத்தியாகும் பொருள்களும் முறைப்படி விநியோகமாக

—அடுத்த பக்கம்

வில்லை; ஆனால் செலாவணியோ விசேஷமாகப் பெருகி விட்டது. முக்கியமாக இம்மூன்று கோளாறுகளின் விளைவுதான் தற்போதைய விலைவாசித் தூக்கல்.

செலாவணியைப் பொறுத்தவரை, நாட்டின் தேவைக்கு ஒத்தவாறு அதைக்கட்டுப்படுத்த வேண்டிய அவசியத்தை ரிஸர்வ் பாங்கி கவர்னரும் ஒப்புக்கொண்டுள்ளார். செலாவணி அளவை குறைப்பதற்கான வேறு பல காரணங்களுடன், நாட்டில் ஆறில்ஒரு பகுதி ஏற்கெனவே துண்டாகி விட்டதென்பதையும் மறப்பதற்கில்லை. அதிகப்படியாகப் புழங்கும் பணத்தை கூடியவரை உறிஞ்ச சர்க்கார் வேறுமுறைகளையும் கையாளவேண்டும். சேமிப்பை ஊக்கக் கூடிய கவர்ச்சிகரமான திட்டங்கள் இதற்குப் பயன்படக்கூடும் இதில் அவர்கள் ஓரளவு கட்டாய முறையைக் கையாள்வதும் பொருந்தும்.



காந்திஜியின் ஈமக்கிரியைகள் நடந்த ராஜ்காட்டில் சுதந்திரத்தன்று பிரதம மந்திரி பண்டித ஜவாஹரும், மற்ற மந்திரிகளும், தலைவர்களும் மலர்களைத் தூவி, பிரார்த்தனையிலும் கலந்து கொண்டார்கள்.

இதே சமயத்தில் சர்க்கார் பண்ட உற்பத்தி பெருகவும் தீவிர நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டாகவேண்டும். ஆனால் அந்நட வடிக்கைகள் எவ்வளவுதான் தீவிரமானவையாயிருந்தாலும், விலை வாசிகள் விசேஷமாகப் பாதிக்கக்கூடிய வகையில் உற்பத்தி உடனடியாகப் பெருகி விட முடியாது. உற்பத்தி அந்த அளவை அடையும்வரை, மக்களின் தற்போதைய சகிக்க முடியாத அல்லலைத் தவிர்க்க வழியென்ன என்பதே பிரச்னை. சரக்குத் தட்டுநீடிக்கும் வரை அதைக் கூடிய வரை நேர்மையாக வினியோகிப்பதற்கான ஒரு ஏற்பாடும் இருந்தேயாக வேண்டும். இதில் உற்பத்தியாளரின் அல்லதுவர்த்தகர்களின் நேர்மையை நம்பி பயனில்லையென்பது வெட்ட வெளிச்சமாகி விட்டது. கண்டிரோல் நீக்கம் விஷப் பரீட்சையாக முடிந்திருப்பதை இப்போது அனைவரும் ஒப்புக்கொள்ளுகின்றனர். ஜவுளி விஷயத்தில் கண்டிரோல் மறுபடியும் அமுலுக்கு வந்து விட்டது. "தேவையானால் இந்த இனத்திலோ, வேறு பொருள்கள் விஷயத்திலோ, கண்ட்ரோலை இன்னும் கடுமையான முறையில் அமுலுக்குக்கொண்டுவரவும் தயாராயிருக்கிறோம்" என்று பண்டித ஜவாஹர் அறிவித்திருக்கிறார். இதில் தொனிக்கும் உறுதியும், பொருளாதார வேலை முறையில் முழுகவனம் செலுத்த ஒரு மந்திரி ஏற்பட விரும்புவதும், மக்களுக்கு விசேஷ நம்பிக்கையளிப்பது திண்ணம்.

ராதையின் தீர்மானம்

— எஸ். எஸ். ராகவன் —

அந்தி மங்கியதும் நானும் சங்கரனும் தவருமல் காற்று வாங்க பீச்சுக்குப் போவது வழக்கம். அன்று கடற்கரையில் பெண்களின் கூட்டமதிகமாக இருந்தது. சங்கரனுக்கு என்ன தோன்றிற்ரே என்னவோ? "ஆலகால விஷத்தையும்" என்ற பாட்டை வெகு உற்சாகத்துடன் பாடிக்கொண்டிருந்தான்.

சற்று தூரத்தில் உட்கார்ந்திருந்த ஓர் கிழவர் எங்களை நோக்கி வந்தார். அவரைப் பார்த்ததும் அவர் ஏதோ சொல்லப் போகிருர்என்று தீர்மானித்தேன். அந்தக் கிழவரும் அதற்கேற்றவாறே "அப்பா! மறுபடியும் அப்படிப் பாடாதே. பெண்கள் இரக்கத்திற்கு இருப்பிடம். ஆயிரத்தில் ஒருத்தி கல்நெஞ்சுடையவளாக இருக்கலாம்., அதைக் கொண்டு ஒரு கவி அப்படிப் பாடிவிட்டான். இதனுல் எல்லோரையும் அப்படியே எண்ணிவிடக் கூடாது. எங்கள் ராதையின் கதையைக் கேட்டால் இந்த உண்மை விளங்கு''மென்ருர்.

இன்று பொழுது போக்கிற்கு ஓர் கதை கிடைக்கப் போகிறது என்று நாங்கள் அதை கேட்க சித்தமானேம். அந்த கிழவரும் ஒருதடவை இருமிவிட்டுச்சொல்ல ஆரம்பித்தார்.

* * * *

ராதை ஓர் நல்ல பணக்கார குடும்பத்தில் பிறந்தவள். சிறுவயதிலேயே தகப்பனுரை யிழந்துவிட்டாள். பால்யத்தில் மிகவும் கஷ்டப்பட்டவள் அவள் தாய். ஆதலினுல் பெண்ணை கஷ்டமென்பது இன்னதென்று அறியமுடியாதபடி வளர்த்து வருகிருள். ராதையின் கண் கலங்க சகிக்க மாட்டாள். ராதையும் ஒரே பெண். இயற்கையாகவே நல்ல அழகி. ஸ்நானம் செய்துவிட்டு ஆபரணங்களின்றி அவள் வருவதைப்பார்த்தால் ஓர் வனமோகினி என்றே அவளை எண்ணுவார்கள். அத்துடன் செயற்கை அழகையும் சேர்த்துவிட்டால் அவளிடத்திலீடுபடாதவர்களே இருக்கமுடியாது. அதிகமெதற்கு? சுகப்ரம்மத்திற்கும் இவளைக் கண்டதும் கொஞ்சம் தயக்கமேற்படும்.

இப்படி அழகுடன் அந்தஸ்தும் இருந்தால் அகங்காரத்திற்கும் பிடிவாதத்திற்கும் கேட்கவேண்டுமா? தனக்கு நிகர் உலகிலில்லை என்பதே ராதையின் எண்ணம். ஒருவரையும் மதிப்பதில்லை.

புருஷர்களும் நம்மைப்போல கை கால் கண் உள்ளவர்களே. அவர்களைக் கண்டு நாம் ஏன் நாணவேண்டும்? "ஆண்களோடு பெண்களும் சரி நிகர் சமானமாக வாழ்வோமிந்த நாட்டிலே" என்பாள்.

இவ்வளவு அகங்காரத்திற்கும், கர்வத்திற்குமிடையே புத்தி கொஞ்சம் படிப்புக்கும் இடம் கொடுத்தது. மெடிகல் காலேஜில் படித்து வருகிருள். "இதுதான் பெண்களும் ஆண்களுக்கும் சமம் என்று காட்டும் தொழில். சரீரமென்ருல் வியாதிவராமலிராது. அப்பொழுது ஒரு பெண் ஆண்களிடம் கையை காட்டிக் கொண்டு நிற்காமல் ஓர் பெண்ணிடமே சிகிச்சை செய்துக் கொள்ளலாம். ஓர் பெண்ணின் கையைப் பிடித்துப் பார்க்கும் போது ஆண்களின் உள்ளத்தில் என்னென்ன எண்ணங்கள் உதிக்கின்றனவோ? அதற்கெல்லாம் ஏன் ஓர் பெண் இலக்காகவேண்டும்?" இதற்காகவேதான் வைத்தியம் படிப்பதாகவும் சொல்லுவாள்.

கல்லூரியில் ராதைக்கு ஓர் இடத்திலிருக்கப் பிடிக்காது. இங்குமங்கும் போய்க்கொண்டே இருப்பாள். போய்க்கொண்டே இருப்பாள் என்பதைவிடத் துள்ளிக்கொண்டே இருப்பாள் என்று சொன்னுல் பொருந்தும். கார் இருந்தும் அதை அதிகமாக உபயோகிப்பதில்லை. பஸ்ஸில்தான் போய்வருவாள். ஏன்? தன்னழகைக் கண்டு எல்லோரும் பிரமிக்கவேண்டுமாம். இவளழகைப் பற்றி யாராவது பேசுவது இவள் காதில் விழுந்தால் நடையில் ஓர் துள்ளல் அதிகமாகும். ராதை மெம்பராக இல்லாத அஸோஸியேஷனே, கிளப்போ இருக்க முடியாது.

"ஏம்மா! ராதே! இப்படி ஆம்பிள்ளைக்குச் சரியாக அலைஞ்சிண்டு இருக்கியே, யராவது நாலு வார்த்தைச் சொன்னுல் நன்ருக இருக்குமா?" என்று எப்பொழுதாவது அவள் தாயார் கேட்டால் அதற்கு ராதை கொடுக்கும் பதில் இதுதான்.

"அம்மா! பகவான் அழகை ஏன் படைத்திருக்கிருர்? கண்டு களிக்க எனக்கோ அழகை கொடுத்திருக்கிருர். அதை கண்டு நாலு பேர் மகிழட்டுமே! அதை நான் மறைத்து வைத்தால் அழகைப் படைத்தவனின் எண்ணத்திற்கு விரோதமாகாதா? பக்கத்து வீட்டுத் தோட்டத்தில் மலர்ந்திருக்கும் பூவைக் கண்டு ஆனந்தப்படுகிருய். இதனுல் அதற்கு அழகு குறைகிறதா? அல்லது உனக்குத் திருட்டுப்

பட்டம் கட்டுகிறீர்களா? அதை சொந்தக்காரர்களின் உத்திரவின்றி தொட்டால்தானே குற்றம்? அதைப்போல் என் அழகைக் காண்பதால் ஒருவருக்கும் தீங் இல்லை. ஆனால் என்னை ஒருவரும் தொடாதவாறு பார்த்துக்கொள்ளும் தைர்யம் எனக்குண்டு.''

தன்னைப் போன்றவர்களிடத்தில் வெறுப்போ அலட்சியமோ ஏற்பட்டாலும் ஏழைகளிடம் இரங்கும் சுபாவமில்லாமல் போகவில்லை ராதைக்கு.

* * *

ஒரு நாள் ராதா வழக்கம்போல் 8 மணிக்கு எழுந்து, பல் துலக்கிக் காப்பி அருந்தியதும் நியூஸ் பேபரை எடுத்துக்கொண்டு உட்கார்ந்தாள். மேலெழுந்தவாரியாக உலக சமாசாரங்களைப் பார்த்த பிறகு கல்யாணப் பத்தியில் கண்ணை ஓட்டினாள். பார்த்துகொண்டு இருக்கும்போதே முகத்தில் கடுகடுப்பு ஏற்பட்டது. கண்கள் கோபக் கனலைக் கக்கின. சுபாவமாகவே பேசிவந்திருக்கும் முகம் மேலும் சிவந்தது.

கடிகாரத்தைப் பார்த்தாள். மணி 8½ தான் ஆகியிருந்தது. "பேபர் ஆபீஸ் 10 மணிக்கல்லவா திறக்கிறார்கள்? இருக்கட்டும்'' என்று தனக்குத்தானே சொல்லிக்கொண்டு ட்ரஸ் செய்துகொள்ளச் சென்றுவிட்டாள்.

ராதையின் இவ்வளவு கோபத்திற்கும் காரணமான விளம்பரத்தில் "மெடிகல் காலேஜில் படிக்கும் ஓர் அழகிய பெண்ணுக்கு, தகுந்த படிப்பும் அந்தஸ்துமுள்ள மணமகன் தேவை. பெண்ணின் வயது 20. பெயர் ராதா'' என்று கண்டிருந்தது.

கூண்டில் அடைப்பட்ட புலியைப்போல் மணியைப் பார்த்துக்கொண்டே 'போர்டிகோ'வில் சுற்றி சுற்றி வந்து கொண்டிருந்தாள் ராதா. மணியும் 10 அடித்தது. ஓரே தாவாக காரில் ஏறிக்கொண்டு பத்திரிகாலயத்திற்குப் பறந்தாள். நேராக விளம்பரம் சம்பந்தப்பட்ட குமாஸ்தா முன் போய் நின்றாள்.



"இதென்ன பித்தலாட்டம். என்னைத் தவிர மெடிகல் காலேஜில் வேறு ராதை கிடையாது. எனக்குத் தெரியாமலேயே எனக்குக் கல்யாணமா? வெகு ஆச்சர்யமாக இருக்கிறது. இதை யார் கொடுத்தது? அவர்கள்மீது வழக்குத் தொடராமலிருப்பதில்லை'' என்று சீறினாள்.

"அம்மணி! கோபப்படாதீர்கள். விஷயத்தை விசாரித்து சொல்லுகிறேன்'' என்றான் அந்த குமாஸ்தா. அவன் முகத்தில் பரபரப்பே இல்லை. ஏதோ வழக்கமான காரியங்களைச் செய்வதுபோல், அது சம்பந்தப்பட்ட 'பைல்'களை புரட்டிப் பார்த்துக்கொண்டிருந்தான். அது அவன் செய்த தவறே. விளம்பரம் கொடுத்தவர் எழுதிய கடிதத்தில் "அரசி மேரி காலேஜில்'' என்று எழுதியிருந்தது. அதை அச்சுக்காக நகல் செய்து கொடுக்கும்போது "மெடிகல் காலேஜில்'' என்று எழுதிவிட்டான். இவன் நகல் எடுக்கும்போது பக்கத்திலிருந்தவர்கள் ராதாவைப்பற்றியே பேசிக்கொண்டிருந்தனர். இந்த குமாஸ்தாவும் அதைக் கேட்டுக்கொண்டே எழுதியதால் இந்தத் தவறு ஏற்பட்டுவிட்டது.

'அம்மணி! இது என் தவறுதான். மேரி காலேஜ் என்பதற்குப்பதிலாக மெடிகல் காலேஜில் என்று எழுதிவிட்டேன் மன்னிக்கவும்'' என்றான். அவன் குரலில் பணிவு தென்பட்டாலும் வருத்தம் த்வனிக்கவில்லை.

இதைக் கண்டு ராதையின் கோபம் பன்மடங்காயிற்று. ஓர் 'கம்ப்ளேன்ட்' எழுதி மானேஜரிடம் கொடுத்துவிட்டுச் சென்றுவிட்டாள். வீட்டிற்குச் சென்றதும் ஓர் சோபாவில் சாய்ந்தபடி ஆகாயத்தையே பார்த்துக்கொண்டிருந்தாள். மனதில் இன்னும் அவள் கோபம் அடங்கவில்லை.

"ராதே! இவ்வளவு நேரம் எங்கே போயிருந்தாய். உன் மாமா கடிதம் போட்டிருக்கிறான். 'ஓர் பெண் கல்யாணம் செய்துகொள்ளாமலிருக்க முடியாது! ராதைக்கு சீக்கிரமே கல்யாணத்

திற்கு ஏற்பாடு செய். இத்துடன் ஓர் ஜாதகம் அனுப்பியிருக்கிறேன்.'' என்று எழுதியிருக்கிருன். என்று சொல்லிக்கொண்டே ஓர் கடிதத்தை அவள் முன் நீட்டினுள் ராதையின் தாய்.

ராதை அதைப் பிடுங்கி தூர எறிந்துவிட்டு "அம்மா! நான் இந்த வீட்டில் இருப்பது உனக்கு பிடிக்காவிட்டால் சொல். எங்காவது போகிறேன். இன்று யார் முகத்தில் விழித்தேனே ஒரே தொல்லையாக இருக்கு'' என்று கூச்சலிட்டாள்.

ராதையின் இந்த அலட்சியம் அவள் தாயாருக்கு மிகுந்த வேதனையைக் கொடுத்தது. கண்களில் நீர் சொரிய ஆரம்பித்தது. "உன்னை இவ்வளவு நாட்களாக அன்புடன் வளர்த்தது வீட்டை விட்டுத் துரத்துவதற்கு அல்ல'' என்று பல விக்கல்களுக்கிடையே சொன்னுள்.

இதைப் பார்த்ததும் ராதையின் கோபமெல்லாம் பறந்து போயிற்று. வருத்தம் மூண்டது.

"அம்மா! காலையிலிருந்தே மனது சரியாக இல்லை. அதான் ஏதோ சொல்லிவிட்டேன். அம்மா! நீயே யோசித்துப் பாரு. ஆண்களுக்கு அடிமை பட்டிருப்பதுதான் பெண் ஜன்மத்தின் கடமையா? கண்ணில்லாத குருடன் வழி நடக்க முடியாது. அவனுக்கு வழித்துணை அவசியம். கண்ணிருப்பவனுக்கு வழித்துணை எதற்கு? படிக்காத பெண்களுக்கு உலகானுபவம் போதாது. அதற்காக ஓர் துணை கட்டாயம் வேண்டும். படித்த பெண்கள் அறிவால் அபாயமின்றி உலகில் வாழ முடியாதா? ஒருவனைக் கைப்பிடித்து அவன் மடமையால் ஏற்படும் கஷ்டங்களுக்கும் இவள் ஏன் ஆளாகவேண்டும்? நீயே சொல்.

ராதே! உன்னைப்போல் நான் படித்தவளில்லை. சட்டமாகப் பேசத் தெரியாது. இருந்தாலும் நான் சொல்வதைக் கேள். வாழ்க்கை என்பது நீ எண்ணுவதுபோல் கரடுமுரடான பாதை மட்டுமல்ல. மிகவும் பயங்கரமானது. அபாயம் நிறைந்தது. ஆணுகிலும் சரி. பெண்ணுகிலும் சரி. தனித்து வாழ்வது மிகவும் கடினமான காரியம். மேலும் தாய்மைக்கு வேதமும் தலை வணங்குகிறது. பெண்களுக்கு ஏற்படுத்தப்பட்டிருக்கும் கட்டுப்பாடு அவர்களை அடிமைப் படுத்துவதற்கல்ல. அது பெண்மையை எப்படி போற்றி காப்பாற்றுகிருர்கள் என்பதைக் காண்பிக்கிறது. வைரத்தைத் தானே பெட்டியில் வைத்து காப்பாற்றுகிருர்கள்? கண்ணுடியை அப்படிச் செய்கிருர்களா? இதனுல் வைரம் மதிப்பில் குறைகிறதா? என்று நயமாகச் சொன்னுள் அவள் தாய்.

"அம்மா?! அதான் நான் இன்னும் விவாகத்தைப் பற்றி ஓர் முடிவுக்கும் வராமல் இருக்கிறேன். இப்பொழுது என்னை விடு. அதைப்பற்றி பின்னிட்டு யோசித்துக்கொள்ளலாம்'' என்று சொல்லிக்கொண்டே ராதை எழுந்து சென்று விட்டாள்.

அன்று மாலை, காலையிலிருந்து ஏற்பட்ட சம்பவங்கள் மனதை குழப்பிக்கொண்டிருக்க, சமுத்திரத்தையே நோக்கியபடி உட்கார்ந்திருந்தாள் ராதை.

"அம்மணி! நமஸ்காரம் என்னைத் தெரிகிறதா? என்று சொல்லிக்கொண்டே ஒருவன் அவள் முன்வந்து நின்ருன்.

"தெரியாமலென்ன? அந்த குமாஸ்தா தானே!''

"பிறந்தவள் இறப்பது எவ்வளவு உண்மையோ அதைப்போல் தவறு செய்வதையும் தடுக்க முடியாது. அதற்காக தங்களிடம் மன்னிப்பும் கேட்டேன். இருந்தும் மனதில் துளிகூட இரக்கமில்லாமல் மேலே எழுதி விட்டீர்கள். அதன் முடிவு என்ன என்று யோசனை செய்தீர்களா?''

"தப்பெனத் தெரிந்துதான் திமிராகப் பேசினீரோ? நீர் வருத்தப்பட்டதாகவே தெரியவில்லையே''

"அம்மணி! சாண் வயிற்றை வளர்க்க ஊழியம் செய்பவர்கள் எவ்வளவோ வார்த்தைகள் கேட்கவேண்டியிருக்கும். அதற்காக வருத்தமோ, சந்தோஷமோ கொள்ள முடியுமா? விதியென வேலையைச் செய்துக்கொண்டிருக்க வேண்டியதுதான்."

அவனது ஒவ்வொரு வார்த்தையிலும் வருத்தம் தொனித்தது. அவனைப் பார்க்கவும் பரிதாபமாக இருந்தது.

"அதனால் உமக்கு நேர்ந்தது என்ன?" என்றாள் ராதை.

"நேருவது என்ன! தெரிந்த முடிவே. வேலை போய் விட்டது. தள்ளாத பெற்றோர்களை காப்பாற்றவழி தெரியாமல் தத்தளிக்கிறேன்." இப்பொழுது அவன் கண்ணிலிருந்து ஓர் பொட்டுஜலம் சிந்தியதை ராதை கவனிக்காமலில்லை,

"அப்படியா? அது இவ்வளவு விபரீதத்திற்கு வருமென்று நான் எண்ணவில்லை. இதற்கு நான் வருந்துகிறேன். இப்பொழுது என்னால் முடிந்த உதவியைச் செய்கிறேன். மறு வேலை கிடைக்கும் வரை இது உபயோகப்படட்டும்." என்றுசொல்லிக்கொண்டே இரண்டு 10 ரூபாய் நோட்டுகளை எடுத்து அவனிடம் நீட்டினாள். உண்மையிலேயே அவள் தன்னுடைய செய்கையின் விபரீத விளைவை எண்ணி வருந்தினாள்.

"உங்களுடைய பெருந்தன்மைக்கு வந்தனம். இதை நான் ஏற்க முடியாது. என் வேலை போன விஷயம் என் பெற்றோர்களுக்குத் தெரியும். இந்தப்பணம் ஏதென்றால் என்ன சொல்வேன்? நீங்கள் கொடுத்தது என்றால் அவர்கள் வேறுவிதமாக எண்ணுவார்கள். என் நடத்தையிலும் சந்தேகம் ஏற்படும். பரம ஏழைகளானாலும் மானத்துடனும், நேர்மையுடனும் வாழும் எங்கள் குடும்பத்திற்கே, நான் தீங்கு செய்துவிட்டதாக வருந்துவார்கள். இதனால் என் தாய் உயிரை விட்டாலும் விடுவாள். இவ்வளவு நாட்கள் எவ்வளவோ கஷ்டத்துடன் என்னை படிக்கவைத்து முன்னுக்கு கொண்டுவந்ததற்கு இதுதானா நான் அவர்களுக்குச் செய்யும் கைம்மாறு? இல்லாவிட்டால் வேறு ஏதாவது பொய் சொல்ல வேண்டும். இந்த அற்ப காசுக்காகக் கண்கண்ட தெய்வங்களான பெற்றோர்களிடத்தில் பொய் சொல்லமுடியாது. ஏதாவது எனக்கு உதவிசெய்ய எண்ணமிருந்தால் ஓர் வேலை சம்பாதித்துக் கொடுங்கள் அது போதும்" என்றான்.

"சரி நாளை இங்கு வாரும் ஏதாவது செய்ய முடியுமா என்று சொல்லுகிறேன்" என்று கீழே நோக்கியபடியே சொன்னாள். அவளை அறியாமலேயே அவள் கண்கள் நீரைச் சொரிந்தன.

அன்றிரவு அவள் தூங்கவே இல்லை. கண்களை மூடினால் அந்த மனிதனின் ஏழ்மைத்தோற்றமும், பரிதாபகரமான முகமும் முன்வந்து நிற்கும். அவனுடைய வயது வந்த பெற்றோர்கள் பட்டினியால் துடிப்பதுபோலவும், உன்னால்தானே எங்களுக்கு இந்த நிலைமை என்று சொல்லுவது போலவும் இருக்கும். புரண்டு, புரண்டு படுத்தவாறே இரவைக் கழித்தாள். மனதை ஓர் பாரம் அழுத்திக்கொண்டே இருந்தது.

இறுதியில் ஓர் முடிவுக்கு வந்தாள். என்னைக் கண்டால் ஊரில் ஒருவருக்கும் பிடிக்காது. என் அகங்காரம் எல்லோரையும் அணுக முடியாமல் விரட்டி விட்டது. யாரிடம் சென்று வேலைக்கு ஏற்பாடு செய்வேன்? அவரோ நாம் பணம் கொடுத்தாலும், வாங்கிக்கொள்வதில்லை. ஆகையால் அவரையே நான் மணந்துகொண்டாலென்ன? அதுதான் சரி. மனிதர் நல்ல குணமுடையவர். மனிதத்தன்மையுடன் நடந்துகொள்கிறார். பெற்றோர்களிடம்தான் எவ்வளவு அன்பு! இதைப்போல் மனைவியிடமும் இராதா? இவரை மணந்தால் என்னுடைய எண்ணங்களுக்கும் தடையிராது. அம்மாவுக்கும் நிம்மதி ஏற்படும்" என்று தீர்மானித்தாள்.

முடிவில் அதைப்போலவே நடந்தது. அழகான மனைவி கிடைத்ததில் அவனுக்குச் சந்தோஷம். பெரும் சீருடன் மாட்டுப் பெண் வந்ததில் அவனுடைய பெற்றோர்களுக்கும் சந்தோஷமே. தானாகவரும் ஸ்ரீதேவியை காலாலுதைப்பவர்களுமுண்டா?

இப்பொழுது சொல்லுங்கள் பெண்களா இரக்கமற்றவர்கள்? எவ்வளவு விரைப்புடன் இருந்தாள் ராதை. ஓர் பொட்டு கண்ணீரின் முன் அவளால் நிற்கமுடிந்ததா? எவ்வளவு திட சித்தர்களானாலும் பெண்கள் பெண்களே. எதிராளியின் வருத்தத்தைச் சகிக்கமாட்டார்கள்.

"கோவிலில் அம்பிகையையும் கூட வைத்து வணங்குகிறோமே அதன் தத்வமும் இதுதான். நாம் கோரும் பாபமன்னிப்புக்கு ஆண்டவன் எளிதில் இறங்காவிட்டாலும் அம்பிகை சீக்கிரம் மனமிரங்கி நமக்காக பகவானிடம் மன்றாடுவாள்" என்று சொல்லிக்கொண்டே கிழவர் எழுந்து சென்றுவிட்டார்.



மே. த. நைக்குப் பதிலாக சென்னைக் கவர்னராய் நியமிக்கப்பட்டிருக்கும் பவநகர் மகாராஜா.

பாரதமாதாவின் கைவிலங்குகளைத் தெறிக்கச் செய்வதற்காக நாட்டில் நடைபெற்ற இயக்கங்கள் பலவற்றிலும் தமிழ்நாடு முன்னணியில் நின்றிருக்கிறது. உப்பு சத்தியாக்கிரஹம் நடந்த நாளிலேயும் சரி; அதன் பின்னர் துவங்கிய ஸத்யாக்கிரஹப் போராட்டங்களிலும் சரி; தமிழரை வீறுகொண்டு எழச் செய்வதற்கு அமர கவி பாரதியாரின் தேசிய கீதங்கள் உதவியதற்கு இணையாக வேறொன்றையும் சொல்ல முடியாது. எனவே தூங்கிய மக்களைத் துள்ளி எழச் செய்யும் சக்திகொண்ட அவரது பாட்டுக்கள் சுதந்திர இந்தியாவில் வெகுவாக முழங்குவதில் வியப்பேது? சென்ற வாரம் நடைபெற்ற இந்திய சுதந்திர முதலாண்டு பூர்த்தி வைபவத்தில் நாடெங்கும் ஒரே குதூகலம். பாரதியின் கொடி வணக்கப் பாட்டுடன் பல்லாயிரக்கணக்கில் மூவர்ணக்கொடி பட்டொளி வீசிப்பறக்கக் கண்டோம். ஊர்வலங்கள், பொதுக்கூட்டங்கள் முதலிய அனைத்திலும் அவரது பாட்டுக்களைப் பாடிப் பரவசப்பட்டனர்.

சென்னை, திருச்சி அகில இந்திய ரேடியோ நிலையத்தவர்களும் இவ்விஷயத்தில் உற்சாகம் காட்டினர். சுதந்திர விழாவை இவ்விரு நிலையத்தாரும் சிறக்கக் கொண்டாடித் திட்டமிட்டிருந்தார்கள். திட்டமிடுவது சுலபம்; அது நிறைவேறுவது கடினம். கச்சேரிக்கு ஏற்பாடு செய்யலாம்; சிறந்த பக்க வாத்தியங்களைப் போடலாம், இவை அனைத்தும் குறைவின்றி நிறைவேறுவதில்தான் திட்டத்தின் வெற்றியோ, தோல்வியோ அடங்கியிருக்கிறது.

சென்னை நிலையம் சம்பந்தப்பட்ட வரையில் ஸ்ரீமதி டி. கே. பட்டம்மாள் பிற்பகல் 1–மணிக்கு இசைக் கருவிக் கோஷ்டியோடு பாடிய பாரதியாரின் பாடல்கள் ரஸம் குன்றாமல் விளங்கின. மாலை 4-மணியிலிருந்து அரைமணி அவகாசம் பாடிய ஸ்ரீமதி வஸந்த குமாரியின் கச்சேரியில் சில புதிய பாட்டுக்கள் வைபவத்துக்குப் பொருத்தமாய் அமைந்தன. இப்பாட்டுகளுக்கிடையே சில பகுதிகள் ஸங்கீதாம்சத்தைவிட வசன விசேஷமே மேலோங்கி நின்றது.

மாலை 6–20 முதல் 7 வரையில் ஸ்ரீ தண்டபாணி தேசிகர் பாடினார். இரவில் ஸ்ரீமதிகள் சூர்யகுமாரி, வஸந்தகோகிலம், எம். எஸ். சுப்புலட்சுமி முதலியவர்கள் பாடினார்கள்.

சென்னை, திருச்சி ஸ்டேஷன்களில் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்ச்சிகள் அனைத்தும் தினப் பொருத்தத்துக்கு ஒத்தவைதாம். இருப்பினும் ஒன்றிரண்டு நிகழ்ச்சிகள் முக்கியமாக விளங்கின. சென்னை ரேடியோவில் மாலை 3–மணிக்கு நடைபெற்ற கவி அரங்கம் கவர்ச்சிகரமாயிருந்தது. அதே மாதிரியாயிருந்தது இரவில் நடந்த ஹரீந்திரநாத சட்டோபாத்தியாயாவின் நிகழ்ச்சியும்.

திருச்சி நிலையத்து நிகழ்ச்சிகளில் தலைசிறந்து விளங்கியது ஸ்ரீமான் செம்மங்குடி

ஸ்ரீனிவாஸய்யரின் அரைமணிக் கச்சேரி.

ஸ்ரீ செம்மங்குடிக்கும் பாரதியார் பாடல்களுக்கும் தனியான பொருத்தமுண்டு. கவியரசரின் பாட்டுக்களை கர்நாடக ராகங்களில் கற்கண்டாகத் தித்திக்கச் செய்து எங்கும் அவை பிராபல்யமடைவதற்கு அவர் செய்துள்ள தொண்டு மகத்தானது. எனவே அன்றைய அரைமணி நேரத்தில் அவரைப் பாரதியார் பாடல்களைப் பாடச்செய்தது ரொம்ப விசேஷம்.

ஸ்ரீமான் ஸ்ரீனிவாஸய்யருடைய சாரீரம் சகலவிதமான உதவுப்படிகளுடன் சௌக்யமாகச் சஞ்சரித்தது. குடந்தை ராஜமாணிக்கம் பிள்ளை, பழனி ஸ்ரீ சுப்ரமண்யப் பிள்ளை, இன்னும் நிலயத்தைச் சேர்ந்த ஓரிரு இசைக்கருவி விற்பன்னர்கள் இவர்கள் சகிதம் கச்சேரி துவங்கியது.

காம்போஜி ராகத்தின்சாயையை முதலெடுப்பில் லேசாகக் காட்டிவிட்டு ''எந்தையும் தாயும் மகிழ்ந்துகுலாவி'' ('மித்திரன்' வாரப்பதிப்பின் சென்ற இதழில் வெளிவந்துளது) என்ற பாரதி கீதத்தைப் பாடினார்.

அதையடுத்து இரண்டு மூன்று ஆவர்த்தம் ஸ்வரமும் பாடினார். அடுத்தபடியாக பேஹாக் ராகத்தில் உள்ள பாரதியின் ''பாரத ஸமுதாயம் வாழ்கவே'' (இது 'மித்திரன்' சுதந்திரதின மலரில் தோன்றியுளது) பாட்டை ராகபாவமும், சுகபாவமும் மேலோங்கி நிற்கும்வண்ணம் பாடினார். கமாஸ் ராகத்தில் ''ஜயதி ஜயதி'' என்ற முதல் அடியுடன் துவங்கிய பாட்டு தேனினும் இனிமையாக விளங்கியதெனில் மிகையில்லை. இதையடுத்து 2 நிமிஷம்வரை மிக்க உருக்கமாகவும், சுருக்கமாகவும் நாதநாமக்கிரியா ஆலாபனை செய்து பாரதியாரின் ஆனந்தக்களிப்பு ''வந்தே மாதரம் என்போம்'' பாடினார். இப்பாட்டிலும் ஓரிரு ஆவர்த்தம் ஸ்வரம் பாடியது மிக்க உயர்தரம். கவிசிரேஷ்டர் கருத்துக் கேற்றபடி அவர் போட்ட ராகங்களிலேயே மெட்டமைத்து பிரத்யேகக் கவர்ச்சியுடன் பாடபத்ததியை நிர்ணயித்து ஸ்ரீ செம்மங்குடி அன்று பாடியது பாராட்டத் தக்கதாகும். இறுதியில் மணி ரங்கு ராகத்தில் பாடப்பெற்ற சுலோகம் சிகரமாயிருந்தது.

சென்ற இரண்டு வருஷங்களுக்கு முன்னதாகச் சென்னை ஸங்கீத வித்வத் சபையைச் சேர்ந்தவர்கள் தங்கள் வருடாந்த மகாநாட்டு நிகழ்ச்சியின்போது நடத்தும் கச்சேரி ஸீரிஸில் இளம் வித்வான்கள் வரிசையில் சேலம் ஸ்ரீ செல்லம் ஐயங்கார் கச்சேரிக்கு ஏற்பாடு செய்திருந்தார்கள். அந்த சந்தர்ப்பத்தில் குறிப்பிட்ட சிலரைத் தவிர மற்றவர்களுக்கு ஸ்ரீ செல்லம் ஐயங்காரைப் பற்றியோ அல்லது அவர் அடைந்திருந்த பயிற்சியின் சிறப்பைப்பற்றியோ ஒன்றும் விசேஷமாகத் தெரியாது. ஸ்ரீமான் செல்லம் ஐயங்கார் சிறந்த சங்கீத பரம்பரையைச் சேர்ந்தவர். பரம்பரை என்ற பெயரளவோடு நின்று விடாமல் சம்பரதாய சுத்தமாகச் சாதகம் செய்துகொண்டவர். எனவே வித்வத் சபை நிகழ்ச்சியில் இவரது பாட்டு சிறந்து விளங்கியது. இதன் பின்னர் அநேகம் இடங்களில் இவர் கச்சேரி நிகழ்ந்திருக்கிறது. ரேடியோ நிகழ்ச்சிகள் பலவற்றிலும் ஈடுபட்டிருக்கிறார். சென்ற 8-ந் தேதியன்றுகூட இவர் சென்னை ரேடியோவில் மாலை 3 முதல் 4 வரை ஒரு கச்சேரி செய்தார். நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் இவரது கச்சேரியைக் கேட்பவர்கள் அனைவரும் அவரது ஞானம் எவ்வளவு தூரம் விசாலமடைந்திருக்கிறதென்பதை உணர்ந்திருப்பர். ஞானத்தைப்போல அனுபவமும் விசாலமடைந்திருக்கிறது. ஞானபலம், அனுபவம் இரண்டும் ஒன்று சேர்ந்த இவரது பாட்டில் இப்போது பதவிசான தன்மை இடம் பெற்றிருக்கிறது. துடிப்பாக இருக்க வேண்டிய இடத்தில் துவளாமல் சாரீரம் இயங்குகிறது. விரு விருப்புக் குன்றவில்லை. இருப்பினும், என்ன காரணத்தாலோ அவரது கச்சேரி அன்று ஒரே சீராக முன்னேறவில்லை. பூர்வகல்யாணி காம்போஜி ராக ஆலாபனைகள் மிக்க விதரணையோடும், கவர்ச்சிகரமாகவும் விளங்கின. கீர்த்தனைகளை இன்னும் நேர்மையாகப் பாடியிருக்க முடியும்; பாடக்கூடியவர்தான். இருப்பினும் இதனால் கச்சேரியின் தரம் குன்றவில்லை. தமது திறமை எவ்வளவு தூரம் ஓங்கியிருக்கிறதென்பதை அவர் நன்கு நிரூபித்துக் காட்டினார். முன்னுக்கு வரவேண்டிய பாட்டு என்று சகஜமாகச் சில பாடகர்களைபற்றிச் சொல்லுகிறார்கள். இவரது பாட்டு அப்படியல்ல. முன்னுக்கு வந்த பாட்டு என்றே சொல்லலாம்!



ஸ்ரீ செல்லம் ஐயங்கார்.

நாமொன்று நினைக்க—.

ய. மஹாலிங்க சாஸ்திரி எம். ஏ., பி. எல்.

"இனி இன்று காலையில் நடந்த விருத்தாந்தம் தான் பாக்கி. அதையும் புரிந்துகொண்டேன். ராமனாதா! உன் போக்குப் புயல் போக்கானது, எனக்கு ஆச்சரியமாயிருக்கிறது" என்றான் ஸீதாராமன் தன் உறுதியான நோக்கினால் ராமனாதனைத் தரையோடு தரைந்து விடுபவன்போல். அவன் கீழ் உதட்டில் ஒரு வேதனைச் சிறுநகை பிறந்தது.

"வழி தப்பினால் திக்பிரமை கொண்டு சுழலவேண்டியதுதானே? ஒரு குற்றத்தை மறைக்க மற்றொரு குற்றம் அவசியமாகிறது" என்றான் ராமனாதன் திரண்டுவரும் இருளில் திரையின் பின்னேபோல் தன் முக விகாரத்தை மறைத்துக்கொண்டு.

"ஆம்! நேர் நடத்தை ஒன்றுதான் தன் காலாலே செல்லும். நேரல்லாத நடத்தை ஊன்றுகோலில்லாமல் செல்லாது. ஆகையால் நீ எதிர்பாராத விதமாய்ப் பறிகொடுத்த அணிகலங்களை மீட்கக் கள்ள செக் தயாரிக்க நேர்ந்தது."

"வெட்கக்கேடு! ஆனாலும் உண்மை. மேலும் எனக்கேற்பட்ட நெருக்கடியால் உன்னையும் அந்தச்சுழலில் மாட்டி வைக்க நான் துணிந்தேன்."

"பிரவாகத்தில் விழுந்தவன் கரையில் படரும் கொடியைப் பற்றி இழுத்து அறுப்பதுபோல்"—ஸீதாராமன் தன் மனதிற்குள் பேசிக்கொண்டான்.

"பாங்கில் அப்பா கையெழுத்தை ஒருவரும் சந்தேகிக்கவில்லையா, ஸீதாராமா?"

"சந்தேகித்ததாய்த் தெரியவில்லை. நீதான் அப்பாவின் கையெழுத்தைச் சந்தேகத்திற்கு இடமில்லாமல் தீட்டியிருந்தாயே! நானே சந்தேகிக்கவில்லையே! ஆனால் அன்று உன் முகச்சாயை நன்றாயில்லை என்பதைக் கவனித்தேன். நீ பேசியதில் சில தடுமாற்றங்கள் இருந்தன. இருந்தாலும், உன் சமயோசித கற்பனைகளினாலும், உன் துணிகரமான நடிகத்தன்மையினாலும் நான் ஏமாந்தேன். மறுபடியும் பத்மாவுக்கும் உனக்கும் நடுவே சிறிது தலை காட்டிய நயன பாஷை என்னைச் சிந்திக்கச் செய்தது. செக்கைப் பற்றிய குழப்பம் அப்போது தோன்ற வாரம்பித்தது. இப்போது தூண்டில் மீன் கதியானது நன்கு விளங்குகிறது! ராமனாதா! இந்தப் பொத்தலை அடைக்க வேறுஎன்ன சூழ்ச்சி செய்யப்போகிறாய்? பணம் பெற்றுக்கொண்டவன் நானல்லவா? பொறுப்பு உன்னை விட்டகன்றுவிட்டது."

"ஸீதாராமா! நான் அப்படி நினைக்கவில்லை. உன்னை மாட்டிவிட்டு நான் நிம்மதியாய் இருப்பேன் என்று எண்ணாதே."

"நான் எண்ணுவது இருக்கட்டும்! நீ என்ன தைரியத்தின் பேரில் போலிச் செக்கின் மூலம் பாங்கையும் தகப்பனாரையும் மோசம் செய்தாய்? விஷயம் வெளியானால் என்ன ஜவாப்புச் சொல்லப் போகிறாய்?"

"என் தைரியம் நெருக்கடியில் உதித்ததே. நான் அணிந்திருந்தவற்றைக் காணாதபோனால் பல கேள்விகள் எழும். என் புதிய பரிச்சயங்களைப் பிரகடனம் செய்ய முடியாது. ஒளித்துதான் ஆகவேண்டும். ஆகையால் எதைச் செய்தாவது என் அணிகலங்களை மீட்பது ஒன்றே எனக்கு முக்கியமாகிவிட்டது. உடனே ரூபாய் ஆயிரத்தைக் கிளப்புவதற்கு வேறு உபாயம் தென்படவில்லை. மாமாவிடம் பணமிருக்கிறது. செல்லத்திற்கு பேஸரி வாங்குவதற்காகப் பணம் தயாரித்துக் கொண்டு வந்திருக்கிறார். அவரிடமிருந்து மெல்ல ரூபாயைக் கிளப்பலாமென்று ஒரு ஆசை உண்டு. ஆனால் அது உடனே சாத்தியமானதாயில்லை. செக்கைப் பொய்க்கையெழுத்திட்டு அணிகளை மீட்ட பிறகு அப்பா இந்த மோசடியைக் கண்டு பிடிக்கும் முன் மாமாவிடம் ஏதாவது சாமர்த்தியம் பண்ணிப் பணத்தை வாங்கி அப்பா கணக்கில் கட்டிவிடலாமென்று ஒரு யோசனை. பிற்பாடு மாமாவுக்குப் பதில் சொல்லிக்கொள்ள எனக்குத் தைரியம் உண்டு. என்னை அவர் வற்புறுத்தமாட்டார், காட்டிக் கொடுக்கவும்மாட்டார். இல்லையேல் சில தினங்களில் அக்காவும் அத்திம்பேரும் வந்துவிட்டால் நிலைமையைச் சமாளித்துக்கொள்வேன். இந்தத் தைரியம்தான் எனக்கு."

"நல்லது, ராமனாதா! அதற்குள் அமர்க்களமாகி விட்டால் என்ன செய்கிறது? இன்றைக்கே செக் புஸ்தகத்தை அப்பா கவனித்து விட்டால்—?"

"அப்பாவுக்கு அதை கவனிக்க அவகாசம் கிடையாது. அவர் செக் புஸ்தகத்தைத் தேடவேண்டிய அவசியமும் கிடையாது. சிறிய செலவுகளுக்கு ரொக்கப் பெட்டியில் பணம் இருக்கிறது. ஒரு வேளை அவர் அதைத் தேடினாலும் அது அவருக்கு அகப்படாது. நான் இடம் மாற்றி அதை வைத்து விட்டேன். அப்படியே

அவர் அதை எடுத்துப் புதுச் செக் எழுத நேர்ந்தாலும் ஒரு நெம்பர் கிழிக்கப்பட்டிருப்பதைக் கவனிக்கமாட்டார். நான் கிழித்த பகுதியின் இரட்டித்த பகுதியை முன் நெம்பரின் பகுதியுடன் லேசாய் ஒட்டிவிட்டிருக்கிறேன். விரலால் புரட்டும்போது அது தனியே வராது." அப்பாவின் அவசரத்தில் அவ்வளவு ஸூக்ஷ்மமாக அவர் ஆராய்ந்துபார்க்க மாட்டார்."

"இதெல்லாம் நம் பிரார்த்தனையே ஒழிய நமக்குத் தற்காப்பல்ல. பணத்திற்குப் பணம் போட்டாலும் அதை எடுத்ததற்கு ஜவாப்புச் சொல்லித்தான் ஆகவேண்டும். அதற்கு ஏதாவது பொய் சிருஷ்டிக்கத்தான்வேண்டி வரும். காரியம் ரொம்பச் சிக்கலாகி விட்டது. ராமனுதா! நீ மாமாவைக் கேட்டுப் பணம் உடனே வாங்கி நாளைக்கே பாங்கில் கட்டிவிட என்ன ஏற்பாடு செய்திருக்கிறாய்?"

"இனிமேல்தான் ஏற்பாடு செய்ய வேண்டும். வீட்டிற்குப் போய்த்தானே மாமாவைக்காண வேணும்."

"ராமனுதா எனக்கு இந்தச் சிக்கலை நினைத்தால் வயிற்றில் பகீர் என்கிறது. நீ என்னமோ லகுவாய் நினைக்கிறாய்! மாமாவிடம் ஐந்து, பத்து, விவரம் சொல்லாமல்வாங்கலாம். ரூபாய் ஆயிரத்தை உண்மை விபரம் கேட்காமல் அவர் கொடுத்துவிடுவாரென்று எனக்குத் தோன்றவில்லை."

இல்லை.ஸீதாராமா! நான் தான் வேறு வழி சொன்னேனே. பேஸரிக்காகக் கொண்டுவந்த பணம் கையில் முடங்கிக் கிடக்கவேண்டாம். பாங்கில் போட்டு வைத்தால் பேஸரி வாங்கும்போது எடுத்துக் கொள்ளலாம். பணம் கையில் இருந்தால்செலவாகிவிடும். செல்லத்தின் பேரில் பணத்தைப் போட்டுவிடுகிறேன்' என்று கேட்டு வாங்கி விட்டால் பிறகு நம் இஷ்டப்படி செய்துகொள்ளலாம். மாமா சந்தேகப்படமாட்டார். அவருக்கு ஜவாப்புச் சொல்லுவதில் எனக்குச் சிரமம் ஏற்படாது. நிலைமையை நாளைக்கே சமாளித்துவிடலாம். நீ கவலைப்படாதே ஸீதாராமா.!

"மாமா பேஸரிக்காகக்கொண்டுவந்த பணத்தைத் தன் கையில் வைத்துக்கொண்டிருக்கிறாரோ; அல்லது அக்காவிடமாவது அத்திம்பேரிடமாவது கொடுத்து வைத்திருக்கிறாரோ? அதை நீ நிச்சயமாய்த் தெரிந்துகொண்டிருக்கிறாயா?"

"ஒருவரிடமும் கொடுத்திருக்கமாட்டார், நேற்றுத்தானே வந்தார்."

"நாமாக அப்படி நினைத்துக்கொள்ள முடியாது. மேலும் பேஸரிக்குப் பணம் ரொக்கமாய் கொண்டுவந்திருக்கிறார் என்பதாவது உனக்கு நிச்சயமாய்த் தெரியுமா?,'

"கொண்டுவராமலா பேஸரி வாங்கும் பிரஸ்தாபத்தை எடுப்பார்?"

"ராமனுதா! எனக்கு என்னமோ உன் மனோரதங்கள் காலில்லாப்பந்தலாகத் தோன்றுகின்றன."

"அப்படி அவசியம் ஏற்பட்டால் மாமாவிடம் உண்மையைச் சொல்லி அனுதாபத்தை வேண்டுகிறேன். எப்படியும் பெண் கல்யாணத்தைச் சிந்தித்துக்கொண்டிருப்பவர் பணம் சேகரித்து வைத்துக்கொள்ளாமலா இருப்பார்? என் நெருக்கடியை நான் அறிவித்தால் எங்கேயிருந்தாலும் பணத்தை வரவழைத்துக் கொடுத்து விடுவார். ஸீதாராமா! நீ யோசிக்காதே! மாமாவை நான் எப்படி வேண்டுமானாலும் ஆட்டி வைப்பேன். என் தாக்ஷிண்யத்தை அவர் தட்டமுடியாது உனக்குத்தான் தெரியுமே—!"

"ராமனுதா! என்ன குளறுபடி இது? நீ ஆழ்ந்து யோசிக்காமல் பேசுகிறாய்! உன் மர்மமான நெருக்கடியை நீ தெரிவித்துக்கொண்டால் உன்னிடம் அவருக்கு அனுதாபம் எப்படி ஏற்படும்? பகை அல்லவா ஏற்படும்? ஏற்கனவே உன் தாயாரின் நிராகரிப்பினால் கலங்கிய அவர் உன் வர்த்தமானங்களையும் கேட்

டால் உடனே பெண்ணை யும் அழைத்துக்கொண்டு ஊருக்கல்லவா மூட்டைக்கட்டுவார்? மாமா ரோஷக்காரராச்சே!''

ராமனுதனுக்கு முகம் அசடுதட்டிப்போய்விட்டது "அக்காவும் அத்திம்பேரும் வரட்டும். அவசியம் நாலைந்து தினங்களில் வந்துவிடுவார்கள். நிலைமையை எப்படியும் சமாளித்து விடுகிறேன்.'' என்று அவன் சொன்னது ஹீன ஸ்வரத்திலிருந்தது.

"உன் சங்கல்பம் எனக்கு விந்தையாகத்தானிருக்கிறது. யார் வந்தாலும் எவ்வளவு உனக்குச் செல்வாக்கு இருந்தாலும் ரூபாய் ஆயிரத்தை ஒருவரும் விவரம் கேளாமல் உன் கையில் தூக்கிக் கொடுத்துவிடமாட்டார்கள். அதையும் தவிர சில நாட்கள் செல்லுமுன் இங்கே எல்லாம் கலவரமாகி விடப்போகிறது. உஷார்!'' என்ருன் ஸீதாராமன் வெறுப்பும் உறுதியும் தோன்றும் விதமாய்.

"உஷார் என்ரு சொன்னுய்! ஆஹா! என் உஷாவின் ஞாபகம் வருகிறது. என்ன கலவரம் வேண்டுமானுலும் வரட்டும்! என் உஷாவின் காதல் வெற்றியின் நிமித்தமாக எதை தியாகம் செய்ய நேர்ந்தாலும், எவ்வளவு கஷ்ட நஷ்டங்கள் வந்தாலும் அவைகளை யெல்லாம் நான் பாராட்டுவதற்குரியவையாக நினைக்கவே மாட்டேன்''

"சரிதான், ராமனுதா! நாழியாகிறது நீ வீட்டிற்குப் போ! நன்ருய் இருட்டிவிட்டது.

"நீ''

"நான் போட் மெயிலுக்குப் போகிறேன். மணி 7-30 ஆகிறது. ஒரு டாக்ஸியைப் பிடித்துக் கொண்டால் டயத்துக்குப் போய்விடலாம். நீ வீட்டிற்குப்போய் உன்னுல் முடிந்தவரை நிலைமையைச் சமாளித்துக்கொள். என் பரிகாரத்தை நான் தேடிக்கொள்ளுகிறேன்''

"என்ன ஸீதாராமா! நீ ஊருக்கா போகிருய் திடீரென்று! ஒருவரிடமும் சொல்லிக்கொள்ளாமல் நீ எங்கே என்று கேட்டால் நான் என்ன சொல்லுகிறது!''

"ஏதாவது கற்பனை பண்ணிச்சொல். உனக்குத் தெரியாதா?''

"ஸீதாராமா! நீ ஏன் பயந்துகொண்டு ஊருக்குப் போகவேண்டும். நான் உன்னைக் காட்டிக் கொடுப்பேனு?''

"நீ காட்டிக்கொடுக்கமாட்டாய் வாஸ்தவம் தான். எனக்கு உண்மை தெரிந்துவிட்டதால் உன் பெற்ருேர்களைப் பார்த்தால் திருட்டுச் சொத்தை அடகுவாங்கினவன்போல் நான் உண்மையை ஒளிக்க வேண்டும். அது என்னுல் முடியாது. நான் ஒளித்தாலும் பாங்கில் பணம் வாங்க நான்போட்ட கையெழுத்து என்னைச் காட்டிக்கொடுத்து விடும். அப்போது உன்னைக் காட்டிக் கொடுப்பதா? அல்லது குற்றத்தை நான் ஏற்றுக்கொள்வதா என்ற தர்ம சங்கடத்தில் மாட்டிக்கொள்வேன்.''

'நானே என் குற்றத்தை அப்பாவிடம் ஒப்புக்கொண்டு விடுகிறேன்.'

"நடக்காத காரியம். அப்படி ஒப்புக்கொண்டால் ரூபாய்போன விடத்தை வெளியிடவேண்டும். உடனே "என்ன நடக்கும் தெரியுமா?''

"என்ன நடக்கும்''!

"கிரிமினல் கேஸ் தொடரும். இளம் வாலிபனை பலாத்காரம் செய்து மோசடியாய்ப் பணம் பறித்ததாகவும் இன்னும் பல அவதூருன காரணங்களைக்காட்டியும் உன் பத்மாவின் தாத்தாவின் மேல் உன் தகப்பனுர் உடனே கம்ப்ளெயிண்டு கொடுத்து விடுவார். உன் நடத்தை அம்பலமாகி விடும். என்னிடம் ஒப்பித்த கதையை மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் பஹிரங்கமாய் நீ வாக்குமூலம் கொடுக்க நேரிடும். அப்படிச் செய்வது குடும்பத்திற்கு அவமானமென்று உன் உறவினர் விவஹாரத்தை ஒழித்தாலும், வீட்டில் உன்னைக் கட்டுப்பாடு

களில் இறுக்கிப்போட்டு ஒரு சுதந்திரமுமற்றவனாய்ச் செய்ய நினைப்பார்கள்.

நீ உண்மையை இப்போது வெளியிடமுடியாது. உன் அப்பா, மாமா, அக்கா, அத்திம்பேர் உஷா இவ்வளவுபேர்களும் உன் நிமித்தமாய் உனக்கு விரோதிகளாகப் போகிறார்கள்.—ஆனால் உனக்கு உபதேசம் செய்ய நான் முன் வரவில்லை. என்னை மன்னிக்கவும். எனக்கு ரயிலுக்கு நேரமாகிறது. நல்லவேளையாய் ரயில் சார்ஜுக்குக் கையில் பணமிருக்கிறது. அதற்கு ஒருவரையும் யாசகம் கேட்கவேண்டாம். சரி ராமனாதா, எனக்கு விடை கொடு. ஊரிலிருந்து எனக்குத் தந்தி வந்ததாகச் சொல்லிவை. நான் வரட்டுமா ?''—ஸீதாராமன் வீடு விட்டுத் துறவு பூண்பவன் போல் மேலே தரித்திருந்த ஒரே சட்டை ஒரே வேஷ்டியுடன் புறப்பட்டு விட்டான்.

"நிலைமை அவ்வளவு மோசமாகிவிடும் என்று நினைக்காதே, ஸீதாராமா. நான் எப்படியாவது நிலைமையை நேர்ப்படுத்தி உனக்கு எழுதுகிறேன். நீ வந்து சேரலாம் சரி போய்வா!'' என்று ராமனாதன் தடதடத்தக் குரலில் சொன்ன வார்த்தைகள் சிறிது தூரம் போன ஸீதாராமனின் காதில் விழுந்தன. ஸீதாராமன் பதில் சொல்லுவதற்கு அடையாளமாக ஒருமுறை திரும்பிப் பார்த்துவிட்டு விரைவாய் வழி நடந்தான்.

எலெக்டிரிக் கம்பத்தினடியே வெளிச்சம்பட அவன் திருப்பிய முகம் ராமனாதனின் மனதில் அப்படியே பதிந்தது. அந்த முகத்தில் என்ன சோகம்? என்ன உறுதி! என்ன வைராக்கியம்! என்ன சாந்தி! ராமனாதன் காருண்யவள்ளலால் மன்னிக்கப்பட்ட திருடனைப்போல் உள்ளம் சுருங்கிப்போனான்.

நல்லோரைத் தூஷித்த கயவனைப்போல் வெட்கி வெந்து போனான். கடவுளை மறுக்கும் நாஸ்திகனைப்போல் சூன்யத்தால் சூழப்பட்டான். மூலநிதியை வைத்துச் சூதாடிய வெறியனைப் போல் ஆராத்துயருற்றான். நிழல் தரும் தருவை வெட்டிய வழிப் போக்கன்போல் தரிக்கத் தலமில்லாமல் தவித்தான். ஸீதாராமனுடன் தன்னை ஒப்பிட்டுப் பார்த்து மலைக்கும் பாம்பு புற்றிற்கும் உள்ள வித்தியாசத்தைக் கண்டான்.

பலவாறு மோதும் சிந்தனையில் கலங்கி ராமனாதன் வீடுநோக்கி நடந்தான்.

(தொடரும்)



சென்றவாரம் சுதந்திரதினத்தையொட்டி சென்னை, திருவல்லிக்கேணிக் கடற்கரையில் கூடிய மாபெரும் பொதுக்கூட்டத்தில் தமிழ் நாட்டுத் தலைவர் ஸ்ரீ காமராஜ் பேசினார்.

கண்டெடுத்த கடிதம்

— சி. சக்ரவர்த்தி —

மாலை நேரம் சுமார் ஐந்து மணி இருக்கும். அன்று, பம்பாய் நகரமே என்றுமில்லாத ஓர் தனி எழிலுடன் விளங்கியது. காரியாலயத்திலிருந்து வந்தவுடன் வெளியில் சற்று உலாவி வரலாம் எனப் புறப்பட்டேன். கடற்கரைக்குச் சென்றேன்.

கடற்கரையில் பலர் பலவிதமாகப் பொழுது போக்கிக்கொண்டிருந்தனர். அலைகள் வீசும் கடலின் அழகை ரஸித்துக்கொண்டே கால்கள் போன போக்கில் சென்றுகொண்டிருந்தேன். என் கால்கள் சும்மா நடந்து போகவில்லை. மணலைக் கிளறிக்கொண்டே சென்றன. அதிலும் எனக்கோர் ஆனந்தம். அப்பொழுது மணலுக்கிடையில் மறைந்ததும் மறையாததுமாக ஏதோ ஒரு காகித மடிப்பு தென்பட்டது. உடனே அதைக் கையில் எடுத்து பிரித்துப் பார்த்தேன். அது அரைகுறையாகப் படித்த ஒரு பெண்ணின் கையெழுத்தாக இருந்தது. படித்துப் பார்த்தேன். மிகவும் சுவாரஸ்யமான கடிதம். அதை அப்படியே இங்கே எழுதி விடுகிறேன்:

“அன்புள்ள மாமாவுக்கு உன் பிரியமுள்ள அலமு எழுதிக் கொண்டது. நீ ஏன் கல்யாணத்திற்கு வரவில்லை? அம்மாவுக்கும் அப்பாவுக்கும் நீ வரவில்லை என்று ரொம்பவும் வருத்தம். இந்த சமயத்திலே எங்கோ தூரத்திலே போய் உட்கார்ந்துவிட்டானே; ஒரு நாலு நாளைக்காவது லீவு எடுத்துண்டு வந்தா என்ன குறைஞ்சு போயிடும்? ஊம், எல்லாத்துக்கும் மனசு வேணும்: என்று அடிக்கடி சொல்லிக் கொண்டிருக்கிறாள்; கல்யாணம் ஆனி மாசக் கடைசியில் நடந்தது. ஆடிப் பண்டிகை கூட ஆகிவிட்டது. கல்யாணத்துக்குத்தான் வர முடியலை—ஆடிப் பண்டிகைக்காவது வரக்கூடாதா? எல்லாம் ஆன பிறகு மெதுவாக லெட்டர் போட்டிருக்கிறாய். ரொம்ப சந்தோஷம்; கல்யாணத்தைப்பற்றி அப்படியே நடந்தது எல்லாத்தையும் எழுதும்படி கேட்டிருக்கிறாய்; எப்படி என்ன எழுதறதுன்னே எனக்கு ஒன்றுமே புரியவில்லே. ஏதோ எனக்கு எழுதத் தெரிஞ்சவரையிலும் எல்லாத்தையும் எழுதியிருக்கேன்; படித்துக் கொள்.

“நிச்சிதார்த்தத்துக்கு முதல் நாள், எனக்கு என்னமோபோல இருந்தது, வெக்கம்னும் சொல்லிப் பிடல்லே; சந்தோஷம்னும் சொல்லிப்பிடல்லே; என்னமோ



மாதிரி இருந்தது! அப்படித்தான் எனக்கு' சொல்லத் தெரியும். அவரை அன்னிக்கு மாப்பிள்ளை அழைக்கிறப்போ பார்க்கணும்போல ஆசையாயிருந்தது. என்னமோ அவருக்கு எல்லாமே கதர் டிரஸ்ஸாத்தான் தெச்சிருக்குன்னு அப்பா சொன்னார். 'எப்படி அவருக்குப் பொருந்தியிருக்குன்னு நினைச்சேன். காமிரா உள்ளு ஜன்னல் வழியாப் பார்த்தா நன்னாத் தெரியும். தெருவிலே எத்தனை மாப்பிள்ளை அழைக்கிறதைப் பார்த்திருக்கோம்! இந்த மாப்பிள்ளை அழைத்ததுமட்டும் அப்படி வேடிக்கையாய் இல்லையே.........!

கடைசியிலே ராத்திரி ஏமாந்து போயிட்டேன்! மாப்பிள்ளை அழைக்கிறதைப் பார்க்கணும்கற ஆசையிலே முந்தியே காமிரா உள்ளே போய் இருந்துட்டேன். ரொம்ப முந்தியே காமிரா உள்ளே போய் இருந்துட்டேன் போல இருக்கு! ஏன் இன்னா அப்புறம் மாமா வந்து “ஏண்டி ஆம்படையானைப் பார்க்கல்லியா' ன்னு என்னை எழுப்பினப்போதான் நான் இலைக்கட்டு மேலேயே தூங்கிப் போயிட்டேன்னு தெரிஞ்சுது! அப்புறம் கூடத்துக்கு வந்தப்போ பொம்பனாட்டிகளெல்லாம் அம்மாக்கிட்டே வந்து ராஜாவாட்டமா இருக்கான்னு என்னவோ சொல்லிண்டு இருந்தா நான் காதுலே படாதது போல போகாமே என்ன பண்றது............? இந்தத் தோளெடுத்து மாலை மாத்தற வழக்கம் இருக்கே எனக்குக் கட்டோடே பிடிக்கவே இல்லே. இதெல்லாம் நம்ம நாட்டுப்புறத்

துலேதான் ரொம்ப ரொம்ப மலிஞ்சு கிடக்கு. நொகத்தடி வச்சுக் கலியாணம் பண்றதும் எனக்குப் பிடிக்கல்லே. தெலுங்காளுக்கு இந்த அசிங்கமெல்லாம் கிடையாது. இதிலே அவா ரொம்ப கச்சிதம்தான்...... சாயங்காலம் நலங்கு நடந்தது இது என்ன வழக்கம்னு தெரியல்லே. என்ன அர்த்தமோ: இது சாஸ்திரத்துலே சொல்லியிருக்கோ? இல்லாத போனால் பொம்மனாட்டிகள் சாஸ்திரமோ; யாரைப்போய்க் கேக்கறது...என்னமோ இடுப்புக் கடுக்க உட்கார்ந்தேன்.........!

சாப்பிடறப்போ ஒண்ணு நடந்தது. எனக்குப் பிடிக்கவே இல்லை. யாரோ ஒரு நாரைக் கொண்டு வந்து எங்க ரெண்டு பேர் இலைக்கும் நடுவிலே போட்டுட்டா. இதெல்லாம் ரொம்பக் காட்டுமிராண்டித்தனம்! தானாகப் பழுக்காதது தடியாலே அடிச்சா பழுக்கும்? இதுவும் ஒரு விளையாட்டான்னா நான் கேக்கறேன். ஆசைங்கறது தானாக உண்டாகணுமே தவிர, எச்சலைப் போட்டோ நாராலெ ரெண்டுபேர் தலைப்பையும் முடிச்சுப் போட்டோ உண்டாகற சாமானா என்ன? ...அதுவும் எனக்கா சொல்லித்தரணும் — ரெண்டுபேரும் ஒண்ணான்னு!

இந்த எச்சல் போடறது பத்தி ஒண்ணு தோணறது: பொம்மனாட்டி 'எச்சல் இலை நாயின்னு' பெரியவாள் உபதேசம் பண்றாப்பிலே இருக்கு; சீ அம்மா! வழக்கத்தைப் பார்க்கல்லே!

அன்னிக்கு மத்தியானம் நடந்தது எனக்கு சுத்தமாய்ப் பிடிக்கல்லே. இந்த குப்புப் பயல் இருக்கானே, ரொம்பவால். அவர் நல்லவராய் இருக்கத்தொட்டு நல்லவேளையாய்ப் போச்சு. இல்லாட்டப் போனா ரகளை ஆயிடாதா? மாமா சொன்னாப்பலே கொஞ்சம் துடுக்கு மாப்பிள்ளையாய் இருந்து பயில் கண் வேஷ்டிலே எண்ணெய்பட்டிருக்கணும். 'வேஷ்டியை எரிஞ்சுடாமெ அடுப்பிலே போடச் சொல்லுங்கோ, வெந்நீர் காயும்' இன்னு சொன்னா எப்படி இருக்கும் நமக்கெல்லாம்! அந்தக் குப்புப் பயலை அப்போ நறுக்குனு நாலு குட்டு வைக்கணும்னு நினைச்சிண்டேன். அப்பளாம் அடிச்சத்திலே முதுகிலே வேறே எண்ணெய். தேமேனு அவர் தூணுலே தேச்சுக்கிண்டார்!...

நலங்கு நமக்குப் பிடிக்கிறதோ இல்லியோ; இந்தப் பொம்மனாட்டிகள் விடறாளா என்ன! லேசிலே விடறதில்லே, பலாப்பழத்தை ஈ மொய்க்கிறாப்பலே சுத்தி உட்கார்ந்துண்டு, கொட்டம் அடிக்கிறா; பரிகாசம் பண்றா! காதிலே ஓலை போட்டுண்டு இருந்த ஒரு கர்னாடகம் குடுகுடுன்னு ஓடி வந்தது. ஒரு தேங்காயைக் கொண்டு வந்து 'ணக்குன்னு' நடுவிலே வச்சு, "கெட்டியாப் பிடிச்சுக்கோடா' ஆம்படையாள் எடுக்கிற சாமர்த்தியத்தைப் பார்ப்போம்" என்னப்போ எனக்கு எரிச்சலாயிருந்தது. இன்னும் ஒண்ணு இப்பதான் ஞாபகம் வரது, ஏதோ பச்சப் புடி சுத்தறதுன்னு மஞ்சள் சாதத்தைப் பிடிச்சு சுத்துவாளே, அப்பவும் இந்தக் கர்னாடகம் வந்தது. இதுவும் சுத்தித்து. அவர் புன்சிரிப்பா நின்றுகொண்டிருந்தார். 'விசுக்குனு' அவர் வாயிலே வச்சு அந்த மஞ்சள் சாதத்தை திணிச்சுடுத்து இந்தக் கிழம். பாவம்! அவர் 'தூ' இன்னு துப்பி விட்டு கைக் குட்டையாலே வாயைத் துடைச்சிண்டார். அது போகட்டும்னு நலங்கும்போது, "அடீ! வெற்றிலையைக் கெட்டியாய் பிடிச்சுக்கோ, ஆம்படையானுக்கு எடுக்கத்தெரியாதா பார்ப்போம்" என்கறா. எனக்கு இதெல்லாம் பிடிக்காதா, சும்மா வெத்திலையை வச்சுண்டிருந்தேன். அவர் பாட்டுக்கு எடுத்தார். அதுக்கப்புறம் பொம்மனாட்டிகளெல்லாம் "இதென்னடி! இப்பவே பிடிச்சே ஆம்படையான் கிட்டே இப்படிபயப்படறே! சை! கெட்டியாய் பிடிச்சுக்கோ........ மாப்பிள்ளை, பொண்ணை பயமுறுத்தாமே இப்போ எடுங்கோ பார்க்கலாம்" னுமறுபடியும் வெத்திலையை என்கிட்டே குடுத்தா. அவர் சிரித்தார். இவாளெல்லாம் தொந்திரவு பண்றாளேன்னு கெட்டியாய் வச்சுக்கிண்டேன். அவர் மொதல்லே அலட்சியமாய் எடுத்தார். வரல்லே.

பொம்மனாட்டிகளெல்லாம் ஒரே சிரிப்பு. அடுத்தாப்பலே வெடுக்கென்னு எடுத்தார். அவர் நகம் என் விரல்லே எங்கேயோ பட்டு தோல் கொஞ்சம் வழு மூண்டுட்டாப்பலே இருக்கு. எனக்குத் தெரியல்லே......அப்புறம் என்கைக்கு சந்தனம் தடவிவிடறப்போ, அவர் அந்த இடத்தைத் தொட்டுக் காண்பிச்சாப்போல இருந்தது. இதிலே அவருக்கு ரொம்ப வருத்தமா இருந்திருக்கணும்னு நினைக்கிறேன்.........

அப்புறம் மூன்றும் நாள் ராத்திரி பெரிய மனுஷ்யாளுக்கும், வேண்டியவாளுக்கும் அப்பா ஒரு டின்னர் கொடுத்தார். எல்லோரும் சாப்பிட்டுக்கொண்டே என்னபேசிண்டிருந்தா தெரியுமா? முதல்லே ரெண்டு மூணு நிமிஷம் என்னையும் மாப்பிள்ளையும் பத்திப்பேசினா. அப்புறம் நம்ம கல்யாணங்கள் எல்லாத்திலேயும் ஏன் இவ்வளவு செலவு ஆகறது—ஏன் கடன் ஆகறது?—இதெல்லாம் பேசினா சுத்திச் சுத்திப் பேசி வரதக்ஷிணை, சாப்பாட்டுச் செலவுன்னு முடிச்சா. என்க்குப் பயமாக்கூடப் போயிடுத்து. எங்கே கோவிச்சுண்டு பாதி சாப்பாட்டிலே எழுந்திண்டு போயிடப் போறாளேன்னு.

இந்த சம்பந்தி அம்மா, இன்னும் எல்லாரும் சாப்பிட்டுண்டு இருக்கிறபோது யாரோ சம்பந்திப் பாட்டுபாடினா. அப்படியே அவாளை வெட்டிப்பிடணும் போலே இருந்தது எனக்கு. என்ன அஸிங்கம் இது! பொம்மனாட்டிகள் கால் கட்டை விரலைப் பார்த்திண்டு நடக்க வேணும்னு சாஸ்திரத்திலே சொல்லியிருக்காம் அதே சாஸ்திரத்திலே இந்த சம்பந்தி பாட்டுக்கும் இடம் இருக்காம். என்ன சாஸ்திரம்! ரொம்ப வெட்கக்கேடு. "மண்வெட்டிபோலே மாமியார் பல்லு..."ன்னு அந்தப் பாட்டிலே ஒரு அடி வரது. அதைச் சொன்னவுடன்—பாவம்! சம்பந்தியம்மாளுக்கு மூஞ்சி என்னமோ போலெ போயிடுத்து: நிஜமாவே சம்பந்தியம்மாளுக்கும் பல் கொஞ்சம் நீட்டம்தான். ஏதாவது—சண்டை கிண்டை வந்துடப் போறதேன்னு எனக்குப் பய்மாப் போயிடுத்து.

நாலாம் நாள் ஊர்கோலம் நடந்தது. ஊர்கோலத்துக்கு எல்லாரும் வந்திருந்தா வாத்தியக் கச்சேரியெல்லாம் ரொம்ப அமர்க்களம்தான்: என்னமோ—நீயும் அம்மாமியும் வல்லையே இன்னுதான் எல்லாருக்கும் குறை.

அப்புறம் இரண்டுநாள் கழிச்சு அவா ஊரிலே கிரகப்பிரவேசம் நடந்தது. அவாளும் ரொம்பநன்னாத்தான் பண்ணினா.

இப்போதான் பத்து நாளைக்குமுன்னாலே ஆடிப்பண்டிகை வந்தது. அதுக்கு அவரை அழைச்சோம். வேஷ்டியும், வெள்ளி கூஜாவும் கொடுத்தோம். அவரும் இங்கே இரண்டு நாள் தங்கிவிட்டுத்தான் போனார். எனக்கு எழுதத் தெரிஞ்சவரையிலும் எல்லாத்தையும் விவரமா எழுதிப்பிட்டேன். இன்னுமொன்றையும் எழுதிப்பிடறேன்: அவர் அழகு, குணம், எல்லாம் நிறைஞ்சவர் தான். கடைசியிலே அவா ஊருக்குப்போறபோது, "போயிட்டு வரவா அலமு" இன்னு என்னிடம் சொல்லிண்டுப்போனது இன்னும் என் காதிலே ஒலிச்சிண்டே இருக்கு!

மொத்தத்திலே அவர் ரொம்ப நல்லவர்னுதான் எனக்குச் சொல்லத் தெரியும். அப்புறம் நீ எப்போ வருவாய்? அம்மாமியைப் பார்க்கணும்னு ஆசையாயிருக்கு. நீ வரபோது அம்மாமியையும் அழைச்சிண்டு வரவும். மத்தபடி இங்கே எல்லாரும் சௌக்யம். நீ உடனே லெட்டர் எழுதவும்."

வேணும் நமஸ்காரம்,

இப்படிக்கு உன் அன்புள்ள, "அலமு"

அந்தப் பரீக்ஷை

— ஸி. சீனுவாசன் —

"அப்பா! நான் இனிமேல் வெகு நாள் இருக்கமாட்டேன். என் காலம் முடிந்துவிட்டது. அப்பா! அவர் போனபொழுது வைத்துவிட்டுப்போன ஆஸ்தி இவையிரண்டும்தான். இந்த வீடும் என் அருமை பத்மாவும்தான். எனக்கு இருந்திருந்தும் யார் இருக்கிறார்கள். நீ ஒருத்தன்தாண்டாப்பா. உன்னிடம்தான் இந்த இரண்டையும் ஒப்படைத்துவிட்டுப் போகிறேன். நீ காப்பாற்றுவதாக வாக்குக் கொடுத்தால்தான் என் உயிர் சமாதானத்துடன் வெளியேறும்" என்று தழு தழுத்த குரலில் தன் மருமான் ஸ்ரீ தரனின் கையைப் பிடித்துக்கொண்டே வேண்டிக் கொண்டாள் அத்தை மீனு.

"அத்தை! வீணாக அலட்டிக் கொள்ளாதீர்கள். உங்களுக்கு இப்பொழுது என்ன வந்துவிட்டது? டாக்டர்கூட கவலைப்பட வேண்டாம் என்று சொல்லியிருக்கிறாரே, நான் வாக்குக் கொடுப்பதைப்பற்றி இல்லை. பத்மாவை நான் கைவிட்டு விடுவேனா? என் வாழ்நாள் முழுவதும் என் சக்தி கொண்டமட்டும் அவளைக் காப்பாற்றியே தீருவேன். இன்று உங்கள் எதிரில் செய்து கொடுத்த இந்த வாக்குத்தத்தத்தை என்றும் மறவேன்" என்றான் தீனக் குரலில் ஸ்ரீதரன்.

* * * * *

ஸ்ரீதரன் மீனும்பிகை அம்மாளின் சகோதரன் மகாலிங்கய்யர் மகன். மீனும்பிகையும் மகாலிங்கய்யர் இருவர் மாத்திரமே சகோதர சகோதரிகள். இயற்கையாகவே, குழந்தைகளாயிருந்தது முதலே அவர்கள் ஒருவரையொருவர் உயிரெனப் போற்றி நேசித்து வந்தனர். ஸ்ரீதரன் சென்னை ராஜதானிக் கல்லூரியில் பி. ஏ. வகுப்பில் சேர்ந்திருந்தான். மீனும்பிகைக்கு வயிற்றில் ஏதோ கட்டி மாதிரி கிளம்பி, 'ஆப்பரேஷன்' செய்தும் பயனற்றுப் போய்ப் பிராணபத்தில் கொண்டு விட்டு விட்டது. அவள் தன்னுடைய நாட்களை எண்ணிக்கொண்டிருந்தாள். மகாலிங்கய்யர் தம்மாலான வைத்தியமெல்லாம் செய்து பார்த்துத் தன்னுடைய அருமைச் சகோதரியை, விதவையாய் விட்டிருந்த மீனுவை, பிழைக்க வைக்கப்பாடுபட்டார். ஆனால் பயன் ஒன்றும் கிடைக்கவில்லை. மீனு மஹாலிங்கய்யரைக் கூப்பிட்டுத் தன்னுடைய வேண்டுகோளை கூறினாள், தன் மகள் பத்மாவை ஸ்ரீதரனுக்குக் கல்யாணம் செய்துகொள்ளும்படி வேண்டிக் கொண்டாள். ஸ்ரீதரனையே நேரில் அனுப்புவதாகச் சொல்லிவிட்டு மாடிக்குப் போய் மஹாலிங்கமய்யர் அவனை அனுப்பியிருந்தார். அத்தைக்குத் தன் கண்ணெதிரிலேயே கல்யாணத்தைப் பண்ணிப் பார்த்துவிட வேண்டும் என்பது. ஆனால் ஸ்ரீதரனுக்கோ, மஹாலிங்கய்யருக்கோ அவ்வளவு சீக்கிரம் விவாகம் நடத்துவதில் விருப்பமில்லை. இருந்தாலும் சகோதரியின் மனம் நோகாமலிருப்பதற்காக ஒப்புக் கொண்டார். ஸ்ரீதரனையே நேரில் கேட்டு வாக்குத் தத்தம் பெற்றுக் கொண்டாள் அத்தை மீனு.

"அப்பா! என்னால் பேசவே முடியவில்லை..." என்று பேச ஆரம்பித்தவள் முழுவதும் முடிப்பதற்குள் ஒரு தடவை தன் தலையைத் தூக்கிப் பக்கத்தில் நின்றுகொண்டிருந்த பத்மாவையழைத்து ஸ்ரீதரன் கைகளில் பிடித்துக் கொடுத்துவிட்டு கண்ணைக் கடைசியாக மூடினாள் மீனு.

"அத்தை?' என்று அலறத் தொடங்கினான் ஸ்ரீதரன்.

"அம்மா" என்று வீறிட்டாள் பத்மா.

வருடம் ஒன்று ஓடி மறைந்தது. பத்மாவின் வீட்டை வாடகைக்கு விட்டுவிட்டு அவளையும் தன் வீட்டிலேயே அழைத்து வைத்துக்கொண்டார் மகாலிங்கய்யர். பத்மா ஐந்தாவது பாரத்தில் படித்துக்கொண்டிருந்தாள். நல்ல அழகி. தன் தங்கை இறந்ததும், சோகசாகரத்திலாழ்ந்த அவர் கல்யாணப் பேச்சை அடியோடு மறந்துவிட்டார். பிறகு ஒரு நாள் ஞாபகம் வரவே பத்மாவையும், ஸ்ரீதரனையும் ஒன்றாக அழைத்து விசாரித்தார். இருவரும் தங்கள் படிப்பு முடிந்தபிறகு ஆகட்டும் என்று கூறிவிட்டனர். முன்போல சகஜமாக இருவரும் பழகுவது கிடையாது. அவசியமான பொழுதுமாத்திரம் பேசுவார்கள். இவர்களின் போக்கை மாற்ற மஹாலிங்கய்யரும் முயற்சித்தார். அடிக்கடி இருவரையும் தன்னிடம் ஒன்றாய் வரவழைப்பார். எப்படியாவது பேச வைக்க முயற்சிப்பார். ஆனால் தோல்வியே பெறுவார்.

ஸ்ரீதரன் கண்ணுக்கு அழகாயிருப்பான். கவர்ச்சி பொருந்திய முகம். சுருண்டு சுருண்டு அடர்த்தியாய் வளர்ந்திருக்கும் கேசம். அதை அவன் வாரி விட்டிருக்கும் பாணியே அலாதி. புறத்துக்கு எவ்வளவு அழகாயிருப்பானோ அகத்திலும் அவ்வளவு குணவான். இண்டர்மீடியட்டில் ராஜதானியிலேயே முதலாவதாக வருவதற்காகக் கஷ்டப்பட்டுப் படித்தான். ஆனால் என்ன காரணமோ தெரியவில்லை. அவ்வாறு முதலாவதாக வரமுடியாமல் போய்விட்டது. அதற்கும் சேர்த்து பி. ஏ.வ்

எடுத்து விடுவதென்று முடிவு செய்து கொண்டான். அதற்கேற்ப நன்கு படித்துக்கொண்டு வந்தான். பத்மாவிடம் அவனுக்கு அளவற்ற அன்பு. குழந்தை முதலே வளர்ந்து வந்த அன்பு ஒரு தெய்விகப் பாசமாகி அவர்களிருவரையும் இணைத்தது. ஆனால் ஸ்ரீதரன் பத்மாவின் மீதிருந்த அன்பு தன்னுடைய படிப்பைக் கெடுத்துவிட அனுமதிக்கவில்லை.

பத்மாவின் தகப்பனார் நல்ல வேலையிலிருந்தார். நிறையச்சம்பாதித்தார். நன்றாகச் செலவு செய்தார். பத்மாவை மிகவும் செல்வமாக வளர்த்தார். பத்மா மிகுந்த சுறு சுறுப்புக்காரி. அவளுடைய குறு குறுப்பான பார்வையும், வெடுக்கென்ற பேச்சுமே எல்லோரையும் அவளை நேசிக்கச்செய்தன. ஸ்ரீதரனிடத்தில் அவளுக்கு ஒரு விதத்தனி அன்பு. பள்ளிக்கூடத்திலும் நன்றாகவே படித்து வந்தாள்.

பள்ளிக்கூட வருடம் முடிவடையப் போகிறது. வருஷாந்திரப் பரீட்சைகள் நெருங்கிக்கொண்டிருக்கின்றன. பத்மாவும், ஸ்ரீதரனும் போட்டி போட்டுக்கொண்டு படிக்கிறார்கள். பத்மா ஆறாவது பாரத்தில் படித்துக்கொண்டிருந்தாள். இருவருக்கும் பரீட்சை ஒரே சமயத்தில். பரீட்சைக்குப் பத்து நாட்கள் தான் பாக்கி. மஹாலிங்கய்யர் 'டீ' எஸ்டேட்டையே வாங்கினால்தான் கட்டுப்படியாகும் என்று சொல்லிக்கொண்டார்.

பரீட்சையை முன்னிட்டுப் பள்ளிக்கூடங்களிலும், கல்லூரிகளிலும் விடுமுறை விட்டிருந்தனர். பாடங்களை முடித்துவிட்டுக் கடைசிமுறையாக புனர் விமர்சனை செய்வதற்காகப் பத்மாவின் உபாத்தியாயினி தனி வகுப்புக்கள் ஏற்படுத்திச் சொல்லிக்கொடுத்து வந்தாள். பத்மா காலை ஒன்பது மணிக்குப்போனால் மாலை ஐந்தரை மணிக்குத்தான் திரும்புவாள்.

அன்று வியாழக்கிழமை. சாயந்திரம் வரும்பொழுதே பத்மா தலைவலி என்று கொண்டே வந்தாள். இரவு படிக்க முடியவில்லை. மறுநாள் அதிகாலை உடம்பு சௌகர்யமாய் விட்டது. தொடர்ந்தாற் போல் பலநாட்களாக எண்ணெய் தேய்த்துக்கொள்ளாததினால் தான் வந்த தலைவலி என்று காலையில் எண்ணெய் தேய்த்துக் குளித்தாள். குளிர் 'வட வட' என்று நடுக்கிக்கொண்டு ஜுரம் வந்து விட்டது.

சனிக்கிழமை ஒரு முக்கியமான மேலதிகாரியைச் சந்தித்துப் பேசுவதற்காக மஹாலிங்கய்யர் விடியற்காலை வண்டியில் கிளம்பிப் பம்பாய்க்குப் போயிருந்தார். ஸ்ரீதரனும், அவன் தாயாரும் தான் வீட்டிலிருந்தனர். பத்மாவுக்கு ஜுரம் என்றவுடன் ஸ்ரீதரனுக்கு ஒன்றுமே ஓடவில்லை புத்தகத்தை அப்படியே போட்டுவிட்டு பத்மாவின் படுக்கையருகில் வந்து உட்கார்ந்துகொண்டான். ஸ்ரீதரனின் தாயார், நான் பார்த்துக்கொள்வதாய் எவ்வளவு சொல்லியும் கேட்காமல் தானே அவள் பக்கத்தில் அமர்ந்து சிச்ருஷை செய்து வந்தான். ஜுரம் அதிகரித்ததே ஒழிய குறையும் வழியாயில்லை. வெள்ளி, சனி, ஞாயிறு என்று மூன்று நாட்கள் ஓடி மறைந்தன.

அன்று திங்கட்கிழமை. பத்து மணிக்கு இருவருக்கும் பரீக்ஷை. இரண்டு வருடங்களாகப் படித்ததைப் பரிசோதிக்கும் தினம். அல்லும் பகலும் இடைவிடாமற் படித்ததைப் பரீக்ஷிக்கும் நாள். பத்மாவுக்கு ஜுரம் அதிகமாகிப் பிதற்றலில் கொண்டு விட்டுவிட்டது. "பரீக்ஷை, மார்க்கு, பரீக்ஷை, கேள்வி" என்றவாறே பிதற்றிக் கொண்டிருந்தாள். அவள் கண்களிலிருந்து நீர் தாரைதாரையாகப் பெருகிக் கொண்டிருந்தது. அவள் தலைமயிர் அலங்கோலமாகக் கிடந்தது. கண்களின் நீரைத்தும் சேர்த்தாலும் நனைக்கமுடியாதவாறு வரண்டிருந்தன அவள் உதடுகள். அவ்வுதடுகளின் நடுவே முத்துப்போல் வரிசையாக, பால்போன்ற பற்கள் ஓர் வரண்டசிரிப்பை வெளிப்படுத்தின. திடீரென விழித்துக்கொள்ளுவாள். எழுந்து உட்கார முயற்சிப்பாள் முடியாது. ஸ்ரீதரன் தாயாரும் உட்கார விடமாட்டாள். கோரச் சிரிப்புச் சிரிப்பாள். மறுபடியும் நீரைப்



பெருக்குவாள். அவள் முகத்தில் சொல்ல முடியாத ஒரு சோகக் களை ததும்பியிருந்தது. பரிதா பத்தின் சிகரத்தை எட்டியிருந் தது அவள் நிலை.

ஸ்ரீதரன் மனம் ஒரு நிலையி வில்லை. இரண்டு மூன்றுநாட்களாக அவன் பத்மாவுக்குச் சிசுருஷை செய்ததால் அவன் பரீக்ஷைப் பாடம் ஒன்றும் கெட்டுவிடவில்லை ஏனெனில் பரீக்ஷைக்கு இரண்டு நாட்களுக்கு முன்பு படிக்கும் வழக்கம் அவனிடம் கிடையாது. பரீக்ஷையன்று எப்படியிருந்தா லும் பத்மாவைப் பிரிந்து போய்த் தானாகவேண்டும். பரீக்ஷை எழுத வேண்டாம் என்றுகூட நினைத் தான். ஆனால் எல்லோரும் வற் புறுத்தவே பரீக்ஷைக்குப் போனான்.

பரீக்ஷை ஹாலுக்குள் ஸ்ரீதரன் தொங்கப்போட்ட முகத்துடன் ஒருபொழுதும் போனது கிடை யாது. சிரித்த முகத்துடன் தன் னுடைய நண்பர்களின் சந்தேகங் களை நிவர்த்தித்துக்கொண்டே போவான். அவனை இந்நிலையில் கண்ட மாணவர்களுக்கு ஆச்சர்ய மாகவே இருந்தது. 'விருவிரு' என்று கேள்வித்தாள் கொடுத்த வுடனேயே எழுதக் கிளம்பிவிட் டான். ஒன்றரை மணி நேரம்வரை யில் ஏதோமனதில்தோன்றியதை எழுதி வைத்துவிட்டு வந்துவிட் டான். வரும்பொழுதெல்லாம் பத்மாவின் நினைவேதான். வந்த வுடன் பத்மாவுக்குப் பணிவிடை செய்யப் போய்விட்டான். ஸ்ரீத ரன் அந்தப் பரீக்ஷைகளை எவ் வாறு எழுதி இருந்தான் என்பது அவனுக்கே தெரியாது.

மாதம் ஒன்று ஓடி மறைந்தது. 'டைபாய்ட்' ஜுரத்தின் கொடூர மான பிடிகளிலிருந்து விடுவிக்கப் பட்டாள் பத்மா. ஸ்ரீதரனின் தந்தி கிடைத்ததும் பதை பதைத்து ஓடி வந்து வைத்தியம் செய்யக் கிளம்பினார் பத்மாவின் மாமா. பத்மா இப்பொழுதும் பழைய நிலையையடையவில்லை. மிகவும் மெலிந்த சரீரத்துடன் வாடிவதங்கி இருந்தாள். தன் னால் இன்னும் இரண்டு, மூன்று மாதத்தில் சரியாய்ப் போய்விடும் என்று கூறி விட்டார் டாக்டர்.

மே மாதம் இருபத்தைந்து தேதி. பி. ஏ. பரீக்ஷை முடிவுகள் வெளியாகி விட்டன. ஸ்ரீதரன் பரீக்ஷையில் எப்படி எழுதியிருந் தான் என்பது தெரிந்து விட்டது. கஷ்டப்பட்டுப் படித்ததின் பல னென்ன என்பது அறிவிக்கப்பட் டது. ஸ்ரீதரன் தன் உயிரைக் கொடுத்துப் படித்திருந்தான். பரீ க்ஷைக்கெனவே தன் உடல், ஆவி இரண்டையும் விட்டுப் படிக்கச் சித்தமாயிருந்தான். ஆனால் அவன் உடல், பொருள் ஆவி மூன் றுக்கும் சொந்தக்காரி வேறொ ருத்தி அல்லவா? அவள்தான் பத் மா. பரீக்ஷைக்குப் பங்கு கொடுக்க விரும்பாமல் தானே அவனைத் தன் உடைமையாக்கிக் கொண் டாள். ஸ்ரீதரன் எல்லாப் பாடங் களிலும் தேறி விட்டான் ஆங்கி லத்தைத் தவிர என்பதையும் கூடவே வருத்தத்துடன் தெரி விக்கவேண்டியிருக்கிறது.

* * * * * *

அன்று மாலை ஸ்ரீதரனைப்பத்மா தோட்டத்தில் கண்டாள். அவனைப் பார்த்து ஏக்கம் நிறைந்த கண்களுடன் "அத் தான்! என்னால்தானே நீங்கள் பரீக்ஷையில் தேறவில்லை. பாவி நான்......" என்று அழத்தொடங் கினாள். ஸ்ரீதரன் அவள் கண் களைத் துடைத்து "பத்மா! அழாதே, இக்கல்லூரிப் பரீக்ஷை ஒருமுறை வரும், போகும், மறு படியும் வரும். ஆனால் என் அத்தை வைத்த பரீக்ஷை ஒரேமுறைதான் வந்தது. இனிமேல் வராது. அதில் நான் முதல் தரத்தில் வெற்றி பெற்று விட்டேன். அது போதும் எனக்கு. நீ வாழ்வா, சாவா என்று ஊசலாடிக்கொண்டிருந்த பொழுது எனக்கு எப்படிப் பரீக்ஷை எழுத ஓடும்? என் அத்தைக்குக் கொடுத்த வாக்கை நிறைவேற்றி அந்தப்பரீக்ஷையில் வெற்றி பெற்று விட்டேன். இப் பரீக்ஷை போனால் போகட்டும்" என்று ஒரு குட்டிப் பிரசங்கம் செய்து முடித்தான்.

வெகு தூரத்துக்கப்பால் கோவில் மணியும், மாதாகோவில் மணியும் சேர்ந்தாப்போல் அடித்ததைக் கேட்டுச் சிறிது நேரம் மௌனமாயிருந்தனர் இரு வரும்.

"சுதேசமித்திரன்" வாரப்பதிப்பு

சந்தா விவரம்

★

(சந்தாவை முன்னதாகக் கட்டவேண்டும்)

	இந்தியா சிலோன்	வெளிநாடு
1-வருஷம்	13 0	18 0
6-மாதம்	7 0	9 8
3-மாதம்	3 12	5 0

தனிப்பிரதி அணா 4

3 மாதத்திற்கு குறைந்து சந்தா ஒப்புக்கொள்ளப்படமாட்டாது.

மானேஜர்: "சுதேசமித்திரன்" ஆபீஸ், மவுண்ட்ரோட், மதராஸ்.

ஞாபகப்படுத்துகிறோம்

★

"சுதேசமித்திரன்" வாரப் பதிப்பில் வெளிவரும் கதை கள், கட்டுரைகள், கவிதை கள் இவற்றில் வரும் பெயர் கள், சம்பவங்கள் முதலியன எவரையும் குறிப்பிடுவன அல்ல. அவை முற்றிலும் கற்பனையே.

—ஆசிரியர்.

மன்னனை ஆண்ட மங்கை

ஸ்ரீமதி லட்சுமி அம்ம

இதுவரையில்...

[எட்டாம் நூற்றுண்டிலே ராஜஸிம்மபாண்டியன் ஒரு சக்கரவர்த்தியாக ஆட்சி செலுத்தி வந்தான். இவன் கங்கராஜனை வென்று அவனுடைய மகளான பூசுந்தரியை மணந்து பட்ட மகிஷியாக்கிக் கொண்டிருந்தான். தெற்கே சேரனையும் வென்று தயாள குணத்துடன் அவனுக்கு வேண்டிய உதவிகளும் செய்திருந்தான். எனினும், சேரன் பாண்டிய சக்கரவர்த்திக்கு விரோதமாய்க் கலகம் செய்து கன்னியாகுமரியை ஒட்டியிருக்கும் நாஞ்சில் நாட்டைத் தனதாக்கிக் கொண்டான். பாண்டியன் மீண்டும் படையெடுத்துப் போய் சேரனை அடக்கி, அவனிடம் மறுபடியும் தயாளமாக நடந்துகொள்ள வேண்டுமென்று தீர்மானித்து அவனைத் தனக்கு ஒரு சேனுபதியாகவும், மந்திரியாகவும் ஆக்கிக் கொண்டான். சேரனே கெட்ட எண்ணத்தை விட்டுவிடவில்லை. ஒரு பௌத்த பிட்சுவுடன் சூழ்ச்சி செய்து, பாண்டிய வீர மன்னனுக்கு அஹிம்ஸா தர்மப் பிரசாரம் செய்யும் வியாஜத்தால், பாண்டி நாட்டில் குழப்பம் உண்டாக்கவும், பாண்டியனுள்ளத்தைக் கெடுக்கவும் முயல்கிறுன். இந்நிலையில் இராஜ புரோகிதரான செல்வநம்பி ஒரு பண்டித சபை கூட்டி, மன்னனுக்கு ஆறுதல் அளிக்க எத்தனிக்கிருர். இச் சபைக்கு எப்படியாவது ஸ்ரீவில்லிபுத்தூரிலிருந்து விஷ்ணுசித்தரை அழைத்து வரவேண்டுமென்று அரசனும், அரசியும், ஒருவருக்கொருவர் தெரியாத நிலையில் மாறுவேடம் பூண்டு போய்க் காரியசித்தி பெறுகிருர்கள். இது பௌத்த பிட்சு முதலானவர்களுக்குப் பொருமையுண்டாக்குகிறது.]

19

ஊர்வலம்

'இன்று இரவு பிரமாதமாக ஊர்வலம் நடைபெறப் போகிறதாமே; இந்த வெற்றியே ஒரு சூழ்ச்சிதான்!'

'சந்தேகமென்ன? எனக்கு அப்போதே தெரியும். நீங்கள்தான் எதார்த்தமாகவே மதவிவகாரங்கள் நடைபெறுமென்று நம்பினீர்கள்; அந்த விவகாரத்தில் தர்க்க சாமர்த்தியமில்லாத விஷ்ணுசித்தர் தோற்றுப்போவாரென்றும் மனப்பால் குடித்தீர்கள்.'

இப்படிச் சீடனும் குருவும் சம்பாஷித்துக் கொண்டிருந்தனர் ஒரு மடாலயத்திலே. மாலைப் பொழுது. வெளித்தோற்றத்தில் அது பாகவதர்களின் மடாலயம்போலக் காணப்பட்டது. 'விட்டல பவனம்' என்ற பெயர் மடாலயவாசலின் உச்சியில் நீல எழுத்துக்களிலே பொறிக்கப்பெற்றிருந்தது. அந்த முன்பக்கத்திலுள்ள பகுதி பஜனைகூடமாக உபயோகிக்கப்பட்டு வந்தது. பஜனைகூடத்திற்குப் பின்புறத்திலிருந்து தான் ஆனந்ததீர்த்தரும் சீடனை சேரனும் உரையாடிக்கொண்டிருந்தனர்.

உண்மையில் அது பாகவத மடமல்ல; இரகசியமாக ஆனந்ததீர்த்தரைச் சேர்ந்தவர்களும் சதிகாரர்களும் சந்திக்கும் இடம்தான். மாறங்காரி, நரஸிம்மன் முதலானவர்களை ஏமாற்றத்தான் பாகவதமடாலயத்திற்கு உரிய பேரையும் இட்டுப் பஜனைகூடத்தையும் அமைத்திருந்தார்கள். இம்மடாலயத்தில் இருக்கும்போது ஆனந்ததீர்த்தரும் ஒரு பாகவத சன்னியாசி போலவே வேடம் பூண்டிருப்பார், சேரனும் விஷ்ணுபக்தன் போலிருப்பான்.

பஜனைகூடத்திலுள்ள சித்திரங்களெல்லாம் ராமன், கிருஷ்ணன் முதலான அவதார மூர்த்திகளின் சரித்திரக் காட்சிகளாகவும், பல்வேறு திருப்பதிகளில் கோயில் கொண்டிருக்கும் மூர்த்திகளின் தோற்றங்களாகவும் இருந்தன. எனினும் சில சித்திரங்களைக் கூர்ந்து பார்த்தால் 'புத்தரா, பெருமாளா?' என்ற சந்தேகமும் வந்துவிடும். உதாரணமாக, தாமரைமேல் **அருள் வாதன்** என்ெருரு படம். அதைப் 'புத்தர்பிரான்' என்றே ஆனந்த தீர்த்தரும்

சேரலாதனும் வணங்குவதுண்டு. ஒரு படம் பள்ளிக்கொண்ட ரங்கநாதரைச் சித்திரிப்பது: அதையும் ஆனந்ததீர்த்தரும் சேரனும் பள்ளி கொண்ட நிஷ்டையிலிருக்கும் புத்தர் பெருமானாக வணங்கினார்கள். விஷ்ணு பக்தர்களைப் பார்க்கும்போதும், அவர்களோடு உரையாடும் போதும், தாங்களும் பாகவதசமயத்தினரைப் போல் நடிப்பார்கள் குருவும், சிடனும்.

'மகனே, சீடா! கேட்பாயாக; உனக்குக் கிடைத்திருக்கும் இச்சந்தர்ப்பத்தை ஜாக்கிரதையாக உபயோகித்துக் கொள்வாயாக' என்று குரு சொல்வார். தாம் உபதேசிக்கும் ஞானத்தைத்தான் உபயோகித்துக்கொள்ளச் சொல்லுகிறார் என்றுதான் ஸ்தூலமாய்க் கேட்பவர்களுக்குத் தோன்றும். ஆனால் உள்ளர்த்தம் சிடனுக்குப் புரிந்துவிடும்; அரசன், மந்திரி முதலானவர்கள் ஊர்வலத்தில் ஈடுபட்டிருக்கும் இச்சந்தர்ப்பத்தைத் தவறவிடக்கூடாதென்றும் ஜாக்கிரதையாகக் கண்டுபிடிக்கப்படாமல் இருந்துகொண்டே குழப்பம் விளைவிக்க வேண்டுமென்றும் புரிந்துவிடும். யாராவது பாகவதர் அருகே வந்துவிட்டால்,

பச்சைமா மலைபோல் மேனி
பவளவாய் கமலச் செங்கண்

என்றெல்லாம் பள்ளிகொண்ட பெருமாளின் சௌந்தரிய வெள்ளத்தில் மூழ்கிப்போய் விட்டது போல் பேசத் தொடங்கிவிடுவார் ஆனந்த தீர்த்தர்.

குருவும் சீடனும் மேலே சொன்னபடி உரையாடிக்கொண்டிருக்கும்போது ஒரு பாகவதர் அவசர அவசரமாக ஓடிவந்து யானைமேல் விஷ்ணுசித்தர் பவனி வருகிறார். யானையைப் பார்த்தால் "ஏதோ ஒரு நீலக்குன்றுதான் இடம் பெயர்ந்து வருகிறதோ?" என்று தோன்றுகிறது' என்று சொன்னார். அப்படியானால் நாமும் போய்ப்பார்க்கலாமே' என்றான் சீடன். உடனே குரு, 'நீங்கள் முன்னே போங்கள், நாங்களும் விரைவில் வந்து சேருகிறோம்' என்று சொல்லி வந்தவரை அனுப்பிவிட்டார்.

அவர் போனதும் ஆநந்ததீர்த்தர் சீடனை நோக்கி, 'என்ன பக்திப் பைத்தியம்! இத்தகைய பைத்தியம் பாண்டியனுக்கு இப்போது அதிகமாகவே இருக்கிறது. காற்றடித்துப் பொற்கிழியின் ஒரு மூலை விஷ்ணுசித்தர் பக்கமாகத் திரும்பியதும், அந்தச் செல்வப்பொருளே அப்படிப் பரம்பொருளைக்காட்டிய விஷ்ணுசித்தரை நோக்கித் தாழ்ந்து வளைந்து வணங்கியதாக ஒரு கற்பனை செய்து பேசவில்லையா பாண்டியன்?' என்றார்.

'அதுமட்டுமா? பளிச்சென்று எழுந்து ஓடிக் கிழியை அறுத்துக்கொண்டுவந்து விஷ்ணுசித்தரின் அடிகளில் வைத்துச் சித்தஸ்வாதீனம் இழந்தவன்போல் சரணாகதி செய்துவிடவில்லையா?'

'எல்லாம் அஞ்ஞானம், மூடபக்தி! புத்தரையும் தர்மத்தையும் சங்கத்தையும் விட்டு, வேறு சரணாகதியும் உண்டோ? அரசனுக்குத்தான் அப்படியெல்லாம் பைத்தியம் பிடித்துவிட்டதென்றால் வித்துவான்களெல்லாம் ஏன் அந்தப் பைத்தியக்கார நாடகத்திற்கு இடங்கொடுக்க வேண்டும்? புத்தரைப்புறக்கணிப்போருக்குத் தண்டனைதான் இத்தகைய பைத்தியம்!.

இப்படி இவர்கள் பேசிக்கொண்டிருக்கையில், வேறொரு பாகவதர் விரைந்துவந்து, 'அந்த நீலக் குன்றில் அரசர்கூட நீண்டகாலமாக ஏறிப் பவனி வந்ததில்லையாம். அப்பேர்ப்பட்டபட்டத்து யானைமேல் பரமபிரீதியுடன் மகாராஜாவே பெரியவரைத் தூக்கிவைத்தாராம். அந்தப் பவனி வந்துகொண்டிருக்கிறது: வாருங்கள், வந்துபாருங்கள், களி கூருங்கள்' என்று சொல்லிப்போனார்.

பிறகு சீடன் குருவைநோக்கி, 'பாண்டியன் என்னபாடு படுத்திவிட்டான்! தமிழ்வளர்த்த மதுரை இன்று பக்திவளர்க்கும் பாக்கியம் பெற்றதென்றான். அவரைப் பார்த்துப் பார்த்து ஆனந்தக்கண்ணீர் பெருக்கினான். அது என்ன, அப்படிக் கண்ணீர் பெருகிவிடுகிறது நினைத்த மாத்திரத்தில், பக்தர்களுக்கெல்லாம்! அந்த ஜாலம் நமக்கெல்லாம் தெரியவில்லையே!' என்று கேட்டான்.

'அந்த ஆனந்தக் கண்ணீருக்காக எவ்வளவு மிளகு சாப்பிடவேண்டியிருந்ததோ? பாவம்! இஞ்சிதின்ற குரங்கு பட்டபாடு பட்டான்! அவரும் கண்ணை மூடிக்கொண்டு கண்ணீர் பெருகினாரே, கவனிக்கவில்லையா?'

'என்ன பரஸ்பர நாடகம் இது! அரசன் கண்ணைத் திறந்துகொண்டு "பக்திக்கடலே!" என்றான். விஷ்ணுசித்தரோ "கருணைக்கடலே!" என்றார், கண்ணை மூடிக்கொண்டே.'

'விஷ்ணுசித்தர் "கருணைக்கடலே!" என்று விஷ்ணுவைத்தான் புகழ்ந்தார், அரசனைப் புகழவில்லை. அரசனே அவரைத்தான் புகழ்ந்தான், அவருடைய பெருமாளையும் மறந்துவிட்டான்! பைத்தியம், சுத்தப் பைத்தியம்!'

'போகட்டும், அரசனுடைய புகழ்ச்சிக்குத் தான் ஓர் அளவு வேண்டாமா? 'ஆளவந்தவரே!'' என்றான். "ஆளவந்த திருவுருவே!" என்றான்.'

சேரனுடைய வார்த்தையின் பிற்பகுதியைக் கேட்டுக்கொண்டே அங்கு வந்த ஒரு பாகவதர், 'ஆம், அரசர் அவ்வளவு உருக்கமாக விஷ்ணு சித்தரைப் பிரார்த்தித்துக்கொண்டார்.

அடியனேற்(கு) அருள் நல்கி
ஆளவந்த திரு வுருவே!

என்று வாய்குளிர அழைக்கவில்லையா?

அடியனேன் அல்லல் தீர
ஆளவந் தவரே! இன்(று) இக்
கடிநகர் வலமாய் நண்ணிக்
காட்சிதந் தருள்விர்

என்று அகங்குழைந்து பிரார்த்தித்தும், விஷ்ணுசித்தர் மெய்ம்மறந்து தியானத்தில் தானே ஆழ்ந்துவிட்டார்! ஒடுங்கி நின்ற பெரியாரைக் குன்றின் மேலிட்ட தீபம்போல யானைமேல் தூக்கிவைத்து, மங்கள வாத்தியங்களும் அதிர்ந்த பின்புதானே, விஷ்ணுசித்தருக்கு உலக நினைவு வந்தது! அதெல்லாம் இருக்கட்டும்; அதோ வட்ட வெண்குடையில், இருமருங்கும் சாமரைவீச அவர் வந்துகொண்டிருக்கும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாக இருக்கிறது. கண்படைத்தவர்களெல்லாம் பார்க்கவேண்டிய அந்த வைபவத்தைப் பார்க்க வாருங்கள். இந்த மடத்திலிருந்து நடத்தும் வேதாந்த சித்தாந்த விவகாரங்களைத்தான் எப்போதும் நடத்திக்கொள்ளலாமே!' என்று ஒரு பிரசங்கமே செய்துவிட்டார்.

'என்னடா தொல்லையாக இருக்கிறது? என்று குருவும் சீடனும் மெல்ல எழுந்து வெளியே போனார்கள், 'இச்சந்தர்ப்பத்தை ஜாக்கிரதையாக உபயோகித்துக் கொள்வாயாக' என்று குரு சொன்னதுமே சேரன் பாகவதர்களைப் போல்மாறுவேடம் பூண்டிருந்த சிலருக்குச் சைகை காட்டிவிட்டு, மறுபடியும் சம்பாஷணையில் ஈடுபட்டிருந்தான். அவர்களும் தங்கள் காரியத்தைப் பார்க்கப் போய்விட்டார்கள். அதாவது அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொள்ளும் காரியம்தான்.

அவர்களில் சிலர் ஊர்வலம் பெருங்கூட்டத்தில் அங்கங்கேயிருந்துகொணடு குழப்பம் செய்யவேண்டுமென்றும், அதற்கு முன், பவனி வரும் பெரியவருக்கும், குதிரைமேல் செல்லும் அரசனுக்கும் மாலை சூட்டப் போவதுபோல் சிற்சிலர் போகவேண்டுமென்றும் தீர்மானமாகியிருந்தது. மாலை வைத்திருக்கும் கூடையொன்றில் மாலைக்குப் பதில் உடைவாள் இருக்கும். அதைக்கொண்டு விசேஷ நெஞ்சுத்துணிவுள்ள ஒருவன் பாண்டியனைக் கொலை செய்து விடவேண்டுமென்றும், அதற்குள் பரவிவரும் குழப்பத்தில் அவன் தப்பிவிட வேண்டுமென்றும் ஏற்கெனவே முடிவு செய்யப்பட்டிருந்தது. அக்குழப்பத்திலேயே ஆனந்த தீர்த்தரும், சேரனும் மறைந்து பன்றிநாட்டுக்கே போய்விட வேண்டுமென்றும் ஏற்பாடு செய்திருந்தார்கள். இதே சமயத்தில் பன்றிநாட்டுப்பக்கங்களிலும் கலகங்கள் ஆரம்பமாகிவிட்டன என்பது இவர்களுக்குத் தெரியும்.

மடாலயத்திற்கு வெளியே சேரனும் ஆனந்த தீர்த்தரும் வந்ததும், விஷ்ணுசித்தருக்குக் கட்டியம் எடுத்திசைக்கும் ஓசை இவர்கள் காதில் விழுந்தது. பேசிக்கொண்டே ஒரு வீதிக்குச் சென்றார்கள்.

பேரணிந்த வில்லிபுத்தூர் ஆனிதன்னில்

பெருஞ்சோதி தனில்தோன்றும் பெருமானே!

என்றும்,

சீரணிந்த பாண்டியன்தன் நெஞ்சுதன்னில்

துயக்கற,மால் பரத்துவத்தைத் திறமாச்செப்பி

வாரணமேல் மதுரைவலம் வருவோனே!

என்றும்

தூயதென்மறை வல்லவர் வாழ்வே!

என்றும் கட்டியங்கள் முழங்கின.

குரு சீடனை நோக்கி, 'அதோ தூரத்தில் ஏதோ குழப்பமாய்க் காண்கிறதே, அங்கேதான் நம்முடைய பணியாளர்கள்.........' என்று சொல்லிக்கொண்டிருக்கும்போதே, அக்கூட்டம் தாங்கள் இருக்கும் திசையை நோக்கித் திரும்புவதாகத் தோன்றியது. அப்போது சீடன் குருவை நோக்கி 'அங்கே ஏன் குழப்பம் உண்டாகவேண்டும்? அரசன் முதலானவர்கள் வரும் வீதி அதற்கும் அடுத்த வீதியல்லவா?' என்று கவலையோடு கேட்டான்.

குருவும் சிறிது திகைத்து நின்றார். பிறகு சேரனிடம், 'ஒருவேளை பாண்டியன் மட்டும் வேறு வழியாக வந்திருக்கலாம். நரஸிம்மன் பொல்லாத பேர்வழியல்லவா? அவன் ஏதாவது சந்தேகப்பட்டுத் தன் அரசனை இவ்வழியாகத் திருப்பிவிட்டிருக்கலாம்' என்றார். எனினும் பொதுவாக எப்போதும் அமைதியுடனிருக்கும் ஆனந்ததீர்த்தரின் முகத்திலும் கவலை படர்ந்து வருவதுபோலத் தோன்றியது. அவர்கள் இருவரும் அப்படி நின்று பேசிக்கொண்டிருப்பது பாண்டியனுடைய ஒற்றர்களுக்குச் சந்தேகம் விளைவிக்கக்கூடும் என்று எண்ணினார்கள். மறுபடியும் நடந்து பேசிக்கொண்டே போனார்கள்.

சீடன் குருவை நோக்கி, 'நாம் இப்போதே மறந்து பன்றிநாட்டுக்குப் போய்விடவேண்டியதுதான். ஏதோ நமது பணியாளர்களுக்கு ஆபத்து வந்துவிட்டது போலத் தோன்றுகிறது. பன்றிநாட்டில் நடந்துகொண்டிருக்கும் கலகங்களைப் பெருஞ்சண்டையாகத் தூண்டிவிட்டுக் கடைசி முயற்சியாக அங்கேயே ஒரு கை பார்க்கவேண்டும்' என்று சொல்லிக்கொண்டே ஒரு கிளைவீதியில் திரும்பினான்.

'அந்த ஆலோசனை சரிதான். நம்மவர்கள் அகப்பட்டுக்கொண்டார்கள் என்பதில் சந்தேகமில்லை. அதோ திரும்பிப்பார் அக்கூட்டத்தை. முன்னே குதிரைமேல் போகிறவன் நரஸிம்மன்தான். சிலரைக் கட்டிக்கொண்டு போகிறார்களே கூட்டத்தின் நடுவில், அவர்கள் நம்மவர்களே. விரைவில் தப்பிவிடு. ஊரின் எல்லையில்தான் உன்னுடைய குதிரை வீரர்கள் மறைந்திருக்கிறார்களே; அவர்களுடன் நீ வெகு வேகமாய்ப் போய்விடு' என்றார் குருநாதர்.

சீடன் பெருங்கவலையுடன் குருவையும் கையைப்பிடித்து ஒரு பெரிய வீட்டின் திண்ணை மறைவாக இழுத்துக்கொண்டான். அவர்கள் நின்றுகொண்டிருந்த இடத்திற்கு அருகாகவே ஊர்வலப் பகுதியொன்றும் வந்துவிட்டது.

வேதப்பயன் கொள்ளவல்ல

விஷ்ணுசித்தர் வந்தார்

என்றும்,

வில்லிபுத்தூர் வேதக்கோன்

வந்தார்

என்றும், விருதுகளோடு, சின்னமும் சங்கும் கம்பீரமாக ஊதப்பட்டன.

திண்ணை மறைவில் போய் நின்றுகொண்டதும் சீடன் குருவைநோக்கி, 'என்னை மட்டும் விரைந்து தப்பியோடச் சொல்லுகிறீர்களே, வயது முதிர்ந்த உங்களை இங்கே விட்டுவிட்டு நான் ஓடிப்போவது சரியாக இருக்குமா?' என்று கேட்டான்.

ஆனந்த தீர்த்தர் சிரித்துக்கொண்டே, 'இந்த ஆனந்தத்திற்கு என்றும் குறைவு வரப்போவதில்லை. வெளியிலிருந்து ஆபத்து ஒன்றும் அணுகவே முடியாது?' என்றார்.

சீடன் தன் பயத்தை அடக்கிக்கொண்டே 'நரஸிம்மன் பொல்லாதவன் என்று தாங்களே ஒப்புக்கொள்கிறீர்கள். அகப்பட்டுக்கொண்டவர்கள் நம்மையே சதியாலோசனையின் மூலகாரணமாகக் காட்டிவிட்டால், நரஸிம்மன் தங்களையும் கட்டிக்கொண்டுபோக கூசுவானா?' என்றான்.

'இந்தக் கட்டையைக் கட்டும் பாசம் இதற்குள்ளேதான் இருக்கிறது. வெளியில் இல்லை! எந்த நரசிம்மனாலும் இயலாத காரியம் அது!'

'தாங்கள் பின் தங்குவதன் நோக்கம்தான் என்ன? பரிபாஷையை விட்டுப்பேசவேணும்.

'தெரியவேண்டிய சிற்சில விஷயங்களைத் தெரிந்துகொண்டு நான் பன்றிநாடு வந்து சேர்வதுதான் நல்லது. இப்பாண்டி ராஜதானியில்

உன்னைக் காட்டிலும் எனக்குச் செல்வாக்கு அதிகம். ஆகவே நான் தெரியக்கூடிய விஷயங்களைத் தெரிந்துகொண்டு தப்பி வருவது எளிது.

'தங்களை இங்கே தெரிந்தவர்கள் அதிகம் என்று தானே தாங்கள் தப்புவது மிகவும் அவசியமென்று கருதுகிறேன். ஏதாவது தெரிய வேண்டுமென்றால், இவ்வூருடன் அவ்வளவு பழகியிராத நான் இருந்து தெரிந்து வருகிறேன்'

'அது முடியவே முடியாது. அதுதான் ஆபத்து!'

இப்படி இவர்கள் மெல்லிய குரலில் பேசிக் கொண்டிருக்கும்போதே, அக்கிளை வீதியிலும்,

ஹரே ராம ஹரே ராம

ராம ராம ஹரே ஹரே

என்று கோஷித்துக்கொண்டு ஒரு கூட்டம் வந்துவிட்டது. அதற்கு எதிர்ப்புறமாக வேறொரு கூட்டம்,

ஹரேக்ருஷ்ண ஹரேக்ருஷ்ண

க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே

என்று கோஷித்தவண்ணம் வந்துகொண்டிருந்தது.

இதற்குள் சேரலாதனும், ஆனந்ததீர்த்தரும் அந்தப் பெரிய வீட்டையடுத்திருந்த தோட்டத்திற்குள் போய் பேசிக் கொண்டிருந்தனர். அங்கும்

விஷ்ணுசித்தர் வாழ்க

ராஜசிம்மர் வாழ்க

என்றும்,

பாண்டியன் கொண்டாடப்

பட்டர்பிரான் வந்தார்

என்றும், கோஷங்கள் காதில் வந்து விழுந்தன.

அந்த வீதியிலும் வீடுவாசல்களெல்லாம் மக்கள் நிறைந்து விட்டனர். மேலும் மேலும் கூட்டங்கூட்டமாக மக்கள் வந்து மொய்த்த வண்ணமாய் இருந்தன.

சிலர் தோட்டங்களிலுள்ள மரங்களிலும் ஏறி ஊர்வலத்தைப் பார்க்க முயன்றனர். இவர்களில் சிலர், 'அதோ பாரடா அந்தத் துரோகிப் பயல்களைக் கட்டிச் சிறைச்சாலைக்குக் கொண்டு போவதை!' என்று கூச்சலிட்டனர்.

கரைபுரண்ட கடல்போல வந்த பெருங் கூட்டத்தில் குருவும், சீடனும் மறைந்து போயினர்.

(தொடரும்)





லண்டன் பெக்ஹாம் சுகாதார ஸெண்டருக்குப் பிரிட்டிஷ் ராணி சமீபத்தில் விஜயம் செய்திருந்தார். அவர் இந்த ஸ்தாபனத்தின் வேலைமுறை பற்றிய ஸினிமாக் காட்சியொன்றையும் பார்த்தார்.

கெண்ட் விவசாயக் காட்சியில் சமீபத்தில் பரிசுபெற்ற பசுக்கள்.



ரகுராமனின் சுயம்வரம்

—ஸி.வி. கிருஷ்ணமூர்த்தி—

ஜல், ஜல், ஜல், ஜல், என்று கழுத்தில் கட்டிய சலங்கை குலுங்க வீட்டை நோக்கிப்பறந்து கொண்டு இருந்தன அவ்விரு மயிலைக் காளைகளும். வண்டியினுள் அமர்ந்து இருந்த ரகுராமனின் முகத்தில் மாலையின் மஞ்சள் வெய்யில் லேசாகப் படர்ந்து, அவனது பிரயாணத்தின் அலுப்பை எடுத்துக் காட்டிற்று. இருபுறமும் அடர்ந்து வளர்ந்து இருந்த செழுமையான பசுமரங்கள், அதனூடே உட்கார்ந்தவாறு சப்த ஜாலங்களையும் எழுப்பிய பலவித புள்ளினங்கள். கண்ணுக்கெட்டிய தூரம் பச்சைப் பாயை விரித்தாற்போன்ற பசும் பயிர்கள், அதனை அணைத்தவாறு அடிவானத்தைத் தொட்டு நின்ற நீண்ட நெடு மலைகள், பெட்ரோல் மணம் கமழும் பஸ்களையும் தார் ரோடையும், அவைகளின் மீது சதா குழுமியிருந்த அசட்டுக் கும்பல்களையும் சென்னையில் பார்த்துப் பார்த்து கண்கள் பூத்துப் போயிருந்த ரகுராமன் தன் முன்னால் தீட்டப்பட்டு இருந்த இயற்கைக் காட்சியில் லயித்துப் போயிருந்ததில் ஒருவித ஆச்சர்யமும் இல்லை.

"இதோ மாமா வந்தூட்டா, மாமா வந்தூட்டா" என்றுசொல்லிக்கொண்டே வண்டியின் பின் ஓடிவந்த தன் பெரிய மருமான் கோபுவைப் பார்த்ததும், தான் வீடு நெருங்கி விட்டதை அறிந்தான் ரகுராமன்.

"வாடாப்பா, வா. இந்த மட்டுமாவது, கடைசிலே, என் கடுதாசிக்கு மதிப்பு வெச்சு உனக்கு வரணம்னு தோணித்தே, ரொம்ப சந்தோஷம்" என்று சொல்லிக்கொண்டே அவனை வரவேற்றாள் கல்யாணி.

"எங்கே, அக்கா, அப்படி திடீர்னு வர முடியறது. ஆபீஸில் வேலை அதிகம். லீவ் கேட்டா, கொடுக்கமாட்டேங்கறான்...கடைசியில் முடியாது, கொடுத்துத்தான் ஆகணம்னு, வாங்கிண்டு வந்தேன்" என்று சொல்லிக்கொண்டே உள்ளே நுழைந்தான் ரகுராமன்,

"வண்டியை அனுப்பிச்சிருந்தேனே, வந்ததா?" என்று கேட்டுக்கொண்டு அறையினின்று வெளியே வந்தார் நாகசாமி அய்யர். நாகசாமி அய்யர் ரகுராமனின் அத்திம்பேர்.

"வந்திருந்தது அத்திம்பேரே... அதில்தானே வந்தேன்" என்று சொல்லிக்கொண்டே தன் ஆடைகளைக் கழற்றினான்.

"ஆமாம்... எத்தனை நாள் லீவ் போட்டிருக்கே?" என்று கேட்டார் அவர்.

"மூன்று நாட்கள்"

'பேஷ்! ரொம்ப நன்னா இருக்கு ஒரு பத்து நாட்களுக்காவது எழுதிப் போட்டுட்டு வந்திருக்கப் படாதோ?"

"இல்லை அத்திம்பேரே. இதற்கே ஆபீஸில் ஒரே ரகளை...கடைசியில் முடியாது...போயித்தான் ஆகணம்னு வாங்கிண்டு வந்தேன்"

"நல்ல ஆபீஸ் போ...ஆமாம் உனக்கும்தான், 10 நாள் லீவ் எடுத்துண்டேயானா, இந்தப் பட்டிக்காட்டில் போது போகணுமே..."

கல்யாணி "அதைச் சொல்லுங்கோ, மொதல்லே. அதான் இத்தனை நாட்கள் இந்தப் பக்கமே எட்டிப் பார்க்கமாட்டேன்னு சொல்லிண்டு இருந்திருக்கான்..."

"இல்லே அக்கா, வந்து..."

நாகசாமி "ஆமாம், 'மெட்ராஸ்' போல என்ன இருக்கு இங்கே... ஒரு 'பஸ்ஸா' 'ட்ராமா' 'பார்க்கா பீச்சா...கல்யாணி இல்லே அந்தப் பீச்சிலேதான் ஒய்யாரமா நடந்துண்டு போகும் நவநாகரீக நாரீமணிகளா?.........'

"என்ன அக்கா, இரண்டுபேரும் சேர்ந்துண்டு என்னைக் 'கோட்டா' பண்ண ஆரம்பிச்சுட்டேள்......"

க:—"கோட்டா என்னடா...... உண்மையைத் தானே சொல்றோம்......என்னவோப்பா, இந்த மட்டும் வரணம்னு தோணித்தே உனக்கு......சரி, நாழியாறது கை கால் அலம்பிண்டுவா. 'டிபன் ஆறிப்போறது' என்று சொல்லிக்கொண்டே எழுந்து உள்ளே சென்றாள் கல்யாணி.

2

கோவையில், தபால் இலாகாவில், 'டிவிஷனல் இன்ஸ்பெக்டராக'வேலை பார்த்து வந்த, வேதமய்யரின் ஒரே புதல்வன் ரகுராமன். பெண் கல்யாணி மீதும், ரகுராமன் மீதும் தன் உயிரையே வைத்து இருந்தார் அய்யர். அற்பாயுளில் இறந்து

போன தன் மனைவியின் நினைவு வரும்பொழுது எல்லாம், தன் மக்களின் முகங்களே அவரது புண்பட்ட ஹிருதயத்துக்கு ஆறுதலும், சாந்தியும் அளித்து வந்தன.

ரகுராமன் தன் பி.ஏ. படிப்பை முடித்துக்கொண்டதும், சென்னையிலேயே ஒரு ஆங்கிலேயக் கம்பெனியில் வேலைக்கு அமர்ந்தான். தானே வரித்தத் தன் தூர பந்துவாகிய நாகசாமியை மணந்து கொண்டாள் கல்யாணி. நாகசாமி ஒரு பெரிய படிப்பாளியாக இல்லாவிடினும், நல்ல உழைப்பாளி. நவீன யந்திர சாதனங்களைக்கொண்டு சொந்த பண்ணை செய்து, அதன்மூலம் நல்ல ஊதியம் அடைந்த பல மிராசுதார்களில் அவரும் ஒருவர்.

இயற்கையிலேயே தமக்கையின் மீது அளவிலா வாத்ஸல்யம் கொண்ட ரகுராமனுக்குத் தாயின் அகால மரணம், அதனை அவள்பால் இன்னும் பன்மடங்கு பெருக்கெடுத்து ஓடச் செய்தது. கல்யாணி கண் கலங்குவதைக் காணச் சகியான். எதற்கும் 'அக்கா, அக்கா' வென்று உயிரை விடுவான். கல்யாணிக்கும் தன் ஒரே தம்பியின் மீது அத்யந்த பிரேமை.

ரகுராமன் சிறிது நாட்களாவது தன்னுடன் வந்து தங்கிவிட்டுப்போக வேண்டுமென்பது கல்யாணியின் நெடு நாளைய விருப்பம். அவள் பன்முறை கடிதங்கள் மூலம் வருந்தி அழைத்தும், பல காரணங்களை முன்னிட்டு, அவன் அவைகளைத் தட்டிக் கழித்துக்கொண்டே வந்தான். தான் ஒரு பட்டிக்காட்டில் வாசம் செய்வதினாலும், தன் விவசாயத் தொழிலில் ஈடுபட்டு இருந்ததாலும், சென்னை நாகரீகத்தில் திளைத்து எழுந்த தன் தம்பி தன்னுடன் வந்து இருக்க சங்கோஜப்படுகிறானோ என்று ஓரோர் சமயம் கல்யாணி சந்தேகப்பட்டதுண்டு. கடைசியில் தன் கடைக்குட்டி பாலுவின் ஆண்டு நினைவு வரவே, அதனைக் காரணம் காட்டி, இதற்காவது கட்டாயம் வந்துவிட்டுப் போகவேண்டும் என்றும், அப்படி அவன் இவ்வழைப்பையும் அலக்ஷியம் செய்தால், இனி தன்னை ஒரேயடியாக மறந்துவிடுவது நலமென்று உருக்கமாக எழுதிய கடிதத்தின் பலனாகத்தான், இப்பொழுது ரகுராமன் கல்யாணி வசித்து வந்த காட்டுப்பட்டிக்கு விஜயம் செய்து இருந்தான்.

3

பிரயாணத்தின் அலுப்பினால், அன்றையப் பொழுதை எப்படியோ கழித்தான் ரகுராமன். மறுநாள் விடிந்ததும் அன்றைய பொழுதை எப்படிப் போக்குவது என்று சிந்தித்தவாறு உட்கார்ந்து இருந்த சமயம், அவன் அத்திம்பேர், தான் எங்கோ சென்று சேகரித்து வந்த பல தமிழ் சஞ்சிகைகளையும், ஆங்கிலப் பத்திரிகைகளையும் அவன் முன் கொண்டு வந்து போட்டார். "சரி, இன்றைய பொழுதும் எப்படியோ சென்றுவிடும்" என்று எண்ணியவாறே அவைகளைப் புரட்டிய வண்ணம் இருந்தான் ரகுராமன்.

அன்று மாலை சாப்பாடு ஆனதும், எப்பொழுதும் போல், வயல்பக்கம் சென்றுவிட்டார் நாகசாமிஅய்யர். கல்யாணி சமயலறையுள் ஏதோ காரியமாக இருந்தாள். கூடத்திலே, ஒரு பக்கமாக பட்டுப் பாயையும், தலைகாணியும் வைத்துக்கொண்டு, படுத்தவாறே, ஏதோ பத்திரிகையில் ஆழ்ந்து இருந்தான் ரகுராமன்.

"மாமி, மாமி. பின்னிவிடறேளா?" என்று மெல்லிய குரலில் கேட்டுக்கொண்டே, தன் மேலாடை லேசாகக் காற்றில் பறக்க, பட்டுப்பூச்சியைப்போல் உள்ளே ஓடிவந்தாள் ஒரு மடமங்கை. அவள் கையில் இருந்த மல்லிகை தன் துல்லிய நறுமணத்தை எங்கும் பரப்பியது.

கூடத்தில் ஒரு புதிய ஆடவன் படுத்து இருப்பதைக் கண்டதும், ஏதோ. நெருப்பை மிதித்துவிட்டவன்போல் 'சடக்'கென்றுநின்றாள் அக்கட்டழகி. உடனே நாணத்தால் முகம் சிவக்க, தலையைக் குனிந்துகொண்டே, ஏதோ குற்றம் செய்தவளைப்போல திரும்பி வெளியே போக யத்தனித்தாள்.

"ஏண்டி வத்ஸலா, ஏன் வந்தூட்டுத் திரும்பிப்போறே...வா... ஒருத்தரும் இல்லை, என் தம்பி ர்குதான் ஊர்லேருந்து வந்திருக்கான். ஏன் இப்படி வெட்கப்படறே..." என்று தன் தம்பியை அறிமுகம் செய்து வைத்துக்கொண்டே அங்கு வந்த கல்யாணி, வத்ஸலாவை அழைத்துக்கொண்டு ரேழிப்பக்கம் சென்றாள்.

திடீரென்று தன் முன்னே தோன்றிய அவ்வனிதையின் அழகு ரகுராமனை ஒரு கணம் திக்குமுக்காடச் செய்தது. வைத்த கண்களை எடுக்கமுடியாமல் அவளையே உற்று நோக்கிய வண்ணம் படுத்திருந்த அவன் உள்ளத்துள் உணர்ச்சி அலைகள் மோத ஆரம்பித்தன. ஒரு விநாடி முன் அமைதி நிலவிய அவன் உள்ளத்தில் இப்பொழுது லேசாகப் புயல் வீசத் தொடங்கியது. இளங்கொடி போல் துவண்டு நின்ற அவள் தளிர் மேனியும், மருண்ட கயல் விழிகளும், குவிந்த உதடும், நீண்ட கருங்குழலும் அவள் முன் வந்து ஊசலாடிய வண்ணம், ரகுராமனை ஒரு இன்ப உலகிற்கே எடுத்துச் சென்றன.

ரேழியில் உட்கார்ந்து வத்ஸலாவின் அழகிய கேசத்தை வாரி பின்னிவிட்டுக் கொண்டிருந்தாள் கல்யாணி. முழங்கால்களைக் கட்டியவாறே, அவள் முன் பதுமை போல் உட்கார்ந்து இருந்த ஆரணங்கின் அழகை அள்ளிப் பருகிய வண்ணம் மெய் மறந்து இருந்தான் ரகுராமன்.

வத்ஸலா வெளியேறியதும், நீண்ட, ஆழ்ந்த கனவிலிருந்து விழித்துக்கொள்பவனைப்போல் திடுக்கிட்டு எழுந்து உட்கார்ந்து கொண்டான். இதுவரை சலனம் அற்று இருந்த அவன் உள்ளத்துள், விவரிக்க முடியா ஒரு வேதனை குடிகொண்டு ரகுராமனை சஞ்சலத்தில் ஆழ்த்தியது. மனம் ஒரு நிலை கொள்ளாது, தணலிற் பட்ட தளிர்போல் தத்தளித்துக்கொண்டு இருந்தது. பேதலித்த மனதைப் பந்தப்படுத்த இயலாது, மறுபடி படுப்பது போல், பாசாங்கு செய்தவாறே படுத்து இருந்தான்.

4

"என்னடா ரகு 'ஷர்ட்டை' திருப்பிப்போட்டுக் கொண்டு இருக்கிறாயே?" என்று அன்று இரவு, இலைமுன் உட்கார்ந்துகொண்டு இருக்கும்பொழுது நாகசாமி அய்யர் கேட்டபோதுதான் தன் தவறை உணர்ந்தான் ரகுராமன்.

"ஓகோ, தெரியவே இல்லையே........."என்று சொல்லிக் கொண்டே அதனை அவசர அவசரமாகக் கழற்றி சரிப்படுத்திக் கொண்டான். சாப்பிடும் பொழுது மிக மௌனமாய் உட்கார்ந்து இருந்த தன் மைத்துனனைக் கண்டு மிக ஆச்சரியம் அடைந்தார் நாகசாமி அய்யர். தலையை குனிந்தவாறே குழம்பு அன்னத்துடன், புடலங்காய் கூட்டையும் நன்கு சேர்த்து பிசைந்து கொண்டு சாப்பிட ஆரம்பித்த ரகுராமனைக் கண்டு திடுக்கிட்டவராய் எதிரே நின்ற தன் மனைவியை நோக்கினார். கல்யாணி அர்த்த புஷ்டியுடன் அவரைப் பதிலுக்குப் பார்த்தாள்.

இப்படி சாப்பிட்டால் நன்றாய் இருக்குமென்று, எந்த பாக சாஸ்திரத்தில் சொல்லியிருக்கிறது?'' என்று கேட்டார் நாகசாமி அய்யர்.

"எதைச் சொல்லுகிறீர்கள் ?'' என்று சற்று திடுக்கிட்டவாறே கேட்டான் ரகுராமன்.

"அதுதான் குழம்பு சாதத்துடன் கூட்டையும் கலந்து சாப்பிட்டால்......''

ரகுராமன் முகத்தில் அசடு தட்டியது. பதில் சொல்ல வகை அறியாது, வெட்கி உட்கார்ந்து இருந்தான்.

"இல்லை அத்திம்பேரே... வந்து...'' என்று மெள்ள ஆரம்பித்தான்.

"ஆமாம்...... நாளைக்குப் போகணு மோல்யோ ...ஆபீஸ் ஞாபகம்வந்தாடுத்து'' என்று அவரே சமாதானம் சொன்னார். கதவருகே நின்று கொண்டு மௌனம் சாதித்த கல்யாணியின் முகத்தில் புன்னகை பூத்தது.

மறு நாள் புறப்பட வேண்டுமென்று ஞாபகப்படுத்தப்படவே, தன் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட அவ்வனிதையின் முழு விவரங்களையும் கல்யாணியின் மூலம் அறிந்து கொள்வதென்று தீர்மானித்தான் ரகுராமன்.

நாகசாமி அய்யர் சாப்பிட்டு வெளியே எழுந்து சென்றதும், இலையின் முன் உட்கார்ந்தவாறே தமக்கையுடன் பேச்சுக் கொடுத்தான் ரகுராமன்.

"ஆமாம் அக்கா......யார் அந்தப் பெண்...?''

"எவள்?''

"அவள்தான்...... இன்றைக்கு மத்தியானம்...'

"ஓகோ, வதஸலாவைச் சொல்லுகிறாயா?...அவள்தான் எதிராத்து நாராயணசுவாமி அய்யரின் ஷட்டகர் பெண்...எல்லாம் நம்மளவாள்தான் ...அவருக்கு 'டெல்லியிலே' ஏதோ பெரிய வேலையாம்......''

"ஓகோ...அப்படியா ... இல்லை, சும்மா கேட்டேன்...'' என்று மேலே விசாரிக்கத் தைரியம் வராதவனாய் கையைக் கழுவ வெளியே எழுந்து சென்றான் ரகுராமன்.



5

சென்னையை அடைந்த ரகுராமனின் மனம், ஒரு நிலைக்கு வர, பல நாட்கள் சென்றன. கவின் பெருகாட்டுப்பட்டியின் ஞாபகம் வரும்பொழுதெல்லாம், வத்ஸலாவின் அழகிய உருவம் அவன் மனத்திரையில் தோன்றி மறையும் மயம் செய்து கொள்வதானால். வத்ஸலாவைத் தான் வாழ்க்கைத் துணைவியாக ஏற்றுக் கொள்வது என்று அவன் சபதம் செய்து கொண்டான்.

எப்படியோ இரண்டு மாதங்கள் ஓடி மறைந்தன. ஒரு நாள் மாலை தன் தகப்பனாரிடம் வந்த கடிதம்ஒன்றைப் படித்தவாறு உட்கார்ந்து இருந்தான் ரகுராமன். தான் பலமுறை வருந்தி எழுதியும் ரகுராமன் தன் கலியாண விஷயத்தில் மிக அசட்டையாக இருப்பதாகவும், தற்சமயம் தன் நெருங்கிய நண்பரான ராமலிங்க அய்யரின் மகளை அவ

னுக்குப் பார்த்துவைத்து இருப்பதாகவும், உடனே கோவைக்கு விஜயம் செய்து. பெண்ணைப் பார்த்துத் தன் சம்மதத்தை அறிவிக்குமாறு கோரி அதில் எழுதியிருந்தார் வேதமய்யர். இதைப் படித்து முடித்ததும் ரகுராமனுக்கு ஆத்திரம் பிறிட்டுக் கொண்டு வந்தது. தகப்பனார் தன்மீதுகொண்டுள்ள அபார வாஞ்சையை அவன் நன்கு அறிவான். இருப்பினும், கல்யாணம் என்பது தன் சொந்த விஷயம் என்றும், அதில் தலையிட எவருக்கும்—தன் தகப்பனாருக்குக்கூட ஒருவித உரிமையில்லையென்றும், இதனால் அவரை அவமரியாதை செய்வதாக நினைத்துக்கொள்ளக் கூடாது என்றும், ஒருபதிலை அவருக்கு எழுதிப் போட்டுவிட்டு வாளா இருந்தான்.

இச்சம்பவம் நடந்த மூன்று நாட்களுக்குப் பின் கல்யாணியிடமிருந்து பின்வரும் கடிதம் வந்தது:

கோவை

"அன்புள்ள ரகுக்கு :

அப்பா அழைப்பின்பேரில் நான் இங்கு வந்து நான்கு நாட்கள் ஆகின்றன. உன் கல்யாண விஷயமாக ஒரு பெண்ணைப் பார்த்து வைத்து இருக்கிறார். அவருடைய நண்பரின் மகளாம், பார்ப்பதற்குக் கிளிபோல் மிக அழகாய் இருக்கிறாள். நீ, நேரில் ஒரு முறை வந்து பெண்ணைப் பார்த்துவிட்டு, உனது அபிப்பிராயத்தையும். தெரிவிக்க வேண்டுமென்பது எங்கள் அவா இதில் பலவந்தமோ, கட்டாயமோ கிடையாது. உனது உரிமையைப் பறிக்க யாரும் விரும்பவில்லை. பெண் பிடிக்கவில்லையென்று சொன்னால், அப்பா, உன்னைக் கட்டாயப்படுத்தப் போகிறாரா, என்ன? பெண் வீட்டாரின் ஹிம்சையினாலேயே அப்பா உன்னை வரும்படி எழுதியிருக்கிறார்.........அவர் உணர்ச்சிகளையும் நீ அறிந்துகொள்ள வேண்டாமா? கல்யாணத்தின் முடிவு உன் கையில் இருக்கும் பொழுது, வந்துவிட்டுப் போவதில் என்ன கஷ்டம் இருக்கிறது!

இப்படிக்கு
உன்னை உடனே எதிர்பார்க்கும்
கல்யாணி.

இக்கடிதத்தின் விளைவாக வேண்டா வெறுப்பாய் கோவை சென்றான் ரகுராமன். வாயிலில் நின்று தன்னை வரவேற்ற தகப்பனாரிடம் கூட சரியாக முகம் கொடுத்து பேசவில்லை. உள்ளேயிருந்து வந்த கல்யாணியைப் பார்த்ததும், ஆத்திரமாக ஏதோ சொல்ல வாயெடுத்த அவனை, "இரையாதேடா.......பெண்ணாத்துக்காராள் எல்லாம் இங்கேதான் இருக்கா......அதோ அந்த அறையில்தான் உனக்காக எல்லோரும் காத்துண்டு இருக்கா" என்று எச்சரித்து அவன் வாயை மூடினாள்.

சரி, சீக்கிரம் போய், கை, கால் அலம்பிண்டுவா.

காபி சாப்பிட்டுவிட்டு, ராகு காலத்திற்கு முன், பெண்ணைப் பார்த்து விடுவாயாம்........" என்றாள் கல்யாணி.

"எனக்குக் காபியும் வேண்டாம் கல்யாணமும் வேண்டாம்" என்று முணு முணுத்துக்கொண்டே கொல்லைப்புறம் சென்றான் ரகுராமன்.

"உம் என்று மூகத்தை ஒரு முழ நீளம் வைத்துக்கொண்டு, பக்கத்திலிருந்த சாளரத்தின் வழியாகத் தெருவையே பார்த்துக் கொண்டு அமர்ந்து இருந்தான் ரகுராமன் தன்னை வந்து நமஸ்கரித்து நின்ற மணப்பெண் லஜ்ஜையே உருவாய் எதிரே தலை குனிந்து நின்றவண்ணம் இருந்தாள்.

"அவனுக்குக் கோபம்போல இருக்கடி வத்ஸலா...நீதான் கூப்பிட்டுப்பாரேன்" என்று விஷமம் கலந்த புன்னகையுடன் சொன்னாள் கல்யாணி.

'வத்ஸலா' என்ற பெயர் உச்சரித்த மாத்திரத்தில் திடுக்கிட்டுத் திரும்பிய ரகுராமன் யார்...நீயா? என்று அவளை அறியாமலேயே வாய்விட்டு கூறினான்.

* * * * *

கொஞ்ச நேரம் கழித்து கல்யாணியைத் தனிமையில் சந்தித்து ரகுராமன் என்ன அக்கா இது என் மானத்தை வாங்கிவிட்டாயே..........அப்பா யாரோ, ராமலிங்கய்யர் பெண் என்றல்லவோ, எழுதியிருந்தார்?' என்று கேட்டான். "ஆமாண்டா வத்ஸலாவின் தகப்பனாருக்கு டெல்லியில் பெரிய வேலை என்று சொல்லவில்லையா, அவர் பேர்தான் ராமலிங்க அய்யராம்......அப்பாவுக்குக் கூட நெருங்கிய நண்பராம்...... அன்னிக்குக் காட்டுப்பட்டிக்கு வந்துட்டுப்போனதுமே, நாராயணசாமி அய்யர் வந்து உன் ஜாதகத்தைக் கேட்டு வாங்கிண்டு போனார். டெல்லியிலிருக்கும் தன் ஷட்டகருக்கு அனுப்பியிருக்கிறார்போலிருக்கு. ராமலிங்க அய்யர் அப்பாவுக்கு நேரே கடிதம் எழுதியிருக்கிறார்........உன் மனோ பீஷ்டத்திற்கு ஏற்றவாறு எல்லாம் அமைஞ்சு வந்தது.. ......கொஞ்சம் தமாஷ் பண்ணித்தான் பார்ப்போமே யென்று நீ வத்சலாவைப் பார்த்த விஷயத்தை அப்பாக்கிட்டே சொல்லாமல், உனக்கும் கடிதம் எழுதினேன்' என்று விவரித்துக்கூறினாள் கல்யாணி.

"ஐயோ அக்காவே......" என்று சலித்துக்கொண்டவன்போல் தன் உள்ளத்துள் பொங்கிவந்த உவகையைத் தடுக்க முடியாமல். தத்தளித்தான் ரகுராமன்.

கட்டுரையாளருக்கு

★

'சுதேசமித்திரன்" வாரப் பதிப்பில் கட்டுரைகள், கதைகள், ஹாஸ்ய கதைகள், கவிதைகள் முதலியவற்றை எழுதும் நண்பர்கள், தங்களுடைய கதா பாத்திரங்களையும் கற்பனையாகவே அமைக்க வேண்டுகிறோம். குறிப்பாகச் சுட்டிககாட்டும் வண்ணம் ஊரையோ, பேரையோ குறிப்பிடாமல் விடுக்க வேண்டும்.

—ஆசிரியர்.

மாதர் மகா சபை

குங்குமம்

'வாருங்கள் பாட்டி, வாருங்கள். ரொம்ப நாளாயிற்றே இந்தப்பக்கம் வந்து' என்று அங்கு வந்த சேஷிப் பாட்டியை வரவேற்றாள் ருக்கு.

'ஊரிலிருந்து நாட்டுப்பெண் வந்துவிட்டாள் போலிருக்கிறது பாட்டிக்கு' என்றாள் சரோஜா.

'ஏன்? எதற்காகச் சொல்கிறாய்?' என்றாள் வசந்தா.

'இல்லாவிட்டால் இவ்வளவுதூரம் வர ஒழிவு எங்கே இருக்கப்போகிறது?' என்றாள் சரோஜா.

'நாட்டுப்பெண் இல்லாதபோதும் 'ஒரு சரியாக'த்தான் இருக்கிறது. இருக்கிறபோதும் ஒரு சரியாகத்தான் இருக்கிறது. 'இருக்கிறபோதைவிட' 'இல்லாதபோதே' பரவாயில்லை போலிருக்கிறது. அதெல்லாம் கொடுத்துவைத்தவர்களுக்கு. தள்ளாத வயதில் மாமியார் மாமனார்களுக்கு நாட்டுப்பெண்ணும் பிள்ளையும் பரிந்து பரிந்து விசாரிப்பது. இந்தக் 'கட்டை' உழைப்பதற்கென்று ஜன்மம் எடுத்திருக்கிறது. உழைத்துத்தானே ஆகவேண்டும்? என்று அலுத்துக்கொண்டாள் பாட்டி.

'அதெல்லாம் அவரவர்கள் பிறந்தவேளையின் பலன். ஒருவர்மீது பிழைசொல்லி பலனில்லை' என்றாள் ருக்குவின் மாமியார்.

'ஏன், என்ன அப்படிபபட்ட வேலை?' என்றாள் ருக்கு?

'அவள் ஊருக்குப் போயிருந்தபோது 'பிள்ளையாண்டான்' ஒருவனுக்கு மாத்திரம் சமைத்துப் போட்டுவிட்டு மீதி வேளைக்கு ஒரு தொந்தரவுமில்லாமல் 'ஹாய்'யாக இருந்து கொண்டிருந்தேன். இப்பொழுது பிள்ளையாயிற்று, நாட்டுப் பெண்ணாயிற்று. மீதி பொழுதுக்கு நோயாளிக் குழந்தை ஒன்றாயிற்று' என்றாள் பாட்டி.

'ஏன், நாட்டுப் பெண்ணுக்கு என்னவாம்?' என்றாள் பானு.

'குழந்தைக்குதான் வயிற்றில் கட்டி என்று 'பாடல்' பாடி இருக்கிறதே. காலையிலும் மாலையிலும் அதை டாக்டர் வீட்டுக்கு எடுத்துக் கொண்டுபோய்வரத்தான் அவளுக்குப் பொழுது சரியாக இருக்கிறது. குழந்தைக்கு சற்று குணம் மாதிரி இருந்தால் அவளுக்கு ஏதாவது உடம்புக்கு வந்துவிடுகிறது.' என்றாள் பாட்டி.

ருக்கு சொல்லுகிறாள்

'யாரடி அது, உஷாவா?' என்றேன்.

'ஏன், ஏதாவது நாகரிக சாஸ்திரத்தில் தவறு ஏற்பட்டுவிட்டதோ? உம் ஆகட்டும். நடத்து. பிறத்தியார் எது செய்துகொண்டாலும் அதில் ஏதாவது குற்றங்குறை கண்டு பிடிக்க வேண்டியதுதான் வழக்கமாய்ப் போய்விட்டது' என்றாள் உஷா.

'எவ்வளவு நாளாய் நீ இவ்வளவு கெட்டிக்காரியாய்ப் போய்விட்டாய் என்றுதான் ஆச்சர்யப்படுகிறேன்' என்றேன்.

'அதெல்லாம் கிடக்கட்டும். விஷயத்தைச் சொல்' என்று தன் உடம்பை ஒருதரம் பார்த்துக்கொண்டாள் உஷா.

'நிஜமாகவே மெல்லிய வாயிலில் புடவை, ஜாக்கெட் இரண்டும் ஒரே கலரில் போட்டுக்கொண்டால் அது ஒரு அழகாகத்தான் இருக்கிறது. சில உடம்புகளுக்கு எடுப்பாகவும்கூட இருக்கிறது. அதிலும் 'பூச்சாண்டி' வாயில்களைவிட சிறிய பொட்டுகள் போட்ட லைட் கலர் வாயில்கள் உன் உடம்புக்கு நன்றாக அமைந்திருக்கிறது. கெட்டிக்கரை புடவைகளுக்குத்தான் பாக்குக் கலர் புடவைக்கு வெள்ளைக் கலர் ஜாக்கெட் தேவலையா? நிலாவர்ணப் புடவைக்கு மஞ்சள் கலர் ஜாக்கெட் தேவலையா?' என்று பொருத்தங்கள் பார்க்கவேண்டும். வாயில்களுக்கு அப்படியெல்லாம் வேண்டியதில்லை, என்றுதான் தோன்றுகிறது. நீ அதைத் தெரிந்துகொண்டிருக்கிறாயே என்றுதான் சந்தோஷம்' என்றேன்.

'குழந்தைக்கு வயிற்றில் கட்டிக்குத்தானே மருந்து கொடுத்துக்கொண்டு வருகிறது?' என்றாள் ருக்கு.

'அப்படி ஒரு தீர்மானமாக இருந்துவிட்டால் குழந்தை உருப்பட்டுவிடுமே! அதுதானே இல்லை. கொஞ்ச நாளைக்கு கட்டிக்கு மருந்து. ஒரு நாள் உடம்பு கொஞ்சம் 'சுரு சுரு' 'லேசாக ஜுரம்மாதிரி உடம்பில் உஷ்ணம்' என்று இருந்தால் வேறு டாக்டரிடம் எடுத்துக் கொண்டு போகவேண்டியது. அவர் அதைப் பார்த்துவிட்டு 'இது கட்டியுமில்லை, ஒன்றுமில்லை. உடம்பில் ரத்தமே இல்லை. அதனால்தான் இப்படி இருக்கிறது. ஒரு நாலு இஞ்ஜெக்ஷன் செய்து நல்ல டானிக்காகக் கொடுத்தால் இரண்டே மாதத்தில் சரியாகிவிடும்' என்பார். உடனே அந்த சிகிச்சை ஆரம்பமாகிவிடும். இதன் மத்தியில் பாதி ராத்திரியில் தூக்கத்தில் குழந்தை வாய் பிதற்றி, கை கால்களை 'கோணல் மாணலாக உதைத்துக்கொண்டால் உடனே ஒரு மாந்திரீகனை அழைத்து வந்து வைத்தியம் செய்யவேண்டியது. இது தவிர பட்சி தோஷம், திருஷ்டி தோஷம், எத்தனையோ தோஷங்களுக்குப் பரிகாரங்கள். ஒரு மருந்து ஆரம்பித்தால் ஐந்து நாளைக்கு அதைச் சேர்ந்தாற்போல் கொடுப்பது கிடையாது. அது என்ன வைத்யமோ, என்ன மாயமோ' என்றாள் பாட்டி.

'நீங்கள் உழைக்கப் பிறந்த மாதிரி அது வைத்தியத்துக்கென்று பிறந்திருக்கிறது. அதற்கான மருந்துகளைச் சாப்பிட்டுத்தானே ஆகவேண்டும்? அது பிறந்த வேளையின் பலன் அது' என்றாள் சரோஜா.

'நாட்டுப்பெண்ணுக்குஎன்ன உடம்பாம்?' என்றாள் ருக்குவின் மாமியார்.

'இந்தக் காலத்திலே டாக்டர்கள் என்னமோ நாடியைப் பார்த்து மருந்து கொடுப்பதில்லை. நாம் நம் உடம்பில் இருக்கிற தோஷங்களைச் சொன்னால் அதைக் கேட்டுக் கொண்டு அதற்கு ஏற்பட்ட மருந்தைக் கொடுக்கிறார்கள். அத்துடன் இப்பொழுதெல்லாம்தான் விதம் விதமான வியாதிகள் வருவதும், அது இன்ன வியாதியென்று எந்த டாக்டராலும் கண்டுபிடிக்க முடியவில்லையென்று அதை ஒரு பெருமையாகச் சொல்லிக் கொள்வதும் இன்ன வியாதியென்று தெரியாமலே டாக்டர்கள் 'கொஞ்ச நாளைக்கு' மருந்து கொடுத்துக்கொண்டு வருவதும்தான் ஸர்வஸகஜமாகப் போய்விட்டதே! வெளிக்குப் பார்த்தால் உடம்பில் ஒரு துர்க்குணமும் இருப்பதாகத் தெரியாது. ஆனால் உள்ளுக்குள் ஏதோ வியாதி 'பிடுங்கித் தின்பதாகச்' சொல்வார்கள். அந்த ரீதியைச் சேர்ந்த உடம்பாக இருக்கும்போலிருக்கிறது எங்கள் நாட்டுப்பெண்ணுக்கு. மத்தியானம் வரையில் உடம்பு ஒன்றுமே இராது. முதல்நாள் சினிமாவுக்கோ சங்கீதக் கச்சேரிக்கோ போய்விட்டு வந்திருப்பாள். காலையில் எழுந்து குழந்தையை டாக்டர் வீட்டுக்கு அழைத்துக்கொண்டு போகிற 'சாக்கில்' சிநேகிதிகளுடன் 'ஊர்வம்பு' பேசிவிட்டு வந்திருப்பாள். மத்தியானம் வந்ததோ இல்லையோ திடீரென்று பொறுக்க முடியா தலைவலியோ வயிற்றுவலியோ, பல்வலியோ, கைகால்கள் குடைச்சலோ வந்து விடும், அவ்வளவுதான். பெரிய படுக்கையாகப் போட்டுவிடுவாள்' என்றாள் பாட்டி.

ஏன்! திடீரென்று வராதா, என்ன உடம்புக்கு? என்றாள் விமலா.

'நீ ஒரு பைத்தியம்! உடம்பாவது, கதையாவது. அன்று சாயங்கால வண்டிக்கு என் சகோதரன் தன் அகமுடையாள் பசங்களுடன் வருவதாகக் கடிதம் எழுதியிருப்பான். கடிதத்தைத் தபால்காரன் கொடுத்துவிட்டுப் போவான். அவ்வளவுதான். கடிதத்தைப் பார்த்தவுடனே படுக்கை போட்டு விடுவாள். இதே மாதிரிதான் என் பெண்களோ,



இந்தக் 'கூட்டை' உழைப்பதற்கென்று ஜென்மம் எடுத்திருக்கிறது.

...கடிதத்தைப் பார்த்த உடனே படுக்கை போட்டுவிடுவாள்...

என்னைச்சேர்ந்த இதர பந்துக்களோ வருகிறார்கள் என்று தெரிந்தால் அன்றைக்கு உடம்பு 'நிச்சயம்' என்றாள் பாட்டி.

'ஆனால் அதில் ஒரு வேடிக்கை பார்த்தீர்களா? தலைவலி, வயிற்றுவலி, பல்வலி இப்படிப் பட்டவைகளாகத்தான் வருகின்றன. ஜுரம் முதலியது வருவது கிடையாது போலிருக்கிறது' என்றாள் பானு.

'ஜுரம் என்று சொன்னால் உடம்பு சுடவேண்டும். அதற்கு என்ன செய்வது? வயிற்றுவலி, பல்வலி என்று சொன்னால் பிறத்தியார் நம்பித்தானே ஆகவேண்டும்?' என்றாள் சரோஜா.

ஏன்? அவர்கள் வந்தால் என்னவாம்?' என்றாள் ருக்குவின் மாமியார்.

'இது தெரியாதா? அவர்கள் நாட்டுப்புறத்தில் இருக்கிறவர்கள். வந்தால் சினிமா முதலியவைகளுக்குப் போக வேண்டுமென்று கிளம்பிவிட்டால்? அல்லது நாட்டுப் பெண் ஆதரவாக விசாரிக்கிறாள் என்று நாலைந்து தினங்களுக்கு உட்கார்ந்துவிட்டால்?' என்றாள் பாட்டி.

'ஆமாம். புக்ககத்து மனுஷ்யாள் வந்தால் இப்படி. பிறந்தகத்து மனுஷ்யாள் வந்தால்?' என்றாள் பானு.

'இது ஒரு கேள்வியா? அப்பொழுது நிஜமாகவே இருந்த ஜுரமும் பறந்து போய் விடாதா? பாட்டி சரியாக விசாரிக்கிறாரோ இல்லையோவென்று தானே வரிந்து கட்டிக் கொண்டு சமையல் டிபன், எல்லாம் அமர்க்களப் படாதா? வந்தவர்கள் உடம்பு சரியாக இல்லையென்று சொன்னால்கூட, 'ஆமாம், எல்லாரையும்போல அடிக்கடி வந்துகொண்டிருக்கிறீர்களோ! எப்பொழுதோ ஒரு நாளைக்கு வருகிறீர்கள். இப்பொழுது போனால் மறுபடி எப்பொழுதோ? பரவாயில்லை. உடம்புக்கு ஒன்றும் செய்து விடாது. பஸ்ஸில், டிராமில் போவது கஷ்டமாக இருந்தால் ஒரு டாக்ஸி வைத்துக்கொண்டு போய் விட்டால் போகிறது. எத்தனையோ வீண் செலவு செய்கிறோம்' என்று சினிமாவுக்கு வலுக்கட்டாயம் நடைபெறும். தன் குழந்தைக்கு உடம்பு சரியாக இல்லையேயென்றால் 'ஒரு வேளையில் ஒன்றும் குடி முழுகிப் போய் விடாது. அதற்கு இப்படித்தான் அடிக்கடி இருந்து கொண்டிருக்கிறது. மாமியார் தான். அகத்தில் இருக்கிறார். பார்த்துக்கொள்கிறார். நாம் போய்விட்டு வந்து விடலாம். சந்திரா(சிறிய தங்கை)ஆசைப் படுகிறாள்' என்று சினிமாவுக்குக் கிளம்பியேவிடுவாள். என்ன பாட்டி? நான் சொல்வது சரிதானே?' என்றாள் சரோஜா.

.........உடம்பு சரியாக இல்லை என்று சொன்னால் கூட.........

'உன் வாய்க்குச் சர்க்கரை தானடி போட வேண்டும். இதெல்லாம் எப்படியடி உனக்குத் தெரிந்தது? நேற்று வீட்டில் நடைபெற்ற சம்பவம் இதுவேதான். யாராவது சொன்னார்களா?' என்றாள் பாட்டி.

'அவளுக்கு யக்ஷிணி வந்து சொல்லும் பாட்டி' என்றாள் சாந்தா.

'நிஜமாகவே நேற்று நடைபெற்றதை ஒன்றுகூட விடாமல் அப்படியே ஒப்பித்துவிட்டாளே' என்று ஆச்சரியப்பட்டுக்கொண்டாள் பாட்டி.

'இதில் ஆச்சரியப்படுவதற்கு என்ன இருக்கிறது பாட்டி? உலகத்திலே சில அசடுகள் இந்தமாதிரி ஸர்வ ஸகஜமாய் நடந்துகொள்வதை நாம் பார்த்துக்கொண்டுதானே இருக்கிறோம்? அவ்வளவுதூரம் போவானேன்? அதோ எதிரகத்து எச்சுமு இல்லேயோ? தான், தன்னைச் சேர்ந்தவர்கள் என்று என்ன பிரித்துவைத்துப் பேசுகிறது! உலகம் என்னதான் முன்னேற்றமடைந்தாலும், குடும்பத்தோடு ஒத்துழைக்காத சில அசட்டு 'ஜன்மங்கள்' இருந்துகொண்டுதான் இருக்கிறதுகள்' என்றாள் சரோஜா.

"ஏம்ப்பா, ஏழாங்கணக்கு ஆன்ஸர் சரியா வரலியே? நம்ம கல்வி மந்திரி அது வேண்டாம், இது கட்டாயம் வேணும் அப்படி இப்படின்னு எங்க கல்விமுறையையே மாத்தப் போறேங்கிறாரே, இந்த சனியம் பிடிச்ச கணக்கையும் எடுத்துத் தொலைச்சுட்டார்னா, எங்களுக்கும் குஷி! உங்களுக்கும் வீட்டுக் கணக்கு தொல்லை இல்லாமே இருக்குமே!"

"உமக்கென்ன ஸார் குறைச்சல். ஊர்லே திருட்டு பயம் இருப்பதினாலே, பெரிசா ரெண்டு நாய்கள் வாங்கி வாசல்லே கட்டியிருக்கேள். அதுகள் ராத்திரி பூரா முழுச்சிண்டிருக்கான்னு அடிக்கடி பாக்க 'நைட் வாட்ச்மேன்' வேறே போட்டுட்டேள். நீங்க ஹாய்யா தூங்கலாம்"

"அந்த வயத்தெரிச்சலை ஏன் கிளப்பறேள். 'வாட்ச்மேன்' தூங்காமே இருக்கானான்னு பாக்க நான் ஒரு நாளைப்போல் ராக்கண் முழிக்க வேண்டியிருக்கு ஸார்!"

'அது காரணமில்லே. விசால புத்தியில்லே. குறுகிய புத்தியை உடையதுகளெல்லாம் அப்படித்தான் இருக்குங்கள். சுயநலம்தான் தெரியும் அதுகளுக்கு. அயலார் வாழ்ந்தால் ஐந்து பட்டினி இருக்குங்கள். என்ன செய்யலாம். அதுகள் பிறந்தவேளை அப்படி. உலகத்திலே எத்தனை நாட்டுப்பெண்கள் தாராள புத்தியுடன் குடும்பத்தைக் கௌரவத்துடனும் பொறுப்புடனும் கவனித்து வருகிறதுகள்? அதுகள் நல்ல தனத்தைப் பார்த்து மாமியார்களுக்கே அதுகளிடம் பிரீதி ஏற்பட்டு அதுகளிடம் அதிக வேலையைக் காட்டாமல் தாங்களே செய்துகொண்டு தங்கள் சொந்த பெண்கள் மாதிரி வைத்துக்கொண்டிருக்கும் மாமியார்கள் எத்தனையோ பேர்கள் இருக்கிறார்கள்' என்றாள் ருக்குவின் மாமியார்.

'அதற்கெல்லாம் கொடுத்து வைக்க வேண்டுமடியம்மா?'

அவள் ஆஸ்பத்திரிக்குப் போயிருக்கிறாள். வரும் நேரமாயிற்று. அத்துடன் ராத்திரி அவளுடைய தம்பி மதுரையிலிருந்து வருகிறானும். அவனுக்கு எது பிடிக்கும் என்று அவள் வந்து சொன்ன பிறகு சமையலுக்கு ஆரம்பிக்கவேண்டும். அவ்வளவு ஜாக்கிரதையுடன் இருந்தால் 'வரும்போதே ஸ்டேஷனில் சிநேகிதன் ஒருவன் கூப்பிட்டான். அவன் வீட்டில் சாப்பிட்டுவிட்டு வந்துவிட்டேன்' என்று சுலபமாய்ச் சொல்லிவிடுங்கள். படித்தவர்கள், உலகமறிந்தவர்கள் லட்சணம் இப்படி இருக்கிறது. இதையே நம்மைச் சேர்ந்தவர்கள் செய்துவிட்டால் பொறுப்பில்லாததுகள், நாடோடிகள், என்று பாணம் தொடுக்க ஆரம்பித்துவிடுவாள், என்னமோ உலகம்! போயேன்' என்று அலுத்துக்கொண்டே எழுந்தாள் பாட்டி.



லால்குடி ரிடயர்டு என்ஜினீர் ஸ்ரீ எல். டி. ராமச்சந்திர ஐயர் குமாரி சௌ. சத்யபாமாவுக்கும் மணக்கால் ராஜா ஐயர் குமாரரும் ஜி. ஐ. பி. ரயில்வே டிப்டி சீப் என்ஜினீரிங் அந்தாங்க குமாஸ்தாவுமான ஸ்ரீ வி. ஆர். ராமநாதனுக்கும் சமீபத்தில் விவாகம் நடந்தது.



மெய் விளங்கிய அன்பர்கள்

பெரிய புராணப் பூங்கோயிலில்

மெய்ப்பொருள் நாயனார்... என்ன பொருள் பொதிந்த பெயர்! துறவியல்ல; இம்மையை வெறுத்த மறு லோக மனப்பான்மையும் இவருக்கில்லை. திருக்கோவலூரிலிருந்து தமிழ்நாட்டின் ஒரு பகுதியை ஆண்டு வந்த தமிழரசர். சிறந்த போர் வீரரும்கூட. அரசியல் நெறியில் நின்று அறத்தையும் நீதியையும் கண்ணாகக் காத்தவர். இவ் வேந்தர் பெருமானின் சைவ பரம்பரையைச் சேக்கிழார் பெருமான் 'அன்பின் வழி' வந்த பரம்பரையென்கிறார்.

வேதநன் னெறியின் வாய்மை
விளங்கிட மேன்மை பூண்டு

அரசாண்டு, அன்பால் தொண்டர் குறிப்பறிந்து தொண்டாற்றி வந்தாராம். அன்பும் வாய்மையும் இவரது வாழ்க்கையில் மெய்யுயிர் பெய்த இரு மூச்சுப்பை எனலாம். அன்பர்களின் சைவ வேடத்தையும் மெய்ப்பொருளாகச் சிந்தை செய்தார் மெய்ப்பொருள் வேந்தர்.

கோயில்களில் பூசையுடன் ஆடல் பாடல்களும் பொங்கிப் பொலியச் செய்து, அன்பர்களுக்கெல்லாம்,

கூடிய மகிழ்ச்சி பொங்கக்
குறைவறக் கொடுத்து
வந்தார்

அன்பும் வஞ்சனையும்

இப்படி நடந்து வரும் காலத்திலே பகையரசன் ஒருவன் இவரை வெல்ல விரும்பிப் பன்

15

தமிழர் கண்ட தங்கப் பாலம்

★

பி. ஸ்ரீ.

முறை போர் செய்து பார்த்தான். ஒரு முறையாவது அவனுக்கு வெற்றி கிட்டவில்லை. போரிலே வெல்லமுடியாத புரவலரைக் கபடத்தால் வெல்லக் கருதினான் இவர் சிவ வேடத்தின் மீது வைத்திருந்த மதிப்பை அறிந்துகொண்டு தானும் உடம்பு முழுதிலும் திருநீறு பூசிக்கொண்டான்: சடை சடையாகத் திரித்து அச்சடைகளை ஒருமகுடம்போலக் கட்டிக்கொண்டான். புத்தக மூட்டை போன்ற ஒரு பெரிய பையையும் எடுத்துக்கொண்டு திருக்கோவலூருக்குப் புறப்பட்டான்.

உண்மையில், அது புத்தகப் பையன்று. உள்ளே ஏடு வைத்திருப்பதுபோல் உடைவாள் ஒன்றை ஒளித்து வைத்துக்கொண்டான். இந்நிலையில் அம்மூடன் மெய்ப்பொருள் அரசிருந்த தலைநகரில் புகுந்ததைச் சேக்கிழார் சித்திரிக்கிறார்:

மைபொதி விளக்கே என்ன,
மனத்தினுள் கறுப்பு வைத்துப்]
பொய்த்தவ வேடம் கொண்டு,
புகுந்தனன் முத்த நாதன்.

[மை பொதி —மையிருட்டை உள்ளே பொதிந்துவைத்திருக்கும்.]

மூடசிகாமணியைத்தான் 'முத்தநாதன்' என்கிறார். இங்கே 'முத்தன்,' சோம்பேறிமுத்தன்' என்பதிலுள்ள முத்தன் போன்றது. இம்முத்தன் மெய்ப்பொருள் வேந்தரின் அரண்மனைக்கு உள்ளே போய்ப் பல வாசல்களையும் கடந்து கடைசி வாசலை அடைந்ததும், அவ்வாசல் காப்போனாகிய தத்தன், 'இப்பொழுது மகாராஜா துயின்றுகொண்டிருக்கிறார். தாங்கள் சமயம் அறிந்து உள்ளே போகவேணும்' என்று எச்சரிக்கை செய்தான்.

அது கேட்ட வஞ்சகனோ, 'தடைசெய்யாதே-நான் உபதேசம் செய்யப்போகிறேன்' என்று சொல்லிக்கொண்டே அக் காவலாளனை விலக்கிக்கொண்டு உள்ளே விரைந்து புகுந்தான். தத்தனுக்கு இன்னும் சந்தேகம்தான்: தன் கவனத்தை உள்ளே செலுத்தியவண்ணம் காவல் புரிந்து நின்றான்.

உள்ளே புகுந்தவன், மெய்ப்பொருள் கட்டிலில் நித்திரை செய்யக் கண்டான். பட்ட மகிஷியும் அருகே இருந்தாள். முத்தநாதன் கூசாமல் நெருங்கினான். அரசி உடனே அரசரை எழுப்பினாள். பக்த வேடம் கண்டு மெய்ப் பொருள் வணங்கி நின்று,

மங்கலம் பெருக மற்(று)என்
வாழ்வுவந்(து) அடைந்த
தென்ன,
இங்கெழுந் தருளப் பெற்ற(து)
என்கொலோ?

என்று பட்டார்.

அதற்கு முத்தநாதன், உங்கள் சிவனார் ஆதிகாலத்திலே அருளிச்

செய்த ஆகமம் ஒன்று,—வேறு எங்கும் கிடையாதது,—இதோ இருக்கிறது. இந்த ஞானச் செல்வத்தைக் கொடுக்கவேண்டும் என்று தான் இங்கு வந்தேன்' என்று பதில் சொன்னான்.

பே(று) எனக்(கு) இதன் மேல் உண்டோ? என்று சொல்லி மெய்ப்பொருள் வேந்தர் ஆகமம் கேட்க விரும்பினார் அதற்கு முத்த நாதன், அரசியும் இங்கே இருக்கலாகாது; நீர் தனித்திருந்து உபதேசம் பெறவேண்டும்' என்றான்.

திருமகள் என்ன நின்ற
தேவியார் தம்மை நோக்கிப்
பரிவுடன் விரைய அந்தப்
புரத்திடைப் போக ஏவித்
தருதவ வேடத் தானைத்
தவிசின்மேல் இருத்தித்,
தாமும்
இருநிலத்(து) இருந்து போற்றி
'இனி அருள் செய்யும்' என்றார்

[தவிசு–பீடம். இருநிலத்து – தரையில்.]

தேவியை அந்தப்புரத்திற்கு அனுப்பிவிட்டு, முத்தநாதனை ஆசனத்தில் அமரச் செய்து, தாம் மரியாதையாகக் கீழே இருந்து கொண்டு, 'இனி அருள் செய்ய வேணும்' என்று பிரார்த்தித்தார் மெய்ப்பொருள் மன்னர். வஞ்சகன் கையிலிருந்த பையை மடிமேல் வைத்துக் கொண்டு மெள்ள அவிழ்த்து ஆகம ஏட்டை எடுப்பதுபோல் நடிக்கும்போது மெய்ப்பொருள் வேந்தர் உபதேசம் பெறுவதற்குப் பீடிகையாக வணக்கம் செலுத்தவேண்டுமென்று, அவன் அடிகளை நோக்கி முடிதாழ்த்தினார். அப்படி இவர் வணங்கிக்கொண்டிருக்கும்போதே, பாதகன் ஏடுபோல் மறைத்து வைத்திருந்த உடைவாளால் இவரைக் குத்தி விட்டான்.

இப்பாதகத்தைச் சொல்வதற்கும் கூசுகிறது சேக்கிழாரின் பக்தியுள்ளம். தான் முன்பு நினைந்தபடியே செய்தான் என்கிறார். அந்நிலையிலும் 'மெய்ப்பொருள் வேந்தர், மெய்த்தவ வேடமே மெய்ப்பொருள்' என்று அவனைத் தொழுததாகவும் சொல்கிறார்.

வீழ்ச்சியா, வெற்றியா?

வாசலில் உடம்பும் உள்ளே உள்ளமுமாக இருந்த காவலாளி நொடிப்பொழுதில் பாய்ந்து வந்தான், வாளும் கையுமாக. உடனே வஞ்சகனை வெட்டப்போனான். உடைவாளினால் குத்தப்பட்ட மெய்ப்பொருள் இரத்தம் சொரிய அப்போது தான் கீழே விழும் நிலையில் இருந்தார். இனி என்ன நடக்கிறது, பாருங்கள்:

மறைத்தவன் புகுந்த போதே,
மனம்அங்கு வைத்த தத்தன்,
இறைப்பொழு தின்கண் கூடி,
வாளினால் எறிய லுற்றான்,
நிறைத்தசெங் குருதி சோர
வீழ்கின்றார், நீண்ட கையால்,
தரைப்படும் அளவில் 'தத்தா!
நமர்'!எனத், தடுத்து வீழ்ந்தார்.

[இறைப்பொழுதின்கண் – ஒரு நொடிப்பொழுதில். கூடி–உள்ளே போய். வீழ்கின்றார்—விழுந்து கொண்டிருக்கும் மெய்ப்பொருள் மன்னர். தரைப்படும் அளவில்– மண்ணில் சாயும்போது. நமர்— நம்மவர்.]

விழும்போதே, 'தத்தனே! இவர் நம்மவர்!' என்றதாம் மெய்ப்பொருளின் வாய். நீண்ட கை தடுத்ததாம், முத்தநாதனைத் தத்தன் வெட்டிவிடாதபடி. தடுத்துக்கொண்டே, 'நம்மவர்' (நமர்) என்று சொல்லிக் கொண்டே விழுந்துவிட்டார். என்ன வீழ்ச்சி! என்ன மெய்ப்பொருள்!

உத்தம ராஜபக்தனான தத்தனுடைய மனநிலையைத்தான் என்னென்பது? மெய்ப்பொருளை வணங்கித் தாங்கிய வண்ணம்,

'யாதுநான் செய்கேன்?' என்ன,
'எம்பிரான் அடியார் போக
மீதிடை விலக்கா வண்ணம்
கொண்டுபோய் விடுநீ'
என்றார்.

'இந்தச் சிவபக்தருக்கு வழியிலே யாரும் இடையூறு செய்யாதபடி இவரை அழைத்துக் கொண்டுபோய் விட்டுவிடு' என்று பதில் வந்தது, இரத்தம் பெருகக் கிடந்த மெய்ப்பொருளின் மெல்லிய குரலில்.

ராஜபக்தியும் சிவபக்தியும்

தத்தன் தன் சொந்த உணர்ச்சிகளையெல்லாம் அடக்கிக்கொண்டு முத்தநாதனை அழைத்துப்போனான். அதற்குள் செய்தி தீயைப் போல் பரவிவிட்டது. வஞ்சகனைக் கொல்வோம் என்று மக்கள் கும்பலாக வந்து சூழ்ந்து கொண்டனர். அந்த உணர்ச்சி வெள்ளத்தோடு, தத்தனுடைய சொந்த உணர்ச்சிகளும் சேர்ந்து விட்டாலோ? வஞ்ச நெஞ்சம் எப்படிப் படபடத்துக் கொண்டிருக்க வேணும்!

ஆனால் அப்படி ஒன்றும் நடந்துவிடவில்லை. 'கொலைக்குக் கொலை' என்று ஜனசமுத்திரம் அலையலையாகவந்து சூழச் சூழ, மெய்ப்பொருள் நாயனாரின் கட்டளையைத் தலைமேல் தாங்கி வந்த

ஹிந்தியை எதிர்ப்பவர்:— நமது தாய் மொழியான தமிழை கொலை செஞ்சு, அன்னிய மொழியான இந்தியை நம்ப இளம் குளந்தைகளின் களுத்தில் கட்டருங்க, இந்த மந்திரிங்க. இந்த அக்கிரமத்தை ஒளிப்பதற்கு ஒரு வளி தேடியே ஆகணும். தமிழ் வாள்க! இந்தி ஒழிக!

வழிப்போக்கர்:— நீங்கன்னு என் கண்ணெதிரில் தமிழை சித்திரவதை செய்யுரிங்கய்யா!

வேலைக்காரன் அவர்களையெல்லாம் தடுக்கத்துணிந்தான். அரசரின் ஆணை தத்தன் வாயிலாக முழங்கியது. அந்த ராஜபக்தர்களெல்லாம் திகைத்துப்போயிருக்க வேண்டும். திடுக்கிட்டுப்போனார்கள் அந்த அருளைக் கண்டு!— என்கிறார் சேக்கிழார்.

தத்தன் முத்தநாதனை அழைத்துக்கொண்டு, வாளும் கையுமாக அவனுக்குப் 'பந்தோபஸ்து' செய்துகொண்டே ஊரைக் கடந்துபோய் ஆளில்லாத ஒரு காட்டு வழியில் விட்டு விட்டுத் திரும்பினான். ஆம், முத்தநாதனுடைய நாட்டுக்குப் போகும் வழியிலே அவனை க்ஷேமமாகச் சேர்த்துவிட்டான்.

சத்தியாக்கிரகம் சிவநெறியே

ஆணையை அப்படி நிறைவேற்றி வைத்த பின்புதான், அரசரைப் பார்க்க ஓடிவந்தான் தத்தன். அதுவரையில் அரசருக்கும் உயிர் இருந்தது. 'அந்தச் சிவ வேஷக்காரனை யாதொரு இடையூறும் இல்லாமல் கொண்டுபோய் விட்டேன்; கோபித்துத் தாக்க வந்த நமது ஜனங்களால் ஒரு சிறு காயம்கூட ஏற்படாமல் கொண்டு போய்ச் சேர்த்துவிட்டேன்! என்று சொன்னான்.

இந்தச்சொல்லைக் கேட்கத்தான் மெய்ப்பொருள் போய்க் கொண்டிருந்த உயிரையும் பிடித்துக் கொண்டிருந்தாராம், தமது சித்த சக்தியால். அந்தச் செயலுக்காகவும், அந்தச் சொல்லுக்காகவும் தத்தனைப் புகழ்ந்தார்.

அப்பால் தம்மைச் சூழ்ந்து நின்ற புதல்வர்களையும், மந்திரி முதலானவர்களையும் நோக்கி மெய்ப்பொருள் நாயனார், 'இந்த அன்பு-நெறிதான் சிவநெறி. இந்த நன்னெறியைப் பொன்போல் போற்ற வேண்டும், போற்றி வளர்க்க வேண்டும்' என்று என்று சொல்லிவிட்டு, நடராஜா வைத்தியானம் செய்துகொண்டே உயிரை விட்டார்.

* * * * *

'இவருடைய சரித்திரம், காந்தியடிகளின் வாழ்க்கையும் கொள்கைகளையும்—ஏன், காந்தி மரணத்தையும்கூட —எவ்வளவு தூரம் ஒத்துப்போகிறது!' என்பதைமட்டும் தமிழர்கள் சிந்தித்துப் பார்த்தால், சத்தியாக்கிரகம் என்ற தங்கப்பாலம் வெகு காலத்திற்கு முன்பே தமிழ் நாட்டில் உருவாகத் தொடங்கிவிட்டது என்பது தெரியவரும்.

—



டிப்போக்கள்:—மதுரை, கோயம்புத்தூர், கும்பகோணம், பம்பாய்.

ஸரஸ்வதி வீணை வைத்திருப்பதேன்?

பட்டு

ஸரஸ்வதிக்கு இரண்டு பணிப்பெண்கள் உண்டு. ஒருத்தி பெயர் விமலா. மற்றவள் பெயர் கமலா. ஸரஸ்வதி இரண்டு பணிப்பெண்களையும் பரிசோதிக்க எண்ணினுள். ஒருநாள் பணிப்பெண்களைக் கூப்பிட்டு 'பெண்களே, நீங்கள் இருவரும் பூலோகத்திற்குச் சென்று எனக்கொரு அழகான ஆபரணம்கொண்டு வரவேண்டும், யார் அழகான ஆபரணம் கொண்டு வருகிறீர்களோ, அவளை முழுமனதுடன் நேசிப்பேன்' என்று கூறினுள். விமலாவும், கமலாவும் பூலோகத்திற்குச் சென்றனர்.



விமலா ஒரு ஏழைக் குடியானவன் வீட்டிற்குச் சென்ருள். குடியானவன் வயலுக்குப் போகாமல் வீட்டில் சமைத்துக் கொண்டிருந்தான். குடியானவன் மனைவி படுக்கையில் படுத்துக் கொண்டிருந்தாள். குடியானவன் குழந்தைகள் அழுதுகொண்டிருந்தன. இக்காட்சியைக் கண்டாள் விமலா. அவள் மனம் குடியானவனுக்காக இரங்கிற்று. அவள் அவனுடன் சேர்ந்து ஒத்துழைத்தாள். குழந்தைகளை அழாமல் பார்த்துக் கொண்டாள். குடியானவன் மனைவிக்கும் உதவி செய்தாள்.

சில நாட்களுக்குப் பிறகு குடியானவன் மனைவி குணமடைந்தாள். விமலாவின் சேவைக்காக அவளிடமிருந்த பவழ மாலையை அவளுக்கு அன்புப்பரிசாக அளித்தாள். அப்பொழுதுதான் விமலாவுக்கு தான் வந்த காரியம் ஞாபகம் வந்தது. உடனே குடியானவனிடமும், அவன் மனைவியினிடமும் விடை பெற்றுக்கொண்டு பவழ மாலையுடன் ஸரஸ்வதியிடம் சென்ருள்.

கமலா ஒரு பணக்காரன் வீட்டிற்குச் சென்ருள். அங்கு சமையல்காரியாக வேலையில் அமர்ந்தாள். கமலா பொருமைக்காரி. பணக்காரன் வீட்டில் நகைப் பெட்டி இருக்குமிடத்தை அறிந்தாள். ஒரு நாள் இரவு ஒருவருக்கும் தெரியாமல் நகைப்பெட்டியை கள்ளச்சாவியால் திறந்தாள். அதிலுள்ள பொன் மாலை ஒன்றை எடுத்துக் கொண்டு ஸரஸ்வதியிடம் வந்தாள்.



ஸரஸ்வதி இருவர் கொண்டுவந்த ஆபரணங்களையும் பார்த்தாள். அவைகள் கிடைத்த விதத்தையும் கேட்டறிந்தாள். கமலாவை நோக்கி, "கமலா, நீ அடாத காரியம் செய்தாய், அதனுல் நீ பூலோகத்தில் விஷ ஜந்துவாகப் பிறப்பாய்" என்று கூறிச் சபித்தாள். விமலாவை நோக்கி, "விமலா, நீயே சிறந்தவள். ஏழையின் குடும்பத்தைக் காப்பற்றினுய். ஆகையால் நீ என் கையில் எப்பொழுதும் இருப்பாய்" என்று கூறினுள்.

தேவியின் வாக்குப்படி கமலா பூலோகத்தில் விஷ ஜந்துவாகத் தோன்றினுள். விமலா தேவியின் கையில் வீணையாகக் காட்சியளித்தாள்.

அன்றிலிருந்துதான் விஷ ஜந்துவான தேள் பூலோகத்தில் இருக்கிறது. வீணையும் வாணியின் கையை அலங்கரிக்கிறது.

சகோதர சகோதரிகளுக்கு சுதந்தரதின வாழ்த்துக்கள்.

சகோதரன்
ஹரி
"குலிஸ்தான்"
கார், பம்பாய் 21.



புதிய டில்லியில் சுதந்திர தின வைபவம் மிகப் பிரமாதமாகக் கொண்டாடப்பட்டது. செங்கோட்டையில் நேரு கொடி யேற்றிவைத்தார். செங்கோட்டையின் முன்பாக ஜனங்கள் கடல்போல் குழுமியிருந்த ஒப்பற்ற காட்சி.



சென்றவாரம் 14-ந்தேதி டில்லியில் நடந்த ஜமயத்-உல்-உலேமாக் கூட்டத்தில் மௌலானா ஆஸாத் பேசியபோது எடுத்த படம்.

சென்னை ஹாலிவுட் கிளப் தலைவர் சி. வாஸுதேவனுக்கும் (தஞ்சாவூர் லேட் வக்கீல் ஸ்ரீ டி. வரதாச்சாரியார் குமாரர்) நாகப்பட்டினம் வக்கீல் ஸ்ரீ ஆர். கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் பெண் ஸௌ. கமலாவுக்கும் சமீபத்தில் விவாகம் நடந்தேறியது.

ஸ்தாபிதம் 1924

பிரபல ஜோதிஷர்

மஹா ராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசு பெற்றவர். மாதவாரி ஒரு வருஷ பலன் எழுத ரூ. 5. ஷை பலனை வாரா வாரம் விவரமாக எழுத ரூ. 10. ஆருடம் 3 கேள்விகளுக்கு ரூ. 2. மேல் கேள்வி 1-க்கு அணு 8. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை. ஜ்யோதிஷ ஞான போதினி. ஜாதக யோகங்கள் என்னும் புத்தகம் விலை ரூ. 2—8—0. வி. பி. சார்ஜ் பிரத்யேகம்.

பண்டித காழியூர் ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார்,
"தபோநிதி" தியாகராயநகர், மதராஸ் 17.

☞ வாசனை எண்ணெய்கள் நீங்களே தயாரித்து பணத்தை மீதி செய்யலாம்.

கீழ்க்கண்ட ஏதாவது ஒரு ரக மோகினி எஸன்ஸை 16 அவுன்ஸ் நல்லெண்ணெய் அல்லது தேங்காய் எண்ணெய் அல்லது விளக்கெண்ணெய், கடலை எண்ணெயில் கலந்தால் உங்களுக்குச் சிறந்த வாசனை எண்ணெயாகும், விலைகளோ மிகவும் குறைவு.

சுத்தமான மோஹினி எஸன்ஸுகளின் பெயர்களும் விலைகளும்

சாம்பாக்	ரூ. 2-0	கதம்பம்	ரூ. 1-8	ஹீனு	ரூ. 1-8	மோத்தியா	ரூ. 1-0
காஷ	,, 2-0	மல்லிகை	,, 1-8	லில்லி	,, 1-0	ஸ்விட்	,, 1-0
கேவ்டா	,, 2-0	ரோஸ்	,, 1-8	தாமரை	,, 1-0	மோதியா	,, 1-0
மஷக்	,, 2-0	போகுல்	,, 1-8	கோலோன்	,, 1-0	ஐடியல்	,, 1-0

அரை அவுன்ஸ் பாட்டில்களாகக்கிடைக்கும். பாக்கிங், தபால் சார்ஜ வி.பி. செலவு வேறு. இலவசமாக காட்லாக் அனுப்பப்படும். கடிதங்களை ஆங்கிலத்தில் எழுதவும்,

S. PAUL & Co., (S. W.) 4, Hospital St., Dharamtala, **Calcutta 13.**



சகல விதமான பட்டு & நூல் ஜவுளிகளுக்கு
கைராசியும் நம்பிக்கையுமுள்ள
புதிய ஜவுளிக்கடை



ராம்ராஜ்யா ஹால்

N.R. ராமசந்திர செட்டி & கோ. கடைவீதி... சேலம்

முத்து கழுத்து சங்கிலி:

இமிடேஷன் ஜுவல்கள் (வைரம், பச்சை, சிகப்பு அல்லது நீலம்) பதித்த ஸ்திரீகளுக்கான சிறந்த கழுத்து சங்கிலி. க்ரீம் டிண்டுகளுடன் முத்துக்களும் உண்டு. நிரந்தர கலர். லாக்கெட்டுடன் முழுசைஸ் ரூ. 3-10. இமிடேஷன் ஜுவல் பதித்த தங்க மோதிரம் மேல்கண்ட ஜுவல்களுடன் டஜன் ரூ. 5-8. ஜுவல் இல்லாது பூ வேலைகளுடன் டஜன் ரூ. 4-8. ஒருடஜன் எந்தவித மோதிரம் வாங்கினாலும் மேற்கண்ட கழுத்து சங்கிலி இனாம். எல்லாவற்றிற்கும் தபால், செலவு இலவசம். கடிதங்களை ஆங்கிலத்தில் எழுத கோருகிறோம்.

★

HENA AGENCY,
No. 14, Dr. Jagabandhu Lane,
Bowbazar P. O., Calcutta. (M/S.W.)

Quality always tells!

hence BUY **L.G**
ASAFOETIDA



எல். ஜி
பெருங்காயமே
உயர்ந்தது

ஜாதகம் ! ஆரூடம் !!

இன்றே எழுதுங்கள். பிறந்த தேதி, நேரம் அல்லது ஜாதக நகல் தேவை. ஜாதகம் இல்லாதவர் கடிதம் எழுதும் நேரம் குறிக்கவும்.

கட்டண விவரம்:- 1 முதல் 3 உமது எதிர்கால கேள்விகட்கு ரூ. 2. 3-க்கு மேல் கேள்வி 1-க்கு அணா 8. ஒரு வருட பலன் 8 பிரிவுகளில் எழுத ரூ. 5. ஆயுள் பூராவுக்கும் பலன் சுருக்கமாக எழுத ரூ. 35.

குறிப்பு:—வெளிநாட்டுக்கு இரட்டிப்புக் கட்டணம்.

Lt. Col. M. N. C. ஸர்ஜன் ஜெனரல் மதராஸ் கூறுவதைக் கவனியுங்கள்:-தாங்கள் அனுப்பிய ஜாதக பலன் வியக்கத்தக்கது. எனக்குத்திடீரென்று ரூ. 35,000 கிடைக்கும் என்று தாங்கள் கூறியபடியே எதிர்பாராமல் எனக்கு ரூ. 35,000 கிடைத்தது.

'மானேஜர், வீனஸ் அஸ்டிரோலாஜிகல் ப்யூரோ,
தெப்பக்குளம் P. O. (தென் இந்தியா)

குஷ்டத்திற்கு மருந்து இல்லையா ?

இதோ லக்ஷ்மி பிரசாதம்

(லெப்பர் கியூர்)

18 குஷ்டங்களையும் வெண் குஷ்டம், செவ்வாய் மேகம், வெள்ளை, வெட்டை நிவாரணத்திற்கு எல்லாம் சாப்பிடக்கூடிய அமுர்தம்

40 நாட்களில் குணம்

தலைமை ஆபீஸ் :	*லக்ஷிமி & கோ.,*
வால்டேர், ஆர். எஸ்.	*2/135, பிராட்வே, மதராஸ்.*

வாரியர்

பிருங்காமலகாதி

தைலம்

குளிர்ச்சிமிக்க ஸ்நான தைலம். கறுப்பான காந்தி மிக்க கூந்தல் தாராளமாக வளரச் செய்யும். அரிப்பு, பொடுகு, தலைவலி, அதி உஷ்ணம், நித்திரையின்மை, கண் எரிச்சல், அதிகப்படிப்பினாலோ வேலையினாலோ ஏற்படும் மந்தம், ஞாபக மறதி, மூளைக்கொதிப்பு முதலியவைகளில் மிகவும் உபயோகமானது.

16 அவுன்ஸ் புட்டி ரூ. 4.

(பாக்கிங், தபால் செலவு வேறு.)

ஆர்ய வைத்தியர்

கே. எஸ். வாரியரின்

அஷ்டாங்க ஆயுர்வேதசாலா

தெப்பக்குளம், திருச்சி.

(ஸ்தாபிதம் : 1936.)

45-வருஷமாக புகழும் நற்சாட்சிகளும் பெற்றுவரும் மருந்துகள்

தங்க பஸ்பம்

ஒரே வேளையில் உங்களை பிரமிக்கச் செய்யும். இது ஒரு வரப் பிரசாதமான மருந்து தேகபலமும் வாழ்வில் சந்துஷ்டியும் அளித்து, ஊக்கத்தையும் உற்சாகத்தையும் தந்து, நரம்புகளை வலுவாக்கி, வயோதிகனும் வாலிபனுடைய வலிமை பெற செய்கிறது. அனுபானம் பெரிய காமகேசரி லேகியத்துடன்

50 வேளை ரூ. 25.

வைத்தியபதி ***R. M.*** *நாராயணசாமி பிள்ளை,*

தன்வந்திரி வைத்தியசாலை, பழனி (S. I.)



501 ஸோப்பால்

வெளுக்கப்பட்டது

தி டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி, லிமிடெட்.

பாலகங்காதர திலக்	*0*	*8*	*0*
ஸ்வராஜ்யம்	*0*	*8*	*0*
சங்கராச்சாரியார்	*0*	*5*	*0*
ஸ்ரீராம ஜனனம்	*0*	*4*	*0*

தபால் செலவு பிரத்தியேகம்.

" சுதேசமித்திரன் " புத்தகசாலை
மவுண்ட்ரோட், மதராஸ்.

பாத்ருடுவின் "பால சஞ்சீவினி"

(Regd)

குழந்தைகளின் ஈரல், குலை, ஜுரக்கட்டி வியாதிகளை சொற்ப காலத்தில் நிச்சயம் குணமளிக்கும் சிறந்த மருந்து இது ஒன்றுதான். அசல் விஜயநகரம் மருந்து. போலிகளைக்கண்டு ஏமாறுதீர்கள்.

Dr பிள்ளா பாப்பய்யா பாத்ருடு & பிரதர்,
11, தெற்கு மாட வீதி, மயிலாப்பூர்.

கும்பகோணம் கிளை:—	*திருச்சி கிளை:—*
7, சாரங்கபாணி கோவில் கீழவீதி	15, புகழிய பிள்ளை தெரு, தெப்பக்குளம் போஸ்டு.



(பான்ஸ் கோல்டு)

பெண்களுக்கு சந்தோஷத்தை அளிக்கும் இந்த நகைகளைப் பிரதிதினமும் உபயோகித்தாலும் நிறம் மாறாது. பார்ப்பவர்கள் அசல் தங்கஆபரணங்கள் என்றே எண்ணுவார்கள். கியாரண்டி உள்ளவை. 4 ஆபரணங்கள் உள்ள வெல்வெட் பெட்டியுடன் போட்டியின் பயனை ரூ. 5-12-0க்கு அனுப்பப்படும். நகைகளின் விபரம்:- (1) நெக்லஸ் செயின் (2) இரு ஜதை வளையல் (3) லோலக் ஒரு ஜதை (4) ரேடியோ கட்டிங் மோதிரம் ஒன்று. (பேபி செயின் ஒன்று இனாம்.)

அமேஜான் டிரேடிங் கம்பெனி,
1/6 சாம்பய்யர் தெரு
சௌகார்பேட்டை, மதராஸ்.



A. V. S. டாப்பியோக்கா கிழங்கு மாவுகள் சுத்தமாயும், சுகாதார முறைப்படியும் நீண்டநாள் அனுபவத்தில் தயாரிக்கப்பட்டவை. அவைகள் கலப்பில்லாதவையென்பதற்கு அத்தாக்ஷி மைக்ருஸ்கோப் என்னும் கண்ணாடி மூலம் பரீக்ஷை செய்து நாணயமான டாப்பியோக்கா மாவு என்று ஸர்ட்டிபிகேட் பெற்றிருக்கிறோம். போண்டா, பஜ்ஜி, முறுக்கு, ஓமப்பொடி, சர்க்கரை சேவு, தோசை, ஹல்வா, மைசூர் பாக்கு, பால்கோவா, பிஸ்கட், கேக், உப்பிட்டு சேமியா, ஜவ்வரிசி, மிட்டாய் தினுசுகளும் இன்னும் வேண்டிய தின்பண்டங்களும், பலகாரங்களும் தயாரிக்கலாம்.

எங்களிடம் முதல்தரமான ஜவ்வரிசி ஈரோடு, சேலம் மஞ்சள் ரகங்கள், நெ. 1. மஞ்சள் தூள், கடலை எண்ணெய், சுருட்டுக்கும், பீடிக்கும் வேண்டிய உயர்தரமான புகையிலை ரகங்கள் மொத்தமாகவும், சில்லரையாகவும் கிடைக்கும். 4 அந்தர் எடைபோடக்கூடிய பைபீல்ட் வேயின் மெஷின் தராசும் சப்ளை செய்கிறோம். தராசின் கேட்லாக் வேண்டுவோர் எழுதவும்.

மற்ற விவரங்களுக்கும், சாம்பிளுக்கும் எழுதவும்.

A. V. சுப்ரமணியம்,

A. V. S. டாப்பியோக்கா பிளவர் மில்ஸ், அண்டு மஞ்சள் எண்ணெய் சப்ளையர்கள், புகையிலை ஹோல் சேல் லைசென்ஸ்தாரர்கள் ஈரோடு. (S. I. R.) தந்தி: INSAF.

ஸ்ரீமத் பகவத்கீதை — விலை ரூ. 3—8—0 (தபால் செலவு பிரத்யேகம்)

விநோத கதா மஞ்சரி — விலை ரூ. 1—0—0 (தபால் செலவு பிரத்யேகம்)

மானேஜர்: "சுதேசமித்திரன்" புத்தகசாலை,
விக்டரி ஹவுஸ் மவுண்ட்ரோட், சென்னை.

தசை வலிகளுக்கு

உலகப் புகழ்பெற்ற
ஜாம்பெக் நிவாரணமளிக்கும்

ஜாம்-பெக் மிருதுவாக தேய்த்தால் சீக்கிர நிவாரணமேற்படும். இவ்வற்புத மூலிகை மெழுகிலுள்ள மருந்து எண்ணெய்கள் சருமத்தினுள் புகுந்து களைப்புற்ற தசைகளுக்கும் கீல் பிடிப்புகளுக்கும் சமனமூட்டி குணமளிக்கும் பிராணிகள் கொழுப்பு இல்லாததற்கு உத்தரவாதம்.

எப்பொழுதும் உபயோகியுங்கள்.

Zam-Buk

சமனமூட்டி நிவாரணமளிக்கும்
கிருமிநாச மருந்து

சரும நோய்கள், காயங்கள் பூச்சிகடிகள், புண்ணாகி வலிக்கும் கால்கள், தசை வலி, தேகக் குளிர்ச்சி இவற்றிற்கு சிறந்தது.

ஏஜண்டுகள் மெஸர்ஸ் தாதா & கம்பெனி, பி. டி. மதராஸ்.

சக்தி ஆரூடம்!

ரேடியோ புகழ் ஸ்ரீமதி திருக்கோவிலூர் S. அலமேலு எழுதுகிறார்:—

"தாங்கள் எனக்கு மே மீ 27-ந் தேதியிலிருந்து ஜூன் மீ 3-ந் தேதிக்குள் ரூ. 1000 கிடைக்குமென்று கூறியபடியே ரூ. 1000 கிடைத்தது."

1 முதல் 3 கேள்விகள் ரூ. 1. மேல் கேள்வி 1-க்கு அணா 8.
1 வருட பலன் ரூ. 5. ஜாதகம் கணிக்க ரூ. 2.
சக்தி கவசம் ரூ. 7-8-0. வி.பி.பி. தனி. ஜாதகம் or கடிதம் எழுதும் நேரம் தேவை. N. B. வெளிநாட்டிற்கு முன் பணம் தேவை.

சக்தி ஹோம், விருத்தாசலம், P. O. (S. I)

சுதா மோகன ரஞ்சிதம்

3-பாகங்கள் விலை ரூ. 2-8-0

தபால் செலவு பிரத்யேகம்

மானேஜர்: "சுதேசமித்திரன்" புத்தகசாலை, மவுண்ட்ரோட், சென்னை

தலையில்

தலைமயிர் தெரிகிறதா அல்லது அடித்தலை தெரிகிறதா அடித்தலை புலப்படும் பக்ஷத்தில், உதிர்ந்த கேசராசிகளுக்குப் பதில் புதுக்கூந்தல் முளைக்கவில்லை என்பது நிச்சயம். அச்சமயம் கேசவர்த்தினியைக் கொண்டு பரிஹரிக்காமல், பாதி வழுக்கையைப் பூரண வழுக்கையாக விடுவானேன்? வழுக்கையால் ஏற்படும் கிழத் தோற்றத்தையும் அனுபவிப்பானேன்?

உதிர்ந்த இலைகள் மறுபடி முளைத்துவிடும். ஆனால் சில சமயங்களில் உதிர்ந்த கூந்தல் சிகிச்சையில்லாமல் முளைப்பதில்லை. அச்சமயங்களில் கேசவர்த்தினியை உபயோகித்து மயிர் உதிர்வதை நிறுத்தி இளங்கூந்தலையும், இளமையையும் ஒருங்கே பெறுங்கள்.

கேசவர்த்தினி

கூந்தலைக் காப்பது; விருத்தி செய்வது; அழகுபடுத்துவது விலை அணா 14. தபால் செலவு தனி. எல்லா கடைகளிலும் கிடைக்கும்.

தயாரிப்பவர்:
தென் இந்திய ரஸாயன் சாலை,
"ஆச்ரமம்", க்ராஸ்கட் ரோட்,
பவர் ஹவுஸிற்கு அடுத்தது
கோயமுத்தூர்.



தேகப்பயிற்சி செய்வோருக்கு மிக அவசியமான சக்தியை அம்ருதா அளிக்கிறது. இந்த ரத்த சுத்தி திராவகம் இளைஞர்கள், முதியவர்கள், குழந்தைகள் அனைவருக்கும் இன்றியமையாதது. வாய்க்கு மிக இனிப்பானது, குணத்தில் சிறந்தது. அரிய மூலிகைகள், பழச் சத்துக்களைக்கொண்டு உயர்ந்த வைத்திய முறைப்படி தயாரிக்கப்பட்டு வரும் இந்த ஜீவ சக்தி திராவகம் யாவருக்கும் இணையற்ற நண்பன்.

கேஸரி குடீரம் லிமிடெட் மதராஸ்

மலபார், கோச்சி, திருவாங்கூர் தென் கன்னடத்துக்கு

ஏஜண்டுகள்:

கொச்சி மெடிகல் ஸ்டோர்ஸ்

மட்டஞ்சேரி (கொச்சி)

டெலிபோன்: 2246, தந்தி: கிளாவர் பீடி

லேட் கான்சாகிப் எம். முஹமது உமர்சாகிபுவின்குமாரரான முஹமத் நூருல்லா என்று பெயர்கொண்ட நான் இவ்வியாபாரத்தை மிகவும் அபிவிருத்தி செய்துள்ளேன். மிகச் சிறந்த புகையிலையையும், உயர்தரமான சரக்குகளையும் உபயோகித்தே

ஸ்பேட் கிளாவர் பீடிகள்

தயாரிக்கப்படுகின்றன. இந்த பீடிகளின் ரகமும், மணமும் குணமும் என் தகப்பனார்காலத்திலிருந்ததைப் போன்றேசிறப்பாகவிளங்குகின்றது.

முகம்மது நூருல்லா
ஸோல் புரொப்ரைட்டர்,
ஸ்பேட் கிளாவர் & ஆர்டின் பீடிகள்
37, மண்ணடி, மதராஸ்.

முக்கிய அறிவிப்பு

மந்தார விடு இலை,
தையல் இலை

சகாயமான விலைக்கு மொத்தமாகவும், சில்லரையாகவும் எங்களிடம் கிடைக்கும்.

S.மாணிக்கம்செட்டி கோ.,
6—7, ஆதியப்ப நாயக்கன் தெரு
மதராஸ் 1.

ஏஜண்டு இல்லாத இடங்களுக்கு ஏஜண்டுகள் தேவை.

கூடிய சீக்கிரம் எதிர்பாருங்கள்
மாணிக்கபஸ்பம் சிவபுரிபுகையிலை
மீனம்பாளையம் ரோஸ் புகையிலை
வாசனை பட்டை புகையிலை
வெளிவந்து விட்டது!
வாசனை பாக்குத்தூள்
காலணவுக்கு இரண்டு.
சென்னைக்கு
சில்லரை விற்பனையாளர் தேவை.
வெளியூர்களுக்கு ஏஜண்டு தேவை,
தயாரிப்பவர்:
மாணிக்க விலாஸ்
11 பீட், மதராஸ் 1.

உங்கள் எதிர்காலம்



பணமில்லாமை, தொழிலில் மாறுதல், காதல், கலியாணம், குடும்பம் பிரயாணம், எதிர்பாராத லாபநஷ்டம், படிப்பு, ஆரோக்கியம், அதிருஷ்டநாள், எண், நிறம் மற்றும் எதிர்காலத்தில் உங்களுக்கு ஏற்படக்கூடிய பலன்கள் எழுதி அனுப்பப்படும். ஜாதக நகல் அல்லது முழுப்பெயர், சுமார் வயது, செய்யும் தொழில் கடிதம் எழுதும் நேரம் குறிப்பிடவும். ஒன்று முதல் 5 கேள்விகளுக்கு பதிலளிக்க ரூ. 2. மேல் ஒவ்வொரு கேள்விக்கும் அணா 8. ஒரு வருஷத்திற்கு மாதவாரி பலன் எழுத ரூ 6. வாரப் பலனுக்கு ரூ 20. ஜாதகக் குறிப்பும் சுருக்கமான பொதுப்பலனும் எழுதி அனுப்ப ரூ 5. தபால் செலவு தனி.

வி. கே. கிருஷ்ணமாச்சாரியார்,
Astrologer & Journalist, MADRAS 5.

ஆனந்த குஸுமாகர லேகியம்

துர்ப்பழக்கத்தால் சரீரம் மெலிந்து அங்கங்கள் உலர்ந்து, கைகால்கள் அயர்ந்து கண் பார்வை குன்றி கஷ்டப்படும் அன்பர்களே!

இந்த லேகியத்தை முறையே ஒரு மண்டலம் சாப்பிட்டு வருவீர்களாயின் மூத்திர சம்பந்தமான சகல வியாதிகளும் நீரில் சர்க்கரை இருத்தல் உஷ்ண சம்பந்தமான சகல வியாதிகளும், நரம்புத்தளர்ச்சி, பசியில்லாதிருத்தல், மலச்சிக்கல், ஞாபககுறைவு, பித்தம், காசம், க்ஷயம் போன்ற எல்லா வியாதிகளையும் கண்டித்து சரீர புஷ்டியும் உற்சாகமும் தரக்கூடிய சிறந்த ஔஷதம். பெண்களும் அருந்தக்கூடியது. பத்தியமில்லை. 20 நாட்கள் உபயோகிக்கும் டின் வில் ரூ. 2—8—0

வி. பி. பார்சலில் தேவையுள்ளோர் தபால் சிலவு அணா 14 முன் பணம் அனுப்பி பெற்றுக்கொள்ளலாம். விபரமான காட்லாக் இனாம்.

மலையாள மெடிகல் ஹால்

H. O. TRIVANDRUM
189 வக்கீல் புதுதெரு- P. B. No 27, மதுரை.

கிளை ஸ்தாபனங்கள்:— 207 நாகேஸ்வரர் வடக்கு வீதி, கும்பகோணம் 20 கோவிந்தப்பநாயக்கன் தெரு, சென்னை. G. T. 58 E தர்மராஜா கோவில் தெரு, பெங்களூர். 179 SEA ST., COLOMBO.

S.A.H. TRADE MARK

Rgd. No. 2221.

28 வருஷமாய் தென்னாடு முழுவதும் பிரசித்தி பெற்று வரும்

சேலம் மூன்று தாமரை பீடிகளை

உபயோகித்து சந்தோஷமடையுங்கள்.

Prop: S. அஹமத் உசேன், கோட்டை, சேலம் - *S.I.R.*

வைத்தியரத்ன யு. ராமநாத சாஸ்திரிகளின்

ஸித்தமகரத்வஜம்

(தங்கம் சேர்ந்தது.)

அங்கங்களையும் நரம்புகளையும் பலப்படுத்தும். திடசாலியாயும் யௌவனனாயும் இருக்கலாம். 30 மாத்திரை சீசா 1-க்கு ரூ. 7.

மஹாபில்வாதி லேகியம்

பித்தம் அஜீரணம், மலபந்தம் முதலிய வயிற்று கோளாறுகளை உடனே கண்டித்துவிடும். ஒரு சேர் டப்பி 1-க்கு ரூ. 4.

ஸ்ரீ தன்வந்திரி கவசம்

வியாதி, மனோவிசாரம், தரித்திரம், இவைகளை விலக்கி உத்தியோக வியாபார லாபங்கள், காரிய ஸித்தி, ஜனவசியம் இவைகளை அளிப்பதில் அபாரமான சக்தி உள்ளது. இதில் வசீகரண மூலிகை பிரதிஸரஸூத்ரம், ஸ்ரீதன்வந்தரீ யந்திரம், இவைகளை மந்திர பூர்வமாய் ஸ்தாபிக்கப்பட்டு இருக்கிறது. கவசம் 1-க்கு ரூ. 3.

ஆனந்த படை நிவாரணி

எல்லாவிதமான படைகளையும் திரும்பி வராமல் இருக்கும்படி ஒரே வேளையில் போக்கிவிடும். டப்பி 1-க்கு ரூ. 1.

ஆனந்த பற்பொடி

(40 வருஷங்களாக புகழ்பெற்றது.)

சென்னை ஹைகோர்ட்டில் உரிமை பெற்றது. இந்தியாவில் இது ஒன்றுதான் சிறந்தது. எங்கும் கிடைக்கும். கேட்லாக் இனாம்.

ஸகலத்துக்கும் வி. பி. பிரத்யேகம்.

வைத்திய ஸித்தாச்ரமம்
பஜார் ரோட், மைலாப்பூர், மதராஸ்

"பீம-வீர்" பூர்வகால ஆயுர்வேத முறைப்படி மூலிகை சத்துக்களாலும், பஸ்பங்களாலும் தயாரிக்கப்பட்டது. ரத்தத்தை சுத்திசெய்து, சாஸ்வதமான யௌவனத்தையும், ஞாபக சக்தியையும் உண்டாக்கி, தேக புஷ்டியையும், வலுவையும் கொடுப்பதில் நிகரற்ற அவுஷதம். 40-நாள் மருந்து ரூ. 3-12-0.

பாக்கிங்கு, தபால்சார்ஜ் இடையாது.

ஜமதக்னி ஔஷதாலயா,
26, வடக்குமாடவீதி, மயிலாப்பூர், சென்னை

Printed and Published by S. Chakrapani Iyengar at the "Swadesamitran" Press, Victory House, Mount Road, Madras. Editor: C. R. Srinivasan, B. A.

Regd. No 2514.

உடனடியான சேவை!

K V. ஈஸ்வர ஐயர்,
அஸிஸ்டண்ட் அக்கவுன்ட்ஸ் ஆபீஸர்,
மத்திய மாகாணம் & பீரார்.
நாகபுரி.

நகைகள் சரியாக சமயத்திற்கு கொடுக்கப் பட்டதுமல்லாமல் நாகரீக முறையில் உன்னதமாக தயாரிக்கப்பட்டுள்ளன. தாங்கள் அனுப்பிவைத்த மூன்று நகைகளைக்கண்டு அது சம்பந்தப்பட்டவர்கள் மிகவும் திருப்தியடைந்துள்ளார்கள். தங்களது திறமைவாய்ந்த நிபுணர்களால் தயாரிக்கப்பட்டு திருப்திகரமாக நிறைவேறிய வியாபாரத்தைக்கண்டு நான் சந்தோஷப்படுகிறேன். இதற்குமேல் எதைத் தான் கடைக்காரர் அல்லது வாடிக்கைக்காரர் விரும்பமுடியும்?

(ஒப்) *K. V* ஈஸ்வர ஐயர்.

கண்யமான வியாபாரம்!

ஸூரஜ்மல்ஸ்

நம்பிக்கையான வியாபாரிகள்
1895ளு முதல்

313, நேதாஜி ரோட்,
மதராஸ்.